www.padippakam.com

புதிய பூமி
පුදිය පුමි
Puthiya Poomi REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA.
று 08 செப்டெம்பர்/ஒக்டோபர் 2001 பக்கம் 12 விலை 10/= சுழற்சி 42

# அரசாங்க – ஜே.வி.பி. கூட்டினால் அழிவுப்பாதையில் இருந்து நாட்டை மீட்க முடியுமா?

துஜன ஐக்கிய முன்னணி சாங்கம் ஜே.வி.பி.யின் தயவினால் ப் பிழைத்திருக்கிறது. வீழ்ச்சியின் ம்பிற்கு வந்த நிலையில் ஜே.வி.பியுட ன இருபத்தியெட்டு அம்சங்களை ளடக்கிய புரிந்துணர்வு ஒப்பந்தம் ந்த செப்டம்பர் 5ம் திகதியில் இருந்து வருடகாலத்திற்கு செல்லுபடியான க இருக்கும் எனத் தெரிவிக்கப் றுள்ளது.

கே எழுந்து நிற்கும் பிரதான கேள்வி தெனில் இத்தகைய புரிந்துணர்வு ந்தத்தால் அழிவுப்பாதையில் சென்று ாண்டிருக்கும் நாட்டை அதிலிருந்து பாற்ற முடியுமா என்பதேயாகும்.

ந்துணர்வு ஒப்பந்தத்தில் காணப்படும் சங்கள் வெறும் மேலோட்டமானவை கும். பிரச்சினைகளின் தாக்கங் ளையும் அவற்றின் வேகங்களையும் த்து நிறுத்தும் ஆற்றல் இவ் பந்தத்திற்கு கிடையாது. இன்றைய ருளாதார அரசியல் சமூக கலாச்சார ழிவுகள் சீர்குலைவுகள் உச்சநிலை க் கண்டு நிற்கின்றன. அவற்றுக்கு ப்படைக் காரணமாக அமைந் ருப்பது தொடரும் கொடிய யுத்தமும் ன் தேசிய இனப்பிரச்சினையுமாகும்.

ந்தகைய யுத்தத்தை தொடர்ந்து த்துவதை ஒப்பந்தம் ஏற்றுக்கொண்டி ங்கிறது. ஆயுதங்களையும் யுத்த ாபாடங்களையும் வெளி நாடுகளில் நந்து இறக்குமதியாக்கும் போது ழலற்ற முறையில் நடந்துகொள் வதற்கு சபை ஒன்று நியமிக்கப்பட வேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது. அதன் அர்த்தம் யுத்தம் எக்காரணம் கொண்டும் நிறுத்தப்படலாகாது என்பதேயாகும்.

அத்துடன் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு எத்தகைய முயற்சியும் இக்காலப் பிரிவுக்குள் எடுக்கப்படகூடாது என்பதையும் ஒப்பந்தம் வற்புறுத்திக் கொள்கிறது. எல்லோரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வு எட்டப்படும் வரை இவ் ஒருவருட காலத்தில் வேறு எவ்வித முயற்சியும் இனப்பிரச்சினை சார்பாக முன்னெடுப்பதை ஒப்பந்தம் தடுத்து நிறுத்துகின்றது. இதன் மூலம் அரசாங்கமும் ஜே.வி.பியும் தமது பேரினவாத நிலைப்பாட்டை உறுதிப்படுத்தியுள்ளன.

நாட்டின் சகல வகையான பிரச்சினைகளுக்கும் பிரதான ஊற்று மூலமாக இருந்து வரும் யுத்தத்திற்கும் அதற்குக் காரணமான தேசிய இனப்பிரச்சினைக்கும் ஒப்பந்தத்தால் நாட்டின் அழிவுப் பாதைப் பயணத்தைத் தடுத்து நிறுத்த முடியாது என்பது உறுதியான உண்மையாகும்.

அதேவேளை மேற்படி ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் அரசாங்க - ஜே.வி.பி.யின் உள் நோக்கங்களை நிறைவேற்றுவதற் குரியவைகளேயாகும். அரசாங்கம் பாராளுமன்றத்தில் தோல்வி கண்டு அதிகாரத்தை இழக்க விரும்பவில்லை. அப்படி ஒரு நிலையின் ஊடாக மக்கள் முன் சென்று வாக்கு



கேட்டு வெற்றி பெற முடியாது என்பது அரசாங்க கொள்கை வகுப்பாளர்களின் நிலைப்பாடாகும். எப்படியும் எந்தவிலை கொடுத்தும் அதிகாரத்தைத் தக்க வைத்துக் கொள்வதே சந்திரிகா அம்மையாரின் குறிக்கோளாகும். அதற்காக தனது அமைச்சர்களைப் பலி கொடுக்கவும் தயங்கவில்லை. எத்தகைய பிசாசுடனும் கூட்டுச் சேர்ந்தும் அதிகார த்தில் பொதுசன முன்னணியை வைத்தி ருக்க விரும்பினார். அதன் விளைவாக வேவன்மத்துடன் எதிர்த்து வந்த ஜே.வி.பியுடன் இணைந்து கொண்டமையாகும்.

ஆட்சி அதிகாரத்தில் இருந்து கொண்டு சொத்து சுகபோகங்களை அனுபவித்துக்கொள்ளும் ஆளும் வர்க்க சக்திகள் எப்பாடுபட்டாவது தமது அதிகாரத்தை தக்க வைப்பதையே குறிக்கோ ளாக்க கொண்டிருக்கும் என்பதற்கு பொதுசன முன்னணி அரசாங்கமும் சிறந்த உதாரணமாகும். நாடு மக்கள் எக்கேடு கெட்டாலும் இவ் ஆளும் வர்க்க சக்திகளுக்கு அக் கறை கிடையாது. அவர் களது குறிக்கோள் யாவும் அதிகாரச் சுவைப் பேயாகும். புரிந்து ணர்வு ஒப்பந்தம் இதனையே எடுத்துக் கரட்டுகின்றது.


அதே வேளை ஜே.வி.பியின் உள்நோக்கம் தமது அடுத்த குறிக்கோளான இருபத் தைந்து பாராளுமன்ற ஆசனங்களை வென்றெடுப்பதேயாகும். அதற்குரிய வாக்கு வங்கியை வளப் படுத்திக் கொள் வதற்கு இப்புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் ஒரு வருட காலத்தைப் பயன்படுத்திக் கொள்வதாகும். அரசாங் கத்தினுள் வந்து கொள்ளாமலும் பதவிகளைப் பெற்றுக்கொள்ளாமலும் ஜே.வி.பி. நகர்த்திய பாராளுமன்றத் தந்தி ரோபா யம் தனக்குப் பயன் அளிக்கும் என்றே அக் கட்சி நம்பிச் செயல்படு கின்றது.

ஆனால் அரசாங்க ஜே.வி.பி. புரிந்துணர்வு ஒப்பந்தத்தை ஒரு பலமான இணைப்புக் கயிறு என்று கூறமுடியாது. அது ஒரு வருடத்திற்குத் தாக்குப் பிடிக்க மாட்டாது. ஒப்பந்தம் கைச்சாத்திடப் பட்டுள்ளதே தவிர அதில் இரு பகுதியினருக்கும் புரிந்துணர்வு இருக்கப் போவதில்லை என்பதைக் காணமுடிகின்றது. ஏனெனில் இருதரப்பினரின் உள்நோக்கங்கள் வெவ்வேறானவையாகும்.

யாவற்றுக்கும் அப்பால் நாடு எதிர் நோக்கி நிற்கும் பிரதான அபாயம் எது என்பதைப் புரிந்து கொண்டு அதற்குரிய அணுகுமுறையையும் தீர்வையும் உற்புகுத்திக் கொள்ளாத புரிந்துணர்வு ஒப்பந்தம் வெறும் கடதாசியாக இருக்க முடியும். தமது அதிகாரத்திற்கு குந்தகம் இல்லாத சிலவற்றை அரசாங்கம் நடைமுறைப்படுத்தலாம். அவ்வாறு தமது வாக்கு வங்கிக்குத் தேவையான வற்றை நடைமுறைப்படுத்துமாறு வற்புறுத்திக் கொள்வதில் ஜே.வி.பி வெற்றியடையலாம்.

ஆனால் அடிப்படைப் பிரச்சினைகளைத் தட்டிக் கழித்துவிட்டு எவ்வாறு நாட்டை அழிவிலிருந்து காப்பாற்ற முடியும். பாராளுமன்ற அதிகார மோகமும் ஆளும் வர்க்க நலன்களும் முதன்மைப்படுத்தப் படும் வரை இந்நாட்டிற்கு விமோசனம் இருக்க முடியாது. ஜே.வி.பி தனது சிகப்பு இனவாதத்தை முன்னெடுத்து பாராளுமன்ற சித்து விளையாட்டில் இறங்கி நிற்கிறது. அதன் வழிதவறிய அரசியல் பயணத்திற்கு இப்புரிந்துணர்வு ஒப்பந்தம் தகுந்ததோர் சாட்சியமாகும்.

# அமெரிக்க ஏகாதிபத்திய வெறிக்கு கிடைத்த அடி தேவை!



அமெரிக்காவில் நடத்தப்பட்ட விமான ற்கொலை தாக்குதலால் பல்லாயிரக் ணக்கான மக்கள் கொல்லப்பட்ட டன் உலகமயமாதல் என்ற பேரில் லகமக்களிடமிருந்தும். உலக ாடுகளிடமிருந்தும் சுரண்டியதால் கட்டப் ட்ட பலகோடிரூபா பெறுமதியான லக வர்த்தக நிறுவன கட்டிடங்களும் சொத்துக்களும். அழிக்கப்பட்டுவிட்டன. இவ்வுயிர் அழிவுகளுக்கும். சொத்தழிவு க்கும் அமெரிக்க ஏகாதிபத்திய பாதிகளே பொறுப்பேற்க வேண்டும். உலகநாடுகளில் பல இராணுவ நடவடிக் கைகளை செய்து உயிரழிவு களையும். சொத்தழிவுகளையும் அமெரிக்க ஏகாதி பத்தியம் செய்து வந்தது. அதனுடைய சூழ்ச்சிமிகுந்த பொருளாதாரக் கொள்கையால் உலக நாட்டு சொத்துக்களையும் சுரண்டிக்கொழுத் திருந்தது. இதனால் பாதிக்கப்பட்டவர்கள் அமெரிக்கா மீது எதிர்ப்பை கொண்டிருந்தனர். அவ் வெதிர்ப்பின் மூர்க்கத்தனமான நடவடிக் கையே செம்டெம்பர் 11ஆம் திகதி வெளிப்பட்டுள்ளது. அவ் உயிரிழப்புகள் மிகவும் வேதனையை "தருகின்ற போது அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் மீதுள்ள வெறுப்பு மேலும் அதிகரிக்கவே செய்கிறது. அதன் பிழையான கொள்கைகளாலும், நடைமுறையாலும் பெறுமதியான மனித உயிர்கள் மிகவும் அவலமாகப் பறிக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் இஸ்லாமிய அடிப்படை வாதம் பற்றியும் பின்லேடன் என்ற 'பூச்சாண்டி பற்றியும் பைத்தியக்கார கருத்துக்களை வெளியிடாமல் புஷ் நிர்வாகம் பதவி விலகியிருக்க வேண்டும். அமெரிக்க ஏகாதிபத்திய அக்கறைகள் கைவிடப்பட்டிருக்க வேண்டும்.



ஏகாதித்திய வெறியுடன் தொடர்ந்து செயற்பட எத்தணிக்கும் அமெரிக்காவால் முழு உலகத்திற்கும் அழிவே ஏற்படும். பதிலடி கொடுக்கப்போவதாக கூறிக்கொண்டும் இஸ்லாமிய அடிப்படை வாதத்திற்கும் எதிரான போர் என்று கூறிக்கொண்டும் உலகமக்களுக்கு அழிவை ஏற்படுத்த முற்படும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தை தடுத்து நிறுத்த உலக மக்கள் இஸ்லாமிய. இந்துத்துவ. கிறீஸ்தவ வித்தியாசங்களுக்கு அப்பால்



ஒன்றிணைய வேண்டும். அமெரிக்க ஏகா திபத்தியத்தின் போர் வெறிக்கு உதவ முன் வந்திருக்கும் இந்தியா. பாகிஸ்தான் போன்ற நாடுகள் அவற்றின் முடிவை மாற்றிக்கொள்ள வேண்டும்.

செப்டெம்பர் 11 ஆம் திகதி அமெரிக்காவின் நியூயோர்க்கிலுள்ள உலக வர்த்தக நிறுவன கட்டிடங்களின் மீதும் வாஷிங்டனிலுள்ள அமெரிக்க பாதுகாப்பு அமைச்சு கட்டிடமான பென்டகன் மீதும் விமானங்களால் மோதி மேற்கொள்ளப் பட்ட தாக்குதல்கள் எவ்வாறு யாரால் தாக்கப்பட்டது என்பது பற்றி சரியான அடிப்படைகளுடன் அமெரிக்காவால் கூறமுடியவில்லை. ஆனால் இஸ்லாமிய அடிப்படைவாத தலைவர் என்று அமெரிக்காவால் அழைக்கப்படும் ஒசாமா பின் லேடனே அத்தாக்குதலுக்கு பொறுப்பு என்று அமெரிக்கா கூறுகிறது. தஞ்சமடைந்து இருக்கும் அவரை ஆப்கானிஸ்தான் அமெரிக்காவிடம் மேற்படி தாக்குதல் பற்றிய விசாரணைகளுக்காக ஒப்படைக்கா விட்டால் ஆப்கான் மீது போர் நடத்தப் போவதாக அமெரிக்கா அறிவித்துள்ளது. அரபு நாடுகளையும், ஆப்கானிஸ்தானையும் நோக்கி விமானங்களையும், யுத்தக்கப்பல்களையும் அமெரிக்கா அனுப்பிவைத்துள்ளது எந்நேரமும் அமெரிக்க ஏகாதிபத்திய வெறிபிடித்த யுத்தம் தொடங்கலாம்.

இனவாத. மதவாத பித்து தலைக்கேறி விட்டால் அழிவுதான் அமெரிக்கா ஏகாதிபத்தியத்துக்கு எதிரான போராட்டத்துக்கு இஸ்லாமிய அடிப்படைவாதம் தலைமைதாங்க முடியாது. மத அடிப்படை வாதங்கள் போராட்ட மார்க்கமாக முடியாது. அவ்வா றான அணுகுமுறைகளால் எண்ணெய் வளம் மிகுந்த அரபு மக்களின் இயல்பான ஏகாதிபத்திய எதிர்ப்புகள் இஸ்லாமிய அடிப்படைவாதம் என்று கொச்சைப் படுத்தப்பட்டு தனிமைப்படுத்தப் படுகிறது. பின் லேடன் போன்றவர்களும், ஆப்கான் தலிபான்களும் நேரடியாகவும் தேவைக்களுக்காகப் பயன்படுத்தப் பட்டனர். வளர்க்கப்பட்டனர் அத் தேவைகள் முடிந்தவுடன் கைவிடப்பட்டு அழிக்கப் படுகின்றனர்.

அரபு நாடுகளின் எண்ணெய் வளத்தையும். வியாபாரத் தையும் அமெரிக்கா கட்டுப் படுத்துவதில் வெற்றியடைய முடியவில்லை. அவ்வெற் றிக்கு எதிராக இருக்கும் ஏகாதிபத்திய எதிர்ப்பை இஸ்லாமிய அடிப்படைவாத பூச்சாண்டியாக காட்டுகிறது. செம்டெம்பர் 11ஆம் திகதி நடத்தப்பட்ட தாக்குதலால் ஏற்பட்டுள்ள பாதிப் புகளிலிருந்து தப்பித்துக் கொள்ளவும் கூட மிகவும் வசதியாக இஸ்லாமிய அடிப்படைவாதமே காரணம் என்கிறது அமெரிக்கா. இஸ்லாமிய அடிப்படை வாதத்தின் சின்னமாக பின்லேட னையும், ஆப்கான் தலிபான் களையும் ஏற்கனவே உருவகித்து வைத்துள்ளது. அதுவும் அமெரிக்காவுக்கு இலகுவாகி யுள்ளது. இதைப்பயன்படுத்தி அரபு நாட்டு வளங்களை இலகுவாக சூறையாட நோக்கம் கொண்டுள்ள அமெரிக்க செப்டெம்பர் தாக்குதலை சாட்டாக கொண்டு பதில் தாக்குதலை செய்யப் போவதாக நியாயம் கற்பிக்கிறது.

இஸ்லாமிய அடிப்படைவாதத்திற்கு எதிர் என்ற போர்வையில் பின்லேடனுக்கு எதிராகவும் தலிபான்களுக்கு எதிராகவும் தாக்குதல் நடத்த அமெரிக்காவுக்கு எவ்வித உரிமையும் கிடையாது. அவற்றின் கைகள் சுத்தமானவையுமல்ல. இந்தியா. பாகிஸ்தான் போன்ற நாடுகளின் ஆட்சியாளர்கள் அவர்களின் இருப்பிற்காக அமெரிக்காவை ஆதரிப்பதால் அந்நாட்டு மக்கள் அனைவரும் அமெரிக்காவை ஆதரிக்கிறார்கள் என்றாகாது.

தொடர்ச்சி 9ம் பக்கம்

படிப்பகம்

www.padippakam.com



# மலையக வைத்தியசாலைகளில் மருந்தும் இல்லை - கவனிப்பும் இல்லை.

இலங்கையின் சில பிரதான மிருக வைத்திய சாலைகளின் தரத்துடன் ஒப்பிடுகின்றபோது மலையகத்தில் இருக்கும். ஆரம்பவைத்தியசாலைகளில் மிருகங்களுக்கு குறைவான உயிர்களுக்குத்தான் சிகிச்சை அளிக்கப்படுகின்றனவா என எண்ணத்தோன்றுகிறது. அவ்வைத்திய சாலைகளுக்கே தோட்டத்தொழிலாளர்கள் உள்ளடங்களாக சகல மலையகமக்களும் சிகிச்சைக்காக செல்ல வேண்டியிருக்கின்றனர். அதிலும் மலையகத் தமிழ் மக்கள் அவ்வைத்தியசாலைகளில் வேலை செய்யும் பெரும்பான்மையின ஊழியர்களினால் மிகவும் மோசமாக நடத்தப்படுகின்றனர்.

தோட்டங்களுக்குள்ளே மருந்தகங்களும், சில இடங்களில் மகப்பேற்று விடுதிகளும் இருக்கின்றன. தோட்டங்கள் ஜனதா பெருந்தோட்ட சபையினாலும், அரச பெருந்தோட்ட கூட்டுத்தாபனத்தினாலும் நடத்தப்பட்டபோது மேற்படி மருந்தகங்களும் மகப்பேற்று விடுதிகளும் ஒரளவு தரமாக நடத்தப்பட்டன. தோட்டங்கள் தனியார் கம்பெனிகள் பொறுப்பேற்றப் பிறகு அவற்றை பராமரிப்பது யார் என்ற கேள்விக்கு விடையே கண்டுப்பிடிக்கப்படவில்லை இந்நிலையில் அவற்றை அரசாங்கம் பொறுப்பேற்பதாக பெயரளவில் அறிவிக்கப்பட்டது. அங்கு மருந்துகள் இல்லை, வைத்தியர்கள், தாதிகள் மருத்துவர்கள் போதிய எண்ணிக்கையில இல்லை. பராமரிப்பு செய்யப்படுவதுமில்லை.

இது இவ்வாறிருக்க மலையக நகரங்களில் இருக்கும் அரச மருந்தகங்கள், வைத்தியசாலைகளின் நிலைமையும் அதுதான். அவை உரிய முறையில் பராமரிக்கப்படாததால் துர்நாற்றம் வீசுமிடங்களாக இருக்கின்றன.

நுவரெலியா வைத்தியசாலை பாதையில் பயணம் செய்யும்போதே துர்நாற்றத்தை சகிக்க முடியாதிருக்கும். நுவரெலியா மாவட்டத்தில் நன்கு இயங்கிய நுவரெலியா, கொத்மலை, கொட்டகலை, மஸ்கெலியா, லிந்துலை, மன்றாசி, உடபுஸ்ஸல்லாவை. வவ்வகுப் பிட்டிய வட்டவளை, நாவலப் பிட்டிய போன்ற வைத்திய சாலைகள் மிகவும் மோசமான நிலையில் இருக்கின்றன. சத்திரசிகிச்சைகள் உட்பட பலவித மான பரிசோதனைகளும் நடத்தப்பட்ட சில மலையக வைத்திய சாலைகள் இன்று மருத்தகங்களை விடமோசமான நிலையில் இருக்கின்றன.

மாகாண சுகாதார அமைச்சும் மத்திய சுகாதார அமைச்சும் மலையக வைத்தியசாலைகள், மருங்தகங்கள் பற்றி அக்கறை காட்டுவதாக இல்லை. இதனால் சாதாரணமான நோய்களுக்குட்பட்டோர் கூட சிகிச்சையின்றி அநியாயமாக இறந்துள்ளனர். மகப்பேற்று வசதிகள் இல்லாதபடியால் தாய் மார், பிறந்த குழந்தைகள் என்போரின் இறப்பு அதிகரித்து வருகிறது.

மலையக எம்.பிக்களும், அமைச்சர்களும் பத்திரிகை அறிக்கைகளுடன் திருப்தியடைந்துவிடுகின்றனர். மலையக வைத்தியசாலைகளில் வசதிகள் இல்லை என்று விசனம் தெரிவிப்பதாக அறிக்கைகள் விடுவதுடன் அவர்களது நடவடிக்கைகளை வரையறுத்துக் கொள்கின்றனர்.

# யாழ் பல்கலைக்கழக மாணவர் மீது பலமுனை அழுத்தங்கள்

யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் மீது பல முனைகளில் இருந்தும் அழுத்தங்கள், நிர்ப்பந்தங்கள் அச்சுறுத்தல்கள் அடக்குமுறைகள் விடுக்கப்படுகின்றன. பல்கலைக்கழக நிர்வாகமும், பல்கலைக்கழக மாணிய ஆணைக்குழுவும் நிர்வாக நடவடிக்கை என்னும் பெயரில் மாணவர்கள் மீது நிர்ப்பந்தங்களும் அழுத்தங்களும் கொடுத்துவருகின்றன. மாணவர்களின் குரலும் பலமும் அதிகரித்து நிற்கும் போது நிர்வாகம் மாணவர்கள் பக்கத்தில் நிற்பது போன்று காட்டிக் கொள்ளும். பின்பு உயர் கல்வி ஆணையிடும் பீடமான பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு மாணவர்கள் மீது அழுத்தம் நிர்ப்பந்தம் பிரயோகிக்கும் போது அதன் பக்கத்தில் நின்று மாணவர்களுக்கு பாதகமாக நடாந்து கொள்ளும். இது விலாங்குத் தனம் இல்லையா என்று கேட்டால் இன்றைய சூழலில் இதை விட வேறு எதைச் செய்வது என்று கேட்டுக் கொள்வதையும் காதோடு காதாகக் கேட்க முடிகிறது.

அதே வேளை படைத்தரப்பிலிருந்து மாணவர்களுக்கு நீண்ட நாட்களாக அச்சுறுத்தல்கள் இருந்து வந்துள்ளது. பொங்கு தமிழ் நிகழ்ச்சிக்கு முன்பிருந்தே பல்கலைக்கழக மாணவர்கள் கண்காணிக்கப்படுவதும் தகவல்கள் சேகரிக்கப்படுவதும் இடம் பெற்று வந்துள்ளது. பல்கலைக்கழகத்தினுள் புலிகள் புகுந்துவிட்டார்கள் என்ற பெயரில் உரிமைக் குரலுக்கு முன் நிற்கும் மாணவர்களுக்கு புலி முத்திரை குத்தப்பட்டுள்ளது.

இதன் வெளிப்பாடே யாழ்-பல்கலைக் கழக மாணவன் கி.திவ்வியனின் கைதும் தடுப்பு வைப்பும் குற்றச் சாட்டும் என யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் கூறுகின்றார்கள். திவ்வியனின் கைதும் தடுத்து வைப்பும் தற்போது உயர் நீதி மன்றத்தில் விசாரணைக்காக ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. எவ்வாறாயினும் திவ்வியனின் கைது தடுப்பு வைப்பு யாழ் பல்கலைக்கழக மாணவர்களுக்கு மட்டுமன்றி வடக்கு கிழக்கின் சகல மாணவர்களுக்கும் விடுக்கப்பட்டுள்ள அடக்குமுறை எச்சரிக்கை என்றே கொள்ளப்படுகிறது.

மேலும் அரசாங்கமும் அதன் ஆதரவுக் கட்சிகளும் யாழ் பல்கலைக்கழகத்தைப் புலிகளின் குகை என்றவாறு சித்தரிக்க கடும் பிரயத்தனங்களில் ஈடுபட்டு வருகின்றன. பல்கலைக்கழகத்தினுள் சில மாணவர்கள் ஆசிரியர்களை வைத்து வீண் விசமத்தனமான வதந்திகளை முழு மாணவர்கள் மீதும் கட்டவிழ்த்து விட்டு வருகின்றனர். இது எவ்வகையிலும் சமூக ஆரோக்கியம் கொண்ட ஒன்றல்ல.

யாழ் பல்கலைக்கழகத்தில் மட்டுமன்றி சகல பல்கலைக்கழக கழகங்களிலும் மாணவர்கள் அநீதிகளுக்கு எதிராக அணிதிரள்வதும் நீதி கோருவதும் இயல்பான தொன்றாகும். மாணவர்கள் நான்கு சுவர்களுக்கு மத்தியில் இருட்டறைக் கல்வி பெறுபவர்கள் அல்லர். சமூகத்தின் தாக்கங்கள் அவர்களுக்கு ஊடாகப் பிரதிபலிக்கவே செய்யும். பல்வேறு அரசியல் கருத்துடைய மாணவர்கள் இருக்கவே செய்வார்கள். அவர்களின் புலி இயக்க ஆதரவுக் கருத்துடையோரும் இருப்பார்கள். மாணவர்களின் நியாயமான கோரிக்கைகள் அல்லது மக்கள் சார்பான நீதி கோரும் நடவடிக்கைகளுக்கு எதாவது ஒரு முத்திரை குத்தி அழுத்தங்களோ அச்சுறுத்தல்களோ நேரடி அடக்குமுறைகளோ நடாத்த முற்படுவதை எவ்வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாது. யுத்த நிறுத்தம் பேச்சுவார்த்தை அரசியல் தீர்வு என்பனவற்றை இன்று முழு இலங்கையிலும் சமாதானத்தை விரும்பும் மக்களை தமது கோரிக்கையாக முன்வைத்து வருகிறார்கள். அதனைச செவிமடுக்காது தமது அதிகாரம், பதவி, பண வேட்டை என்பனவற்றுக்காக யுத்தம் தொடரப்படுகிறது. அதன் மறைவில் அரசியல் பிழைப்பும் தொடர்கிறது.

யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் மீது பலமுனைத் தாக்குதல் தொடுப்பதன் மூலம் வவுனியா வளாகம் கிழக்குப் பல்கலைக்கழகங்களையும் கட்டுப்படுத்தலாம் என் ஆளும் அதிகார சக்திகள் நம்புகின்றன. ஆனால் அரசியல் யதார்த்தங்கள் அடக்குமுறையின் பக்கம் நிற்கமாட்டாது என்பதே நியதியாகும்.

# வவுனியா அனுபவிக்கும் அடி பிடி அரசியல்

வடமாகாணத்தின் தலைவாசல் வவுனியா. கடந்த இரண்டு தசாப்தங்களாக எதையும் தாங்கும் இதயம் போல வவுனியா சகலவகையான துன்பங்கள் துயரங்கள் அவலங்கள் ஏமாற்றக்கள் இழுபறிகள் அடிபிடிகள் போன்ற அனைத்தையும் தாங்கி நிற்கிறது. ஒரு வெளிநாட்டவர் இங்கு வந்து திரும்பிய பின் வவுனியா 'அகதிகளின் நகரம்' எனக் கூறியது நினைவிற்கு வருகிறது.

இனப்பிரச்சினையும் அதன் மூலமான கொடிய யுத்தமும் வவுனியாவை இடம் பெயர்ந்த மக்களால் நிரம்பி வழியச் செய்துள்ளது. நகரம் சிறிதானாலும் பரந்த நிலப்பரப்பு மக்கள் புகலிடம் பெற்று நமது பிரதேசத்தில் இருக்கிறோம் என்ற ஒரு நம்பிக்கை உணர்வில் அரைகுறை வாழ்வையாவது வாழ வழி வகுத்து நிற்பது வவுனியா. இதற்காக நாம் வவுனியாவின் சொந்த மக்களுக்கு என்றும் கடமைப்பட்டவர்கள்.

பத்துக்கு மேற்பட்ட அகதி முகாம்களில் இடம் பெயர்ந்த மக்களாகிய நாம் விபரிக்க மணிக்கணக்கான நேரம் தேவைப்படும் நீண்ட துன்பப்பட்டியல்களுடன் வாழ்கின்றோம். மறுபுறத்தில் எல்லைப் பிரதேசமாக வவுனியா இருப்பதால் அதனைப் படிப்படியாகக் கபளீகரம் செய்து கொள்ள பேரின வாதம் நாக்கு நீட்டியபடியே இருந்து வருகின்றது.

இவ்வாறு நெருக்கடியும் ஆபத்தும் அல்லல்களும் நிறைந்து காணப்படும் ஒரு பிரதேசத்தில் அதுவும் ராணுவக் கட்டுப்பாட்டில் இருக்கும் வவுனியாவில் மக்களுக்கு பாதுகாப்பும் அரவணைப்பும் அவசியம். இதன் காரணமாகவே தமிழ் இயக்கங்களை மக்கள் நாடி நிற்க வேண்டிய நிரப்பந்தத்திற்கு உள்ளாகினர். என்னதான் இருந்தாலும் நம்மவர்கள்தானே என ஒவ்வொரு இயக்கத்தையும் சார்ந்து நிற்கவேண்டிய தாயிற்று.

ஆனால் தமிழ் இயக்கங்கள் என்பன மக்களது நிர்க்கதி நிலையைப் பாவித்து தத்தமது ஆதிக்கத்தையும் அதிகாரத்தையும் நிலைநிறுத்த முற்பட்டுள்ளமை தான் கவலைக்கும், விசனத்திற்குரிய தாகும். இது இன்று நேற்றல்ல தொடர்ச்சி யான யுத்த சூழலிலும் வவுனியாவில் மக்கள் அனுபவித்து வரும் இன்னல்களில் ஒன்றாக இருந்து வருகிறது.

பாதுகாப்பும் ஆறுதலும் அரவணைப்பும் என்று நம்பி வந்த போதிலும் அவ் வேலிகளே பயிரைமேயும் நிலையாகி உள்ளது. அதிகாரத்தால் வரிகளும் அதட்டி மிரட்டுவதால் "நன்கொடை" களும் தொடர்ந்து மக்களிடமிருந்து உறக்கப்படுகிறது. அன்றாட மக்கள் வாங்கும் உணவுப் பொருட்கள் பெரும்பாலானவற்றுக்கு வரிகள் போட்டு வாங்குகிறார்கள். வர்த்தக வியாபாரத் தலங்களில் 'சிறிய தொழிற்சாலைகளில் 'நன்கொடை' எனக் கூறி பெரும் தொகைகள் வாங்குகிறார்கள். இவை எல்லாம் இறுதியில் மக்களது தலைகளிலேயே சுமைகளாக்கப்படு கின்றன.

இவை ஒரு புறம் நிகழ மறுபுறத்தில் தமிழ் இயக்கங்களிடையே அரசியல் அடி பிடிகள் அடிக்கடி நடைபெறுகின்றன. யார் ஆதிக்கம் பெறுவது? யார் அரசியல் செல்வாக்குப் பெறுவது? நீ பெரிதா? நான் பெரிதா? எனக் கேட்டு அடிப்படுகிறார்கள். எதிரிக்கு எதிராக என்று கூறித் தூக்கிய ஆயுதங்களைத் தமக்குள் பாவித்துக் கொள்கிறார்கள். இந்த இயக்க மோதல்களையுப் பார்த்து பேரினவாதிகளும் ஆயுதப்படையினரும் சிரிப்பொலி கிளப்பி 'விடாதை பிடி' என்று கூறி ஏவக் கூடிய இடமெல்லாம் ஏவி வருகின்றனர்.

எற்கனவே புறப்பட்டு எங்கெங்கோ எல்லாம் சென்று எதைஎதையோ எல்லாம் செய்து இன்று இங்கு வந்து அடிபிடி அரசியல் நடாத்தும் நமது தமிழ் இயக்கங்களை எப்படி நோக்குவது என்றே புரியவில்லை. மக்கள் சலித்துக் கொள்ளவே செய்கிறார்கள். என்ன செய்வது ஆயுத கலாசாரத்தின் மத்தியில் மக்கள் தமது கருத்துக்களை அடக்கியே வெளிப்படுத்துகின்றனர். ஆனால் அது என்றென்றைக்குமாக இருக்காது. "நன்மை செய்யப் பிறந்த நீ, நன்மை செய்யாது விட்டாலும் தீமையாவது செய்யாமல் இரு" என்ற துறவி ஒருவரின் கூற்றையாவது தமிழ் இயக்கங்கள் செவிகளுக்கு எடுத்துக் கொள்ளுமா?

**மா. சிவப்பிரகாசம்**
**சிதம்பரபுரம்**
வவுனியா

# நாலும் நடக்கும் மண்ணுலகிலே

## அண்டப்புளுகும் ஆன்மீகப் புளுகும்

மூனாப் போனா பற்றிப் போன புதிய பூமியில் வந்த தெல்லவோ. இந்த மகா கவி மகா மகா விமர்சகரும் மகா மகா மகா ஆன்மீகவாதியும் கிட்டடியில் இன்லெ குண்டைப் போட்டிருக்கிறார். எழுத்தாளர் சமீமின் நூல் வெளியீட்டில் பேசிய தன்னுடைய கவிதை ஒன்றைப் பார்த்தே காலஞ்சென்ற மஹாகவி தனது சாதா மனிதனின் சரித்திரத்தை எழுதினாராம். கண்டியளோ இந்த எழுத்துத் திரு காரணமாகத் தனக்கு மஹாகவி மீதுள்ள மரியாதை குறைந்து விட்டது. எ அவர் சொன்னதைக் கேட்டு, விஷயமறிந்தவர்கள் வாய்விட்டுச் சிரிக்காத குறை பாருங்கோ! இது தான் அவருடைய ஆன்மீகம் போலை!

## ஜே.வி.பியை முந்திவிட்ட கலாநிதியார்.

ஜே.வி.பி போகிற பாதையில் தான் கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்தினா போ என்று எனக்கு எப்போதும் ஒரு ஐமிச்சம். ஜே.வி.பி., யூஎன்.பியோடு சல்ல பண்ணினது போல, அவரும் யூஎன்.பி.யோடு சல்லாபம் பண்ணி மாகாண சபாநாயகராக வரப் பார்த்தார் சரிவரவில்லை. ஜே.வி.பியோடு தெறித்த பிறகு, ஜே புதிய அரசியல் யாப்பை எதிர்க்கும் என்று சொன்ன போது, கலாநிதியார் அ ஆதரிக்கிறதாகச் சொன்ன நேரம், ஆளுக்கு என்ன நடந்துவிட்டது எ யாருக்குமே விளங்கவில்லை. இப்போது தான் விளங்குகிறது. இந்த முறை, ஜே.வி.பியை முந்தி விட்டார். இந்த அரசாங்கத்துக்கு இவர் முட்டுக் கொடுப்ப முடிவு பண்ணின பிறபாடுதானே ஜே.வி.பியும் நிபந்தனையோடு ஆதரவு கொடுக்கி அவர்களுடைய ஐந்து நிபந்தனையும் ஊரறியும். இவருடையது? அடு பாராளுமன்றமா? அத்துடன் பிரதி அமைச்சர் பதவியா? இவற்றுக்கு ஒப்பந்தம் செ பின்பே விளக்கத்தை தூக்கிக் கொண்டு வெளிக்கிட்டதாக கோட்டைப் புகைய நிலைய முன்பாக இவரைச் சூழ்ந்து திட்டித் தீர்த்தவர்கள் கூறி இருக்கிறார் அடுத்தடுத்த மாதங்களில் உண்மை வெளிவரவே செய்யும்.

## ஜே.வி.பி முதலாளிய ஒழிப்பு நடவடிக்கை

சென்ற யூலை மாதம் ஜே.வி.பி. கொழும்பு விகாரமாதேவி பூங்காவில் ஜே. தலைவர்கள் நால்வர் வாகனத்தில் வந்து இறங்கினர். அவர்களை கண் நடனகாரரும் இசைஞர்களும் மேளதாளத்துடன் மேடை வரை அழைத் சென்றனர்.

இந்த விதமான வரவேற்பு ஒரு நிலமானிய சமூகமுறைக்கு உரியது. இது சிங் குறிப்பாக கண்டிய, மேட்டுக்குடிகளது சடங்குகளில் கடைப்பிடிக்கப்படுவது. அரசின் முக்கிய நிகழ்ச்சிகளிலும் கடைப்பிடிக்கப்படுகிறது என்பதும் உண்மை. சா நிலமானிய அடையாளங்கள் கொண்ட இச்சடங்கை யூஎன்.பியும் பொது முன்னணியும் தொடர்வதில் அதிசயமில்லை. ஆனால் முதலாளியத்தை ஒழித் கட்டிவிடப் போகிறதாகச் சொல்கிற ஜே.வி.பியினால் கடைப்பிடிக்கப்படுவதன் கரு என்ன?

முதலாளியத்தை ஒழித்து புதிய நிலமானிய சமூக அமைப்பை இவர்கள் உருவாச் போகிறார்களா? போன தேர்தலின் போது மகாசங்கத்தின் மகாநாயக்க தேரர்க ஆசியை நாடிய போதே இப்படி நடக்கும் என்று எனக்கு ஏன் தோன்றவில்ல

## வாசுதேவவுக்கு ஏன் விளங்கவில்லை?

கட்டுநாயக்க விமான நிலைய குண்டு வெடிப்பின் பின்பும் இந்த நாட்டி மிகமுக்கியமான பிரச்சினைகள் தேசிய இனப்பிரச்சினையும் இன ஒடுக்கல் யுத்த என்பது சராசரி அறிவு உள்ளவர்கட்கும் விளங்கி இருக்கும். நாட்டி 'ஜனநாயகத்துக்கு' ஏற்பட்டுள்ள ஆபத்துத்தான் பெரியதென்று யூஎன்.பி. ஜே.வி.பி நாடகம் ஆடினார்கள். யூஎன்.பி. மேடைகளிலும் ஜே.வி.பியுடனும் மேடைகளி தோன்றுகிற வாசுதேவ நாணயக்காரவுக்கு இன்னும் ஏன் இது விளங்கவில்லை

சமசமாஜக் கட்சியின் ட்ரொட்ஸ்கியத்திலிருந்து உருவான எல்லா அரசிய போக்குக்களுமே தேசிய இனப்பிரச்சினை விடயத்தில் தவறாகவே நடந்து வந்திருப்ப ஏன்? இது பாராளுமன்ற அரசியலின் சீரழிவா. ட்ரொட்ஸ்கியத்தின் கோளாறா

## கட்சி மாறாமல் இருப்பது எப்படி?

இந்த நாட்டில் யார் அதிகாரத்தில் இருப்பது என்பதைத் தமிழரசுக் கட்சி தீர்மானிக்கும் என்று வீறாப்புப் பேசிய காலம் 1960 முதல் 1970 வரையிலான 1970ல் இந்த வீறாப்பெல்லாம். போய்த் "தமிழரைக் கடவுள் தான் காப்பாற்ற வேண்டு என்று தலைமீது கை வைத்து காலம் தொடங்கியது. பின்னர் ஆயுதமேந்திய ஒ பாரம்பரியம் அயலார் தயவில் ஆளநினைத்து ஏமாந்தது. இப்போது யார் அதிகாரத்தி இருக்கிறார்களோ தீர்மானிக்கிற அதிகாரம் கூட இவர்கஞ்கு எஞ்சி இருக்கிறத தெரியவில்லை.

காலஞ்சென்ற ஒரு முதிர்ந்த சிறுபான்மைச் சமூக அரசியல்வாதி பற்றி அண்மையி சொல்லப்பட்ட கதை நினைவுக்கு வருகிறது. அந்த அரசியல்வாதி ஒவ்வொ தேர்தலின் பின்பும் எப்படியாவது ஆளும் கட்சிக்குத் தாவிவிடுவார். இதைப்பற் அவரது ஆதரவாளர் ஒருவர் அவரிடம் "ஐயா, நீங்கள் நல்ல மனிதர். ஆனால் ஏ இப்படி உங்கள் கட்சியை மாற்றுகிறீர்கள்?" என்று கேட்டாராம். அதற்கு அந் அரசியல்வாதி "தம்பி, உமக்கு விஷயம் சரிவர விளங்கவில்லை. நான் என்று கட்சி மாறுவதில்லை. பெரும்பான்மைச் சமூகம் தான் தேர்தலுக்குத் தேர்தல் ஆளு கட்சியை மாற்றிக் கொள்கிறது. நான் எப்போதுமே ஆளும் கட்சியில் தான் இருந் வருகிறேன்" என்றாராம்.

இப்போது சந்திரிகாவின் புதிய அரசியல் யாப்பால் இதற்குக் கூடப்பங்கம் வந்துவிட கூடும் போலல்லவா தெரிகிறது.

## பக்தி அரசியல்

கலாநிதி விக்கிரமபாகுவின் அரசியல் குத்துக்கரணத்துக்கு வக்காலத்து வாங் அவரது தொண்டரடிப் பொடியான திருநாவுக்கரசு நாயனார் முன்வந்திருக்கிறார் தலைவர் முன்பு புதிய இடதுசாரி முன்னணியைச் சீர்குலைக்கிற காரியங்க செய்த போது தீக்குளிக்கப் போவதாக மிரட்டிப் பிறகு பெட்டிப்பாம்பாக அடங்கிப்போன அப்பர் சுவாமிகள். இப்போது தினக்குரலில் தன் மூர்க்கத்தனத்தை வெளிப்படுத் யிருக்கிறார். இவர் அந்தரங்க சுத்தியுடன் தன்னை ஆட்கொண்ட தலைவர கடந்த மூன்று வருடக்கால அரசியல் அம்பலத்துக் கூத்தையெல்லாம் ஒத்து கொள்கிறாரா? இத்தனைக்குப் பிறகும் நவசமசமாஜக்கட்சியுடனும் களவாடப்பட்ட புதிய இடதுசாரி முன்னணி என்ற பேருடனும் ஒருவர் தன்னை அடையாள காட்டுவதானால் அவர் முழு அயோக்கியராக இருக்கலாம் அல்லது முழு மூடரா இருக்கலாம். அப்பர் சுவாமிகள் விடயத்தில் இதை முடிவு செய்வது சிறிது கஷ் தான்.

வெளியில் தனிப்படப் பேசும் போது விக்கிரமபாகுவின் முடிவில் தனக்கு உடன்பாடில்ல என்று கூறி நழுவி விழுவார். அண்மையில் 'சாமவாம' முன்னணியின் கூட்டத்தி படம் எடுத்த பத்திரிகையாளரிடம் தன்னை அதில் தவிர்க்குமாறு இந்த நாயனா வேண்டிக் கொண்டாராம். தான் தனியே மொழி பெயர்ப்புக்கு மட்டுமே போனதாகவு கூறிக் கொண்டாராம். அதே அப்பர் தினக்குரலில் விக்கிரமபாகுவை உயிர்வாழு புரட்சிவாதி என்று புகழ்பாடி நிற்கிறார். இதுவும் ஒருவகை அரசியல் உயிர்வாழ்வுதான் விக்கிரமபாகு பாராளுமன்றம் புகுந்தால் அப்பர் சுவாமிக்கு மாகாணசபை கிடைத் முத்தி அடைந்து கொள்ளலாம்.

படிப்பகம்

www.padippakam.com



புதிய பூமி

புதிய பூமி

Puthiya Poomi REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA.

...று 08 யூலை/ஓகஸ்ட் 2001 பக்கம் 12 விலை 10/= சுழற்சி 42

47, 3வது மாடி, கொழும்பு மத்திய சந்தைக் கட்டிடத் தொகுதி, ...காழும்பு 11, இலங்கை. தொலைபேசி இல. 435117, 335844

## பொதுசன ஐக்கிய முன்னணியும் ஐ.தே.கவும் ஒன்று என்றால் ஜே.வி.பியும் ஒன்றுதான்

...அவர்களும் ஒன்றுதான். இவர்களும் ஒன்றுதான் என்று ஐ.தே.கட்சியும் ...ஒன்றுதான் பொதுஜனஐக்கிய முன்னணியும்.ஒன்றுதான் என்று நாடெங்கும் ...போஸ்டர் ஒட்டி பிரசாரம் செய்த ஜே.வி.பியினர் தாங்களும் ஒன்றுதான் என்று ...நிரூபித்துவிட்டனர். ஐ.தே.கட்சிக்கும் பொதுசனஐக்கிய முன்னணிக்கும் சில ...ல வித்தியாசங்கள் இருந்தபோது அவ்வாறு வித்தியாசங்கள் எதுவுமே இல்லை ...என்றார்கள். இன்று இரண்டு கட்சிகளிடையேயும் வித்தியாசங்கள் இல்லை ...என்பது நிருபிக்கப்பட்டுவிட்ட நிலையில் வித்தியாசத்தை கண்டுள்ளனர் ...ஜே.வி.பியினர். அந்த நியாயப்பாட்டுட னேயே பாராளுமன்றத்தில் ...பெரும்பான்மையின்றி ஆட்சியை தொடர முடியாதிருந்த பொதுஜனஐக்கிய ...முன்னணி அரசாங்கத்திற்கு ஜே.வி.பி. ஆதரவளிக்க முன்வந்துள்ளனர். ...அரசாங்கத்துடன் செப்டெம்பர் 5ஆம் திகதி புரிந்துணர்வு ...உடன்படிக்கையொன்றை கையெழுத்திட்டுள்ளனர். அதன் மூலம் ...பாராளுமன்றத்தில் மரணப்படுக்கையில் இருந்த பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்திற்கு 'ஒக்சிஜனை' ஜே.வி.பி. கொடுத்துள்ளது.

அரசாங்கம் பொருளாதார ரீதியில் உலகமயமாதலை ஏற்றுக்கொண்டு எமது ...நாட்டு வளங்களை விற்றுத் தீர்த்துவருகிறது. இனரீதியாக தமிழ் மக்களை அடக்கி அவர்களுக்கெதிரான யுத்தத்தை தீவிரமாக முன்னெடுத்து வருகிறது. ஆட்சி முறையில் சாதாரண பூர்சுவா ஜனநாயக உரிமைகளைக் கூட மறுத்து ...வருகிறது. இவை ஐ.தே.கட்சியின் சாதனைகளாகவும் இருந்தன. ...பாராளுமன்றத்தில் அரசாங்கத்திற்கு வழங்கிவந்த ஆதரவை முஸ்லீம் காங்கிரஸ் ...விலக்கிக் கொண்ட நிலையில் பாராளுமன்றத்தில் ஐ.தே.கட்சியுடன் சமரசத்தை ...ஏற்படுத்திக் கொண்டு அரசாங்கம் கூட்டரசாங்கமொன்றை நடத்த பேச்சு ...வார்த்தை நடத்தியது. அப்பேச்சுவார்த்தை தோல்வியடைந்த நிலையில் ஜே.வி.பி. அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தி அரசாங்கத்திற்கு கை கொடுத்தது. அரசாங்கம் தொடர்ந்து ஜே.வி.பி.யுடன் பேச்சுவார்த்தை நடத்திவந்தது சில ...நிபந்தனைகளை முன்வைத்திருந்தது. அதனை அரசாங்கம் ஏற்றுக்கொண்டது.

...ஜனாதிபதி மூடிய பாராளுமன்றத்தை திறக்க வேண்டும்: பொதுஜன அபிப்பிராய ...வாக்கெடுப்பை ரத்து செய்ய வேண்டும். அமைச்சரவை அமைச்சர்களின் ...எண்ணிக்கையை 20 ஆக குறைக்க வேண்டும். போன்ற நிபந்தனைகளை ...ஏற்றுக் கொண்டால் ஒருவருடத்திற்கு இந்த அரசாங்கத்தை கவிழ்க்க ஐ.தே.கட்சி ...எடுக்கும் முயற்சிகளுக்கு ஆதரவளிப்பதில்லை என்றும் ஜே.வி.பி. ...உறுதியளித்துள்ளது. அத்துடன் அந்த ஒருவருட காலத்தில் புலிகளுடன் அரசாங்கம் பேச்சுவார்த்தை நடத்தக்கூடாது என்றும். தமிழ் மக்களுடைய ...பிரச்சினைகளை தீர்ப்பதற்கு அதிகார பரவலாக்கலை செய்வதற்கு எவ்வித நடவடிக்கையையும் அரசாங்கம் எடுக்கக்கூடாது என்றும் ஜே.வி.பி நிபந்தனை விதித்துள்ளது. இவற்றை அடிப்படையாகக் கொண்டே அரசாங்கத்திற்கும் ஜே.வி.பிக்கு மிடையே புரிந்துணர்வு உடன்படிக்கை ஏற்பட்டுள்ளது. அரசாங்கம் அடுத்த ஒருவருடத்திற்கு மேற்படி நிபந்தனைகளுடன் நடந்துகொண்டால் மேலும் ஆதரவை நீடிப்பது பற்றி ஜே.வி.பி தீர்மானிக்கும் என்றும் ஜே.வி.பி தலைவர்கள் கூறியுள்ளனர்.

அரசாங்க அமைச்சரவையில் பொறுப்புக்களை எடுத்துக்கொள்ளாத போதும் அரசாங்கத்திற்கு முட்டுக்கொடுத்துள்ளது. இதன் மூலம் ஜே.வி.பி ஐ.தே.கட்சியும். பொதுஜன ஐக்கிய முன்னணியும் ஒன்றுதான் என்று கூறிய அதனது பழைய நிலைப்பாட்டினை மாற்றிக்கொண்டுள்ளது என்பது தெளிவாகிறது. ஜே.வி.பி எந்தவொரு அரசாங்கத்திற்கும் முட்டுக் கொடுக்காது என்று கூறிய நிலைப்பாட்டிலும் மாற்றம் ஏற்பட்டுள்ளது.

ஐ.தே.கட்சியால் ஆரம்பிக்கப்பட்டு பொதுஜன ஐக்கிய முன்னணியால் மிகவும் துரிதமாக நடத்தப்பட்டுவரும் தமிழ் மக்களுக்கு எதிரான யுத்தத்தை நிறுத்தும்படி ஜே.வி.பி அரசாங்கத்திடம் எவ்வித நிபந்தனையையும் முன்வைக்கவில்லை. அதிகாரப்பரவலாக்கலை செய்வதற்கான எவ்வித நடவடிக்கையையும் அரசாங்கம் முன்னெடுக்க கூடாது என்று நிபந்தனை விதித்ததன் மூலம் இனப்பிரச்சினைக்கு ஜனநாயக பூர்வமான அரசியல் தீர்வு காண்பதற்கு ஜே.வி.பி தடை விதித்துள்ளது. இதன் மூலம் இலங்கையின் இனப்பிரச்சினையில் குழம்பிய நிலைப்பாட்டில் ஜே.வி.பி. இருப்பதாக கூறமுடியாது. தெளிவான நிலையிலேயே இருக்கிறது. அதாவது சிங்களப் பேரினவாதத்திற்கு ஒத்து போகக்கூடிய விதத்திலேயே இந்நாட்டின் தேசிய இனங்கள் வாழவேண்டும் என்பதே அதன் நிலைப்பாடாகும் இலங்கை பாராளுமன்றத்தில் முக்கிய சத்தியாக வரவேண்டும் என்பதே அதன் குறிக்கோள். இவ்வாசை பழைய இடதுசாரிகளான சமசமாஜிகள். கம்யூனிஸ்ட் கட்சியினர் போன்றோரின் ஆசைக்கு எவ்விதத்திலும் குறைவானதல்ல.

சிறுபான்மை தேசிய இனங்களின் அபிலாஷைகளை கணக்கில் எடுக்காது பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்திற்கு முட்டுக்கொடுப்பதை இனவாதத்திற்கு துணைபோகும் 'இழிவான செயலாக' இடதுசாரிகள் என தங்களை தாங்களே அழைத்துக் கொள்ளும் ஜே.வி.பிக்கு விளங்கவில்லை என்று கூறமுடியாது. சிறுபான்மை தேசியவாத கட்சிகளின் தயவில் பொதுஜனஐக்கிய முன்னணி ஆட்சி நடத்தக்கூடாது என்ற பேரின அகங்காரத்தையே ஜே.வி.பி வெளிப்படுத்தியுள்ளது. இந்நாட்டின் சகல தேசிய இனங்களும் சமத்துவத்துடன் ஐக்கியத்துடனும் வாழவேண்டும் என்ற விருப்பத்தை ஜே.வி.பி அதன் நிகழ்ச்சி நிரலில் சேர்த்துக் கொள்ளாதபோது. யுத்தத்திற்கு தீர்வு காணவேண்டும் என்பதை சேர்த்துக்கொள்ளாதபோது அது எவ்வாறு நேர்மையான இடதுசாரி சக்தியாக முடியும். ஒரு பேரினவாத முதலாளித்துவ அரசாங்கம் ஆட்டம் காண்கின்றபோது அதற்கு முட்டுக்கொடுத்த ஜே.வி.பி. ஐ.தே.கட்சிக்கும் பொதுஜன ஐக்கிய முன்னணிக்கும் மாற்றாக எவ்வாறு செயற்பட முடியும். அரசாங்கத்தை மக்கள் தேர்ந்தெடுத்த வாறுதான் சிறுபான்மை தேசியஇன எம்.பிக்களையும் மக்கள் தேர்ந்தெடுத்துள்ளனர் என்பதை ஜே.வி.பி விளங்கிக்கொள்ளவில்லையா?

சமசமாஜிகளும் சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கு (இன்று பொதுஜன ஐக்கிய முன்னணியின் தலைமைக்கட்சி) ஆதரவு வழங்கும்போது விமர்சனத் துடனான ஆதரவை வழங்குவதாகவே தெரிவித்தனர். இன்று விமர்சனத் துடனான ஆதரவு ...என்பது எல்லை கடந்த நிலையில் இடது சாரிகள் என்போர் சுதந்திரக்கட்சியின் ...தயவில் வாழவேண்டியவர்களாக்கப் பட்டுள்ளனர். அதேநிலை ஜே.வி.பிக்கு ...ஏற்பட்டே தீரும்.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணாது யுத்தத்தை தொடர்ந்து முன்னெடுப்பதால் ஏற்பட்டுள்ள அழிவை மேலும் நீடிக்கும் வகையில் ஜே.வி.பி. அரசாங்கத்திற்கு உருதுணையாக சேர்ந்துக்கொண்டது என்ற பழிச்சொல்லிருந்து ஜே.வி.பி விடுபடமுடியாது. இன்றைய நாட்டுமக்களின் பட்டினிநிலைக்கு காரணமான பொருளாதாரக் கொள்கையை பச்சைக்கொடி காட்டியுள்ளது.

[redacted]

ஆசிரியர் குழு

# வெகுஜனப் போராட்டங்களின் தேவையும் அவசியமும்

உலகின் ஒடுக்கு முறைகளை எதிர்நோக்கி நிற்கும் மக்களுக்கு போராட்டங்களே உயிர் நாடியாகும். போராட்டம் இன்றேல் விடுதலையும் கிடையாது வாழ்வும் இல்லை என்பதே வரலாற்று நியதியாகும்.

தனிச் சொத்துடமையின் தோற்றமானது வர்க்கங்களின் வளர்ச்சிக்கு வழி வகுத்தது. ஆளும் வர்க்கங்களின் ஒடுக்குமுறைகள் மக்கள் மீது ஏவப்பட்டு வந்தது. அவற்றை நீண்ட காலத்திற்கு சகித்துக் கொள்ள முடியாத மக்கள் ஆளும் வர்க்கங்களையும் அவற்றின் ஒடுக்கு முறைகளையும் எதிர்த்து போராட்டங்களில் ஈடுபட்டு வந்தனர்.

மக்கள் வீறுபெற்று எழுந்து போராடிய போராட்டங்கள் அனைத்தும் வெகுஜனப் போரா ட்டங்களேயாகும். அவை பல்வேறு வகைப்பட்டவையாகவும் வடிவங்களைக் கொண்டவை யாகவும். அப்போராட்டங்கள் குறிப்பிட்ட எல்லைகளுக் குள்ளும் வரையறைகளுக் குள்ளும் இருந்து விடவில்லை. உயர்ந்த கட்ட ஆயுதப் போராட்டங்களாக வளர்ச்சி பெற்று வடுதலையை வென்றெடுத்தும் வந்துள்ளன.

> இதற்கு முடிவு வேண்டும். அரசியல் சிந்தனையிலும் செயற்பாட்டிலும் மாற்றம் வேண்டும். அந்த மாற்றத்திற்கான பாதையைத் தேடிக் கொள்ளல் வேண்டும். அந்தப் பாதை போராட்டப் பாதை தான் பாராளுமன்றப் பாதை அல்ல.

மனிதகுல வரலாற்றில் மக்கள் திரள்களால் முன்னெடுக்கப்பட்ட மாபெரும் போராட்டங்கள் ஒவ்வொரு கால கட்டங்களிலும் சமூக மாற்றங்களைத் தோற்றுவித்தும் உள்ளன. ஆனால் மார்க்சிசத்தின் தோற்றத்திற்குப் பின்பே மக்கள் திரள் மேற்கொள்ளும் போராட்டங்களுக்கு திட்ட மிட்ட வழிமுறைகளும் ஆட்சி அதிகாரம் பற்றிய குறிக்கோளும் வரையறுக்கப்பட்டது. வரலாற்றில் ஏற்கனவே இடம் பெற்றுவந்த ஒவ்வொரு காலகட்டப் போராட்டங்களிலும் மக்கள் பெரும் திரள் பங்கு கொண்டு தமது வீரதீர ஆற்றல்களை வெளிப்படுத்திய போதிலும் ஆட்சி அதிகாரத்தை அப்போராட்டங்களின் ஊடாகப் பெற்றுக் கொண்டவர்கள் மக்களாக இருக்கவில்லை. புதிது புதிதாக வளர்ச்சி பெற்ற சொத்து சுகம் தேடி நின்றவர்களே ஆட்சி அதிகாரத்தின் சொந்தக்காரர் ஆனார்கள்.

ஆனால் மார்க்சிசம் மட்டுமே வரலாற்றில் முதல் தடவையாக ஒடுக்கப்பட்ட வர்க்கம் போராட்டங்களின் மூலம் ஆட்சி அதிகாரத்தைப் பெற வேண்டும் என்பதைத் திட்டவட்டமாக முன்மொழிந்து எடுத்துரைத்தது. உடனடிச் சலுகைகள், உரிமைகள் போன்ற கோரிக்கைகளுக்காக மட்டுமின்றி ஆட்சி அதிகாரத்தை தமது கைகளுக்கு எடுத்துக் கொள்வதற்கான நீண்ட போராட்டத்தில் மக்கள் ஈடுபடல் வேண்டும் என்பதை மார்க்சிசம் வற்புறுத்திக் கொண்டது. பாட்டாளி வர்க்கத்தின் தலைமையில் ஒடுக்கப்படும் அனைத்து மக்களும் ஒன்று திரண்டு போராடுவதைத் தவிர வேறு மார்க்கம் கிடையாது எனவும் உறுதியிட்டுக் கூறிக்கொண்டது.

வர்க்க ஒடுக்குமுறையும் அதன் காரணமான சகலவகை அடக்கு முறைகளையும் எதிர்த்து மக்கள் திரள் அன்றாடப் போராட்டங்களில் ஈடுபடுவதென்பது மக்களுக்குரிய ஒரு போராட்டப் பயிற்சிக்களமாகும். இத்தகைய பயிற்சிக்களத்திலேயே மக்கள் திரள் பரந்துபட்ட அனுபவங்களைப் பெற்றுக் கொள்கிறார்கள். அத்தகைய போராட்ட அனுபவங்கள் படிப்பினைகள் மேன் மேலும் விடுதலை என்ற உயர்ந்த குறிக்கோளை அடைவதற்கு வழி வகுக்கின்றது.

வெகுஜனப் போராட்டங்கள் பல்வேறு பரிமாணங்களைப் பெற்று வளர்ச்சி காண்கின்றது. ஆரம்ப நிலையில் பல்வேறு வடிவங்களைக் கொண்டவையாகக் காணப்படும். ஆனால் சரியான கோட்பாடு சரியான கொள்கை உரிய நடைமுறை. தூர நோக்குடைய உறுதியான தலைமைத்துவம். போராட்டத் தந்திரோபாயம் என்பனவற்றில் வழி நடாத்தப்படும் மக்கள் திரள் போராட்டங்கள் சரியான பாதையில் முன்னேறவே செய்யும். அப்போராட்டங்கள் விரைவில் புரட்சிகர நிலைப்பாட்டை எடுத்துக் கொள்ளும். அத்துடன் அவை எதிரி வர்க்கத்தின் நிர்ப்பந்தத்தால் புரட்சிகர ஆயுதம் தாங்கிய போராட்டமாக பரிணாமம் பெற்றுக் கொள்ளவே செய்யும். அத்தகைய ஆயுதம் தாங்கிய போராட்டம் கூட மக்கள் திரள் போராட்டமாக வளர்ச்சி பெறுவதன் மூலமே அப்போராட்டம் சரியான திசையில் வளர்ச்சி பெற்றுச் செல்ல முடியும். இப்போராட்டங்களின் அடிப்படை மக்களால் மக்களுக்காக மக்களின் விடுதலைக்கு என்பதாகவே இருக்க முடியும்.

வெகுஜனப் போராட்டங்களை ஆளும் வர்க்கங்கள் குறிப்பிட்ட எல்லைகளுக்கு அப்பால் அனுமதிப்பதில்லை. அதேநேரம் வெகுஜனப் போராட்டங்கள் எப்போழுதும் உச்ச நிலையில் இருந்து உயர்ந்த கட்டம் நோக்கிச் செல்லக் கூடியவையாகும்.

ஆனால் வழிநடாத்தும் தலைமைத்துவச் சக்திகளின் வழிநடத்தல்களின் தவறுகளும் பிசகுகளும் ஏற்பட்டால் வெகுஜனப் போராட்டங்கள் பின் தள்ளப்படுவதை வரலாறு கண்டிருக்கிறது. உதாரணமாக இலங்கையில் 1953ம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் இடம் பெற்ற மிகப் பெரிய வெகுஜனப் போராட்டம் வரலாற்று முக்கியத்துவமுடையாதாகக் காணப்பட்டது. அவ்வாறே அறுபதுகளின் பிற்கூறிலே வட பகுதியில் சாதியத்திற்கும் தீண்டாமைக்கும் எதிரான பரந்த வெகுஜனப் போராட்டங்கள் இடம் பெற்றன. சாதிய ஒடுக்கு வரலாற்றில் அவ் வெகுஜனப் போராட்டங்கள் ஒரு திருப்புமுனையை ஏற்படுத்தியது. அவ்வாறே மலையகத்திலும் தொழிற்சங்க இயக்கத்திலும் வெகுஜனபர் போராட்டங்கள் இடம் பெற்று வந்தன. இவற்றை விட அவ்வப்போது மக்கள் திரளினர் முன்னெடுத்த போராட்டங்கள் பல்வேறு பகுதிகளிலும் தளங்களிலும் இடம் பெற்றதை வரலாறு எடுத்துக் கூறும்.

வெகுஜனன்

> வர்க்க ஒடுக்குமுறையையும் அதன் காரணமான சகலவகை அடக்கு முறைகளையும் எதிர்த்து மக்கள் திரள் அன்றாடப் போராட்டங்களில் ஈடுபடுவதென்பது மக்களுக்குரிய ஒரு போராட்டப் பயிற்சிக்களமாகும்.

இன்று அத்தகைய வெகுஜனப் போராட்டங்கள் தேவைப்படுகின்றன. வளர்ந்து செல்லும் சமூக முரண்பாடுகளும் அவை சார்ந்த நெருக்கடிகளும் மக்களைப் பாரிய ஒடுக்கு முறைகளுக்கு உள்ளாக்கியுள்ளன. ஆனால் அவற்றுக் எதிரான வெகுஜனப் போராட்டங்கள் வெளிக்கிளம்பாத ஒரு சுழலைக் காணமுடிக்கின்றது. இந்நிலை ஏன் என்பது ஆழ்ந்து சிந்திக்கப்பட வேண்டியதாகும்.

ஆளும் வர்க்க சக்திகள் தமது பேரினவாத நிலைப்பாடு காரணமாக தேசிய இனப்பிரச்சினையை யுத்தமாகத் தொடர்ந்து முன்னெடுத்து வந்துள்ளனர். யுத்தத்தை நியாயப்படுத்தி வரும், அவர்களது நிலைப்பாடு சிங்கள மக்கள் மத்தியில் ஒரு பேரினவாத மாயையாகப் பரப்பப்பட்டுள்ளது. அத்துடன் தொழிற்சங்க இயக்கம் பாராளுமன்ற இடதுசாரிகளினாலும் தொழிற்சங்க வாதிகளாலும் சீரழிக்கப்பட்டுள்ளது.

மேலும் உலகமயமாதல் மூலம் பல்வேறு குறுக்கு வழி நம்பிக்கைகள் மக்களுக்கு போதைப் பொருள் போன்று வழங்கப்பட்டுள்ளன. பொருளாதாரப் போட்டி மூலம் சகலரும் சந்தரப்பங்களைப் பயன்படுத்தினால் முன்னேறி விடலாம் என்னும் வழியில் ஒரு பொருளாதார ஒட்டப் போட்டியில் இறக்கி விடப்பட்டுள்ளனர். இது ஒரு பெரும் ஏமாற்று என்பதும் பெரும் கொம்பனிகளும் பெரும் முதலாளிகள் பணக்காரர்கள் மட்டுமே லாபமும் சுகபோகமும் பெறமுடியும் என்பதையுமே உலகமயமாதல் உறுதிப் படுத்து கின்றது.

ஆனாலும் மக்கள் பாராளுமன்ற அரசியலுக்கு அப்பாலான வெகுஜனப் போராட்ட அரசியலில் இருந்து அந்நியப்படுத்துள்ளனர். அவ்வேலையை செய்வதில் அரசு சார்பற்ற நிறுவனங்கள் மிகவும் நாசுக்காகவும் கச்சிதமாகவும் செய்து வந்துள்ளன. 'அரசியல்' வேண்டாம்' போன்றவற்றை அரசுசாரா நிறுவனங்கள் பிரசாரப்படுத்தி தமது தாராள நிதி வளங்களால் மக்களை திசை திருப்பியும் விடுகின்றன. மேலும் இனத்துவம், தலித்தியம் பெண்ணியம், போன்றவற்றுக்கான கருத்தியல்களைப் பரப்பி வர்க்கப் போராட்டம் வர்க்க அரசியல் ஆகியவற்றைப் பலவீனப் படுத்தியும் கொள்கின்றன. மார்க்சிசத்திற்கு எதிரான பிரசாரத்தில் அரசு சாரா நிறுவனங்கள் ஒரு உலகவலைப் பின்னலையே ஏற்படுத்தி செயலாற்றி வருகின்றன.

இவற்றுடன் நவீன தகவல் ஊடகங்கள் மக்கள் மீது கடுமையான தாக்கங்களை விளைவித்தும் வருகின்றன. இருபத்தி நான்கு மணி நேர ஒளி ஒலி சேவைகள் ஒரு புறம் உலகமயமாதல் கருத்தியலைப் பரப்புகின்றன. மறுபுறம் மோசமான பண்பாட்டுச் சீரழிவை உண்டு பண்ணுகின்றன. கணணி தகவல் தொழில் நுட்பம் என்பதன் பன்முகச் செயற்பாடுகளும் மக்களுக்கு விரோதமானவையாகவே இயக்கப் படுகின்றன. விளையாட்டுத்துறை கூட இன்று உலகமயமாதலுக்கும் பல்தேசியக் கம்பனிகளின் சுரண்டலுக்கும் நன்கு பயன்படுத்தப்படுவதைக் காண முடிகின்றது. ஏதாவது அத்தியாவசியப் பொருளின் மீது விலையேற்றத்தை அரசாங்கம் செய்ய வேண்டுமானால் கிரிக்கற் போட்டி விறுவிறுப்பாக நடைபெறும் தினத்தில் செய்து கொண்டால் எவ்வித பிரச்சினையும் எழாது என்ற அளவுக்கு கிரிக்கற் போதை ஏற்றப்பட்ட நிலையில் மக்கள் காணப்படுகின்றனர்.

அதேவேளை இன்றைய அவல நிலைக்கு ஒரு ஆட்சி மாற்றம் அமைதியான தேர்தல் மூலம் வந்து எதிர்ப்புறத்திலிருக்கும் ஐக்கிய தேசியக் கட்சி அதிகாரத்திற்கு வந்து விட்டால் சகல பிரச்சினைகளும் தீர்ந்து விடும் என்னும் தவறான எதிர்பார்ப்பும் மக்களிடையே பரப்பப்படுகின்றது. ஆண்ட பரம்பரையினர் மீண்டும் ஒரு முறை ஆள முற்பட்டுள்ளனர். இது தான் இலங்கையின் அரை நூற்றாண்டின் பாராளு மன்ற ஆட்சியில் மாறி மாறி இடம் பெற்றது.

இதற்கு முடிவு வேண்டும். அரசியல் சிந்தனையிலும் செயற்பாட்டிலும் மாற்றம் வேண்டும். அந்த மாற்றத்திற்கான பாதையைத் தேடிக் கொள்ளல் வேண்டும். அந்தப் பாதை போராட்டப் பாதை தான் பாராளுமன்றப் பாதை அல்ல. போராட்டப் பாதை என்றால் அது வெகுஜனப் போராட்டங்களில் இருந்து ஆரம்பிக்க வேண்டும். அந்தப் போராட்டத் தளத்திலிருந்தே உயர்ந்த கட்டப் போராட்டங்களுக்கான பயிற்சியும் படிப்பினைகளுகம் அனுபவங்களும் பெறப்பட முடியும். எனவே வெகுஜனப் போராட்டங்களின் தேவையும் அவசியமும் ஒடுக்கப்படும். மக்கள் மத்தியில் உள்ள அரசியல் விழிப்பு பெற்று வரும் சக்திகளால் உணரப்படுவது முக்கியமான பொறுப்பாகிறது.

இன, வர்க்க, சாதிய, பெண்ணிய ஒடுக்கு முறைகளுக்கு உள்ளாகி நிற்கும் மக்கள் அனைவரும் முன்னெடுக்க வேண்டிய பரந்த வெகுஜனப் போராட்டங்களுக்கு மாக்சிசம் லெனினிசம் மாஓசேதுங் சிந்தனை என்னும் மங்கா ஒளியானது மட்டுமே நீண்டதொரு வழிகாட்டக் கூடியமாகும்.

படிப்பகம்

www.padippakam.com



# மலையக ஆசிரியர் - மாணவர் உறவை பலப்படுத்துவோம்

தலவாக்கொல்லை தமிழ் மகா வித்தியாலய உயர்தர வகுப்பு மாணவனொருவன் ஓடும் ரயிலின் முன்பாய்ந்து தற்கொலை செய்து கொண்டதை அடுத்து தலவாக் கொல்லையில் மட்டுமன்றி முழு மலையகமெங்கும் மாணவர்-ஆசிரியர் - பெற்றோர் உறவில் பாரிய விரிசல் ஏற்பட்டுள்ளது. இந் நிலையை வளர்ப்பதில் சில ஊடகங்கள் முக்கிய பங்கு வகித்துள்ளன. பாரிய தவறிழைத் துள்ளன. சில தொழிற்சங்கத் தலைவர்களின் ஆசிரியர் விரோத அறிக்கைகளை அப்படியே பிரசுரித்து வெளியிட்டதன் மூலம் அத்தவறுகளை இழைத்துள்ளன.

ஒரு சமூக உருவாக்கத்தில் ஆசிரியர்கள், மாணவர்கள் என்போரின் பங்கு அளப்பரியது. சமூக அநீதிகளையும், தவறுகளையும் கண்டு கொதித்து எழுந்து சமூக மாற்ற நடவடிக்கைகளில் மாணவர்களும், ஆசிரியர்களும் ஆரோக்கியமான பங்களிப்பை செய்ய தகுதியுள்ளவர்கள். உலகநாடுகளில் நடைபெற்ற தேசியவிடுதலை, இனவிடுதலை, சோஷலிசப் புரட்சிப் போராட்டங்களிலும் மாணவர்களின் பங்களிப்பும் குறிப்பிடத்தக்கது ஆசிரியர்களின் பங்களிப்பும் நிறையவே இருந்துள்ளன. மலையகத்தில் இடம் பெற்ற பல போராட்டங்களிலும் ஆசிரியர்களினதும் மாணவர்களினதும் பங்களிப்பு குறிப்பிடத்தக்கதாகும். மாணவன் ஒருவனின் சமூக அக்கறை பாடசாலைகளிலேயே உருவாகிறது. சமூக அநீதிகளை கண்டு கொதித் தெழும் உணர்வும், போராட்ட உணர்வும் மாணவர்களுக்கு இயல்பாகவே, ஏற்படும். ஏற்பட வேண்டும். மாணவர்களின் உரிமைகளுக்கான போராட்டத்தில் பாடசாலையினுள் கிடைக்கும் அனுபவங்களின் மூலம் சமூக போராட்டங்களிலும் அவர்களை பங்கெடுக்க தூண்டும். மாணவர்கள் உரிமைப் போராட்டத்தில் ஈடுபடுவது என்பதும், அநீதிகளை கண்டு கொதித்தெழுவது என்பதும் வெறும் 'மீறல்' நடவடிக்கைகளுக்கு வரையறுக்கப்படும் போது அர்த்தமற்ற தாகி விடுகின்றன.

தலவாக்கொல்லை தமிழ் மகா வித்தியாலயத்தில் சில ஆசிரியர்களுக்கு எதிராக முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்களுக்கு அடிப்படை இருப்பின் விசாரிக்கப்பட்டு. உண்மையாயின் அவ்வாசிரியர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். ஆசிரியர்கள் ஒழுங்குகள், விதிகள், சட்டங்கள். அங்கீகரிக்கப்பட்ட சமூக பழக்கவழக்கங்களுக்கு அப்பாற்பட்டவர்களாக இருக்க முடியாது. இந்நிலைப்பாட்டில் இன்னொரு பார்வைக்கு இடமிருக்க முடியாது.

குறிப்பிட்ட அந்த சில ஆசிரியர்களுக்கு எதிரான தரக்குறைவான வாசகங்கள் பாடசாலை கட்டிட சுவர்களில் எழுதப் பட்டிருந்தன. அவற்றை எழுதியதாக நிரூபிக்கப்பட்ட மாணவர்கள் சிலருக்கு எதிராக பாடசாலை அதிபரும், சில ஆசிரியர்களும் எடுத்த நடவடிக்கைகளின் விளைவாகவே ஒரு மாணவன் தற்கொலை செய்துகொள்ளும் நிலை ஏற்பட்டுள்ளது. மாணவர்கள் கண்டிக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு எதிராக பொலிசில் முறைப்பாடு செய்யப்பட்டு பொலிசாரினால் அவர்கள் விசாரிக்கப் பட்டுள்ளனர். அதன் பிறகு பெற்றோர்களை பாடசாலைக்கு அழைத்து வரும் படி மாணவர்கள் பணிக்கப் பட்டுள்ளனர். இதனையடுத்தே மனமுடைந்து போன மாணவனொருவன் தற்கொலை செய்து கொண்டான். ஒரு மாணவனின் உருவாக்கத்திற்கு மலையக சமூகம் எவ்வளவு கஷ்டப்பட வேண்டியிருக்கும் என்பது சொல்லித் தெரிய வேண்டிய தல்ல. உயர்தர வகுப்பு மாணவனை இழப்பது என்பது நினைத்தும் பார்க்க முடியாததுதான்.

இந்நிலையில் மாணவன் ஒருவன் இறந்துவிட்டதனால் மாணவர்கள் செய்தது எல்லாம் சரியென்றோ, ஆசிரியர்கள் பற்றி சுவர்களில் எழுதப்பட்ட வாசகங்கள் யாவும் நிரூபிக்கப் பட்டுவிட்டதென்றோ எடுக்க முடியாது. ஆசிரியர்களுக்கு வாசகங்களை மாணவர்கள் எழுதும் அளவிற்கும், மாணவன் ஒருவன் தற்கொலை செய்து கொள்ளும் அளவிற்கும் மாணவர்-ஆசிரியர் உறவு சீரழிந்திருக்கிறது என்பது வெளிப்படை யாகிறது. மாணவர் சமூகமும் ஆசிரியர் சமூகமும் நேர் எதிர் அக்கறைகளை கொண்டவர் களாக இருக்க முடியாது. கற்றலும், கற்பித்தலும் முரண்பட்டால் கல்வி வளர்ச்சிக்கு இடமே இருக்காது.

எனவேஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் முரண்பாடு ஏற்படுமிடத்து சிநேக பூர்வ மாக தீர்வு காணப்பட வேண்டும். மாணவர்களது மனநிலை, கௌரவம், சமூக அந்தஸ்து என்பது ஆசிரியர்களுக்கும் உரியதுதான். அதை கருதி அவர்கள் இருசாராரும் பொறுப்புடன் நடந்துகொள்ள வேண்டும். அத்துடன் பெற்றோர்களுடனும் பாடசாலை மாணவர்களும் ஆசிரியர் களும் நல்லுறவை கொண்டிருக்க வேண்டும். இதற்கு அடிப்படையாக சமூக அக்கறை இருந்தால்தான் அவ்வாறான நல்லுறவுகள் ஏற்பட முடியும்.

மாணவர்களை வெறும் கற்கும் யந்திரங்களாகவும் பார்க்கின்ற பார்க்க விரும்புகின்ற [illegible] பிரச்சினைகள் ஏற்படும்[illegible] யகத்தை சார்ந்த கல்வி அதிகாரிகளும் இதுவிடயத்தில் கூடிய அக்கறை செலுத்த வேண்டியவர்களாக இருக்கின்றனர். மலையக சமூகத்திற்கும் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் இருக்கும் தொடர்பு தற்கால வளர்ச்சி, மலையக கல்வி எய்த வேண்டிய இலக்கு என்பவற்றை அடிப்படையாகக் கொண்டே மாணவர்கள் தொடர்பாகவோ ஆசிரியர்கள் தொடர்பாகவோ நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். பிரச்சினைகளை தீர்க்க வேண்டும். அதிகாரத்தை நிலைநாட்டு வதை நோக்காகக் கொண்டு கல்வி அதிகாரிகள் செயற்படலாகாது. தலவாக்கொல்லை தமிழ் மகா வித்தியாலய பிரச்சினையில் நேரத்துடனேயே அவ்வாறான அணுகு முறையை எடுத்திருந்தால் இன்றைய நிலையை தவிர்த்திருக்கலாம்.

தொழிற்சங்கவாதிகளோ அரசியல் வாதிகளோ தனிப்பட்ட விளம்பரங்களை தேடிக்கொள்ளும். நோக்கில் பாடசாலை பிரச்சினைகளை அணுகக்கூடாது. தலவாக கொல்லை தமிழ் மகா வித்தியாலய பிரச்சினையில் மலையக மக்கள் முன்னணி தலைவர்கள் நடந்து கொண்ட விதம் மாணவர் ஆசிரியர் பிரச்சினையை தீர்ப்பதற்கு பதிலாக உக்கிரமடைய செய்துவிட்டது.

அப்பிரச்சினையுடன் சம்பந்தப்பட்ட ஆசிரியர்களில் சிலர் மலையக மக்கள் முன்னணியுடன் இருந்து பி.ஏ.காதருடன் வெளியேறியவர்களாவர். அந்த காழ்ப்புணர்ச்சியுடன் ஆசிரியர்களுக்கு எதிரான நிலைப்பாட்டை ஊக்குவிப்பதில் பெ. சந்திரசேகரனும். மு.சிவலிங்கமும் நடந்து கொண்டார்களா என்றும் எண்ணத்தோன்றுகிறது அப்பிரச்சினை பற்றி அவர்கள் வெளியிட்ட கருத்துக்களுடன் சில ஊடகங்களை அவர்கள் விரும்பிய திசைக்கு திருப்பியதாலும் தலவாக் கொல்லை தமிழ் மகா வித்தியாலய பிரச்சினைக்கு இன்னும் தீர்வு [illegible]வில்லை. மலையக பிரச்சினைக[illegible] உண்மைத் தன்மையை ஆராய[illegible] தொழிற்சங்க வாதிகளின் அறிக்[illegible]களை வேதவாக்காக ஏற்று பிரசுரி[illegible] கருத்து வெளியிடும் மரபிலிரு[illegible] இன்னும் சில ஊடகங்கள் வி[illegible] வில்லை. அந்த ஊடகங்களில் [illegible]யான கருத்துக்கள் எரியும் நெரு[illegible] எண்ணெய் வார்ப்பதாக அமை[illegible] விட்டது.

மலையக மக்கள் முன்னணி தலைவ[illegible] இப்பிரச்சினையை பயன்படுத்தி தல[illegible]கொல்லை தமிழ் மகா வித்தியாலயத்[illegible] தங்களின் அரசியல் நலனுக்கு த[illegible] கட்டுப்பாட்டிற்குள் மீண்டும் கொண்[illegible] நினைத்திருக்கலாம். வி.ரி.தர்ம[illegible]கத்தின் மறைவுக்கு முதல் அவர்க[illegible] கட்டுப்பாட்டில் அப்பாடசாலை இருந்[illegible] அதனால் அவர்களின் நடவடிக்கை[illegible] இலகுவாக்கப்பட்டன.

இவ்வாறான நிலைமைகளிலிரு[illegible] மலையக கல்வி மீட்டெடுக்கப்[illegible] வேண்டும். கட்சி, தொழிற்சங்க நடவ[illegible]கைகளுக்கு அப்பால் பாடசாலைக[illegible] சுதந்திரமாகவும், ஜனநாயகமாக இயங்க வைக்க வேண்டும். அது[illegible] ஆசிரியர் மாணவர் பெற்றோரிடை[illegible] சுமுகமான உறவு அவசியம்.

**ம. அழகேசன்**

இதற்கு முன்னோடியாக பல நடவ[illegible]கைகளை மாணவர்கள[illegible] பாடசாலைக்கு உள்ளும் வெளியிலும் சமூக மேம்பாட்டு நடவடிக்கைக[illegible] ஈடுபடமுடியும். அரசியல் கட்சி, தொ[illegible] சங்க நடவடிக்கைகளை ஈடுப[illegible] சுதந்திரம் இருக்கின்ற அதேவே[illegible] அதன் சில தலைவர்கள் பிழைப்பா[illegible] கொண்டுள்ள பிரித்தாலும் சூழ்ச்சி[illegible] பலியாகி பாடசாலைகளின் இயக்கத்[illegible] முடக்கி, மலையக கல்வியை பாலா[illegible] கூடாது.

மேற்படி நடவடிக்கைகள் தொடர்ச்சிய[illegible] முன்னேடுக்கப்படுகின்றபோது மாண[illegible] தற்கொலைகளை தடுத்து நிறு[illegible] முடியும். ஆசிரியர்களுக்கு எதிர[illegible] பாடசாலை சுவர்களில் எழுதும் நில[illegible] மாறும்.

# பாலியல் குற்றச்செயல்களுக்கு எதிராக முழு சமூகமும் அணிதிரள வேண்டும்



நாவலப்பிட்டிய இம்புல்பிட்டி தோட்டத்தை சேர்ந்த சோலைமலை உமாதேவி என்ற யுவதியின் சடலம் உருக்குலைந்த நிலயில் கண்டுப்பிடிக்கப்பட்டது. அவர் ஒரு குழுவினரால் வன்புணர்ச்சிக்குட்படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்டிருக்கிறார். அவர் தையல் பயிற்சி வகுப்பிற்கு சென்றுவிட்டு வீடு திரும்பும்போது கடத்திச் செல்லப்பட்டிருக்கிறார்.

இன்று நாடெங்கும் பரவலாக நடைபெற்றுக் கொண்டிருக்கும் வன்புணர்ச்சி சம்பவங்களில் ஒன்றாகவே மேற்படி சம்பவம் நடைபெற்றிருந்தாலும் மலையகத்தமிழ் சமூகத்தில் ஒருவருக்கு ஏற்படும் போது நீதியை நிலைநாட்டுவது என்பது மேலும் சிரமமாகவே இருக்கிறது.

மேற்படி வன்புணர்ச்சியில் ஈடுபட்டவர் என்ற சந்தேகத்தில் கைது செய்யப்பட்ட பெரும்பான்மைச் சமூகத்தை சேர்ந்த இளைஞன் ஒருவனை காப்பாற்றும் முயற்சிகளில் கொழும்பில் இயங்கும் மனித உரிமை அமைப்பொன்று ஈடுபட்டதாக தெரிகிறது. சந்தேக நபரான அவ்விளைஞன் அந்த மனித உரிமைகள் என்.ஜீ.ஓவுடன் தொடர்பு டையவர் என்பதால் அம்முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதாக அறியமுடிகிறது.

ஒரு பெண்ணே அவ் என்.ஜீ.ஓ.வின் தலைவராக இருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது. பாதிக்கப்பட்ட யுவதியின் மாமன் ஒரு பொலிஸ் பரிசோதகராக இருந்தபோதும் பொலிஸ் விசாரணையில் ஆமைவேதத்திலேயே நகர்கிறது.

தலவாக்கொல்லையில் ஒரு மாணவி கடத்திச்செல்லப்பட்டு வன்புணர்ச்சிக் குட்படுத்தப்பட்டுள்ளார். அது பற்றி அப்பகுதி மக்கள் கொடுத்த அழுத்தத்தின் பயனாக பெரும்பான்மை இனத்தை சேர்ந்த இரண்டுபேர் கைது செய்யப்பட்டனர். எனினும் விசாரணைகள் உரியமுறையில் நடத்தப் படவில்லை என தெரியவருகிறது. இதுபற்றி சட்டமா அதிபருக்கு செய்யப்பட்ட முறைப்பாட்டை அடுத்து விசாரனைகளை மீண்டும் முறையாக நடத்தும் படி தலவாக்கொல்லை பொலிசார் பணிக்கப் பட்டுள்ளனர். கைதுசெய்ய் பட்டவர்கள் பெரும்பான்மை இனத்தை சார்ந்தவர்கள் என்பதாலும். அவர்கள் அரசியல் செல்வாக்குடையவர்கள் என்பதாலும் விசாரணைகள் திசை திருப்பப்பட்டதாக கூறப்படுகிறது.

இதேபோன்று மருதானை பொலிஸ் சோதனை சாவடியில் வைத்து பண்டாரவளையை சேர்ந்த பெண் ஒருவர் பொலிசாரினால் வன்புணர்ச்சிக் குட்படுத்தப்பட்டார். அவரும் அவரது சாட்சிகளும் உரியவாறு சாட்சியமளிக்க கூடாதென பயமுறுத்தப்பட்டுள்ளனர்.

இச்சம்பவங்களில் பாதிக்கப்பட்டவர்கள் மலையகத்தமிழ் பெண்கள் என்பதால் விசாணைகள் அசமந்த போக்குடன் நடைபெறுவது மட்டுமின்றி, பொது மக்களின் கவனத்தை ஈர்த்ததாகவும் இல்லை. இவ்வாறான சமூக பாரபட்சம், அநீதிகளுக்கு எதிராக சரியான தலையீடுகளையும், பங்களிப்பையும் மலையக சமூகமே செய்ய வேண்டியிருக்கிறது. அதன் பிறகே ஏனைய சமுகத்தவர்களின் ஆதரவை பெறமுடியும்.

உடல் ரீதியானது, உளரீதியானதுமான பாதிப்புகளை கொண்ட வன்புணர்ச்சி போன்ற குற்றச்செயல்கள் மலையகப் பெண்கள் மீது அதிகம் புரியப்படுவதற்கு காரணம் அவர்கள் பலவீனமானவர் களாக, பாதுகாப்பற்றவர்களாக, இருப்பதுதான். அந்நிலைமை மாற்றப்பட வேண்டுமாயின் இவ்வகையான குற்றச் செயல்களினால் பாதிக்கப்படுபவர்களுக்கு ஆதரவாக முழு சமுகமும் அணிதிரள வேண்டும். அப்போதே எதிர்காலத்தில் இவ்வாறான குற்றச்செயல்களை நடைபெறாது தடுத்து நிறுத்த முடியும். நடைபெற்ற அநீதிகளுக்கு நீதியை பெற்றுக்கொள்ள முடியும். குற்றவாளிகளை தண்டிக்க முடியும்.

# பகிரங்க கடிதம் ........ தோட்ட வீடமைப்பு கடனுக்கு ........ ஈ.பி.எப். பிணையாக வைப்பட்டதை மறுக்காதீர்கள்.

மதிப்பிற்குரிய சந்திரசேகரன் ஐயா,

உண்மைகளை எடுத்துக்கூறும்போது நீங்கள் சினமடைவீர்கள். உண்மையா[illegible] சம்பவங்களை மறந்துவிட்டது போலும் நடிப்பீர்கள். ஆனால் தற்போது உண்[illegible]களை மறுத்தும், திரித்தும் கூறுமளவிற்கு நல்லதொரு பாராளுமன்றவாதியா[illegible] வளர்ந்துவிட்டீர்கள்.

நீங்கள் தோட்ட வீடமைப்பு பிரதியமைச் சராக இருந்த போது தோட்டங்களி[illegible] வீடுகள் கட்டப்பட்டதை மறக்க மாட்டீர்கள். ஏனெனில் அது உங்களுக்கு கிரடி[illegible] அவ்வீடுகளை கட்டிகொள்வதற்கு தேசிய வீடமைப்பு திணைக்களத்தினூடா[illegible] தொழிலாளர்களுக்கு கடன்வசதி செய்து கொடுக்கப்பட்டதாக கூறுகிறீர் க[illegible] அக்கடனுக்கு பிணையாக தோட்ட தொழிலாளர்களின் ஊழியர் சேமலாப நி[illegible] (ஈ.பி.எப்.) வைக்கப்பட் டுள்ளது என்பதை மறுக்கிறீர்கள். அக்கடன் வசதியா[illegible] தோட்டத்தொழி லாளர்கள் கடனாளியாகியுள்ளனர். ஓய்வு பெறும் போது அவர்களி[illegible] ஊழியர் சேமலாபநிதியில் பெரும்பகுதி அக்கட னுக்காக கழிக்கப்பட்ட சம்பவங்க[illegible] பல நிகழ்ந்துள்ளன. இருந்தும் நீங்கள் மறுக்கிறீர்கள்.

அண்மையில் தினக்குரல் பத்திரிகையில் மலையக வலம் பகுதியில் மேற்ப[illegible] கடன்வசதிக்காக ஊழியர் சேமலாப நிதி பிணையாக வைக்கப்பட்டது பற[illegible] எழுதப்பட்டிருந்தது. அதற்காக உங்கள் மீது விமர்சனங்கள் முன்வைக்கப்பட[illegible]ருந்தன. நீங்கள் அதற்கு மறுப்பு எழுதியி ருந்தீர்கள். நீங்கள் தோட்ட வீடமை[illegible] பிரதியமைச்சராக இருந்த போது கொடு க்கப்பட்ட வீட்டுக்கடனுக்கு ஊழியர் சேமலா[illegible] நிதி பிணையாக வைக்கப் படவில்லை என்று கூறியிருந்தீர்கள்.

நீங்கள் கூறுவது போல சரியயென்றால் ஓய்வுபெறும்போது ஊழியர் சேமலாபநி[illegible]யிலிருந்து வீட்டுக்கடன் வட்டியுடன் கழிக்கப்படுகிறதே. அது பற்றி நீங்க[illegible] அறியவில்லையா? அறிந்து கொள்ள விருப்பமில்லையா? அறிந்திருந்தால் அதற்[illegible] எதிராக உங்களது அபிப்பிராயம் என்ன?

பிணையில்லாமல் கடன் வழங்கப் பட்டதாக நீங்கள் கூறுவதை ஏற்றுக் கொள்வதற்[illegible] தொழிலாளர்கள் முட்டாள்கள் அல்ல.

இலங்கை அரசாங்கம் பெரும்பான்மை சிங்கள மக்களுக்கு ஏற்படுத்திக் கொடுத்[illegible] வீடமைப்பு முறைகளுக்கு ஏற்றவகையில் தோட்ட தொழிலாளர் களுக்கும் ஏற்படுத்தி[illegible] கொடுக்க வில்லை என்பதே அடிப்படையான தவறு? நீங்கள் பிரதியமைச்சரா[illegible] இருந்த போது அத்தவறை வெளிப்படையாக கூறவில்லை. இப்போதாவது அ[illegible] அரசாங்கத்தின் தவறென்று கூறுங்கள்.

அதைவிட்டுவிட்டு தோட்ட வீடமைப்பு கடனுக்கு பிணையாக ஊழியர் சேமலாப நி[illegible] வைக்கப்படவில்லை என்று ஏன் உண்மைக்கு மாறாக பேசுகிறீர்கள்?

இப்படிக்கு
*என். வீராய்*
தலவாக்கொல்லை

படிப்பகம்

www.padippakam.com



# அரசியல் யாப்பின் சாராம்சம்

த்தானியாவின் வெள்ளைக்கார
புவான சோல்பரியின் தலைமையி
ன வெள்ளை எசமானர் குழுவே
ங்கையின் பாராளுமன்ற ஆட்சிக்
ன அரசியலமைப்பை வரைந்து
டைமுறைப்படுத்துமாறு விட்டுச்
ன்றது. அத்துடன் இலங்கையின்
த்த மேட்டுக்குடிப் பிரபுக்களிடம்
திகாரத்தையும் கைமாற்றிக்
டுத்தும் கொண்டார்கள்.

47ல் நடைமுறைக்கு வந்த அந்த
சியல் யாப்பு பின்பு 1972ல் சிற்சில
ற்றங்களைப் பெற்றது. அந்த
ப்பிற்கு ஒருவகையான தேசியத்
ர்மையும் ஏற்றிப் பார்க்கப்பட்டது.
வளவுக்கு அந்த அரசியல் யாப்பை
டு புளங்காகிதம் கொண்டாலும் அது
ப்படையில் உயர்வர்க்க ஆட்சியையும்
ளத்த சிங்கள மேலாண்மையையும்
ன்மைப் படுத்தியதாகவே அமைந்து
ாண்டது.

'8ல் மீண்டும் ஒரு புதிய அரசியல்
ப்பு மீள்வரைதலுக்கு உள்ளாக்கப்பட்டு
டைமுறைக்கு கொண்டு வரப்பட்டது.
தனை முன்னின்று வரைந்து
றைவேற்றி நடைமுறைப்படுத்தியவர்
. ஆர். ஜெயவர்த்தனா. அமெரிக்க
ான்ஸ் பிரித்தானியா போன்ற
தலாளித்துவ நாடுகளின்
நுபவங்களில் இருந்தே நிறைவேற்று
திகாரம் கொண்ட ஜனாதிபதி
றையும் பாராளுமன்ற நடை
றைகளும் கொண்டு வரப்பட்டது.

ன் மூலம் பாராளுமன்றத்தை விட
றைவேற்று அதிகாரம் முதன்மையா
தாக்கப்பட்டது. அத்துடன்
ராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு
ரும் பான்மையை எந்தவொரு
சியும் பெறாதவாறான விகிதாசாரப்
திநிதித்துவ தேர்தல் முறை
த்தப்பட்டது. தனிக் கட்சி தனி நபர்
வாதிகாரம் அப்பட்டமாக அரசோச்சு
ற்கு வழிவகை ஏற்படுத்தப்பட்டது.

வை அனைத்தும் முதலாளித்துவ
ராளுமன்ற ஜனநாயகம்
ன்னும் வட்டத்திற்குள்
ர்றே முன்னெடுக்கப்
டன. முதலாளித்
வ நிலவுடமை
ன்கள் என்னும்
லைகளை மீறாத
ாத்து சுகம் வசதி
ய்ப்புப் பெற்ற உயர்
க்கத்தின் தேவை
ர்-விருப்பு வெறுப்பு
ன்பனவற்றின் அடிப்
டயில் இருந்தே அவை
னைத்தும் செய்யப்பட்டன.
தன் ஊடாக அரசு யந்திரமும் அதன்
வாக பிரிவுகளும் அரசியல் யாப்பினால்
துகாக்கப்பட்டு உறுதி செய்யப்பட்டது.

த்தகைய மூன்று அரசியல்
ப்புகளின் வழி காட்டலில் இலங்கை
டு ஐம்பத்தி நான்கு ஆண்டுகளைக்
ந்து வந்துள்ளது. இரண்டு நிலவுடமை
தலாளித்துவ ஆளும் வர்க்க கட்சிகள்
ரினவாதத்தை கடைப்பிடித்தும்
ந்துள்ளன. தொடர்ச்சியான
ரினவாதத் தலைமையை அரசியலில்
தாடர்ந்து நிலை நாட்டியும்
ந்துள்ளன.

தமது ஆட்சி அதிகார வரவிற்கும் நிலைப்பிற்கும் இவ் ஆளும் வர்க்க கட்சிகள் பேரினவாதத்தை கடைப் பிடித்தும் வந்துள்ளன. தொடர்ச்சி யான பேரினவாத நிலைப்பாடும் உயர்வரக்க சக்திகளுக்கான வாய்ப்பு வசதிகள் பேணப்பட்டு வந்தமையானது நாட்டையும் மக்களையும் மோசமான துன்பங்களுக்கும் பாரிய அழிகளுக்கும் உள்ளாக்கிக்கொண்டது.

இன்றைய பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் கீழ் பாராளு மன்றத்திற்கும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிக்கும் இடையில் இழுபறியும் நெருக்கடியும் தோன்றி யுள்ளது. ஜனாதிபதி தனது நிறை வேற்று அதிகாரத்தை அரசியல் அமைப்பு விதிகளுக்கு அப்பால் சென்று எதேச்சதி காரமாகச் செயல் படுத்தி பாராளு மன்றத்தை இரண்டு மாதங்களுக்கு இடை நிறுத்தியும் வைத்துள்ளார். அத்துடன் சர்வசன அபிப்பிராய வாக்கெடுப்பு நடாத்தி அரசியலமைப்பைப் புதிதாக வரையப் போவதாகவும் ஜனாதிபதி கூறி வருகின்றார்.

இந்நிலையில் தற்போதைய அரசியல் நெருக்கடிக்குத் தீர்வாக பாராளுமன்ற அதிகாரத்தைத் தங்களிடம் ஒப்படைக்கும்படி யூஎன்.பி. ஆர்ப்பரித்து வருகின்றது. இரண்டு ஆளும் வர்க்க பேரினவாதக் கட்சிகளும், இணைந்து ஒரு தேசிய அரசாங்கம் அமைக்க வேண்டும் என சிஹல உறுமய வற்புறுத்தி வருகின்றது. ஜே.வி.பி.யோ

**தற்போதைய அரசியல் யாப்பை மாற்றியமைத்து விட்டால் சகல பிரச்சினைகளும் தீர்ந்து விடும் என்பது சுத்த ஏமாற்றும் மோசடியுமாகும்**

நன்னடத்தை அடிப்படையில் ஒரு தகுதி காண் அரசாங்கம் செயற்பட வேண்டும் என்கிறது. இன்னும் சிலர் சகல கட்சிகளையும் கொண்ட கூட்ட ரசாங்கம் தோற்றுவிக்கப்பட வேண்டும் என்கிறார்கள். தமிழ்க் கட்சிகள் ஜனாநாயகத்தை பாதுகாப்பதும் இன்றைய அரசாங்கத்தை வீழ்த்துவதும் என்னும் பெயரில் தமது விசுவாசத்திற்குரிய ஐக்கிய தேசியக் கட்சியுடன் கைகோர்த்து நிற்கின்றன. அதேவேளை பணம் பதவி இரண்டையும் பெற்ற இரண்டு தமிழ்க் கட்சிகள் அரசாங்கத்தின் காலடியில் கிடந்து வருகின்றன. முஸ்லீம் காங்கிரஸ் இரண்டாகப் பிளந்து இரண்டு பேரினவாதப் பக்கத்திலும் நின்று வருகின்றன.

ஆனால் இன்றைய நெருக்கடியின் உண்மையான அடிப்படைகள் எவை என்பதே விவாதிக்கப்படவேண்டிய தாகும். அதிகாரத்திற்கான நெருக்கடி இழுபறி என்னும் பாராளுமன்றத் திரை களை நீக்கி விட்டு உள்ளே சென்று நோக்கும் போது தான் முதலாளித் துவப் பாராளுமன்றம் கட்டிக் காத்து வரும் சர்வாதிகாரத்தின் தாற்பரியத்தைக் கண்டு கொள்ளலாம்.

முதலாளித்துவ ஜனநாயகம் என்பது அப்பட்டமான மோசடியும் ஏமாற்றுமாகும். முதலாளித்துவம் தனது ஆரம்பகாலம் முதல் பாட்டாளி வர்க்கம் உள்ளிட்ட அனைத்து உழைக்கும் மக்களையும் தனது அலங்கார வார்த்தைகளால் ஏமாற்றி தனது இருப்பை உறுதிப் படுத்தி வந்துள்ளது. உதாரணமாகத் தனக்கு விரோத வர்க்கமாக இருந்த நிலவுடமை வரக்கத்தைத் தோற்கடிப் பதற்கு ஆரம்ப கால முதலாளித்துவம் ஐரோப்பாவில் சுதந்திரம். சமத்துவம் சகோதரத்துவம்" என முழக்கமிட்டு தொழிலாளி வர்க்கம் உட்பட அனைத்து மக்களையும் தன்னோடு அரவணைத்துக் கொண்டது. ஆனால் ஆட்சி அதிகாரத்தை அரசு யந்திரத்தைப் தமது கைகளுக்கு எடுத்துக் கொண்டதும் தனது முதலாளித் துவ சர்வாதிகாரத்தை நோக்கியே வீறு நடைபோட்டது. தான் முழக்கமிட்ட "சுதந்திரம் சமத் துவம் சகோதரத் துவம்" என்பனவற்றை தமக்குரியன வாக்கியதே தவிர ஏனைய மக்களுக்கு உரியதாகக் கொள்ள வில்லை.

இன்றுவரை உலகம் பூராவும் முதலாளித்துவம் எத்தகைய பெயர்களிலும் வடிவங்களிலும் அரசியல் யாப்புகளை வரைந்து கொண்டாலும் அவை அனைத்தும் மிகப்பெரும் சொத்துடைய உயர் மேட்டுக்குடி வர்க்க நலன்களைப் பாதுகாத்துக் கொண்டிருப் பதையே அவை பிரதிபலிக்கின்றன.

முதலாளித்துவம் காலத்தின் வளர்ச்சிக்கு ஏற்ப தமது அரசியல் யாப்புகளை திருத்தியும் மாற்றியும் வரைந்து கொள்வதாகப் பாசாங்கு செய்து வந்திருக்கிறது. அவ்வேளையில் எல்லாம் அவ் யாப்புகளின் சாராம்சம் மாற்றப் படுவதில்லை. மக்களின் அதிருப்தி, கண்டனங்கள், எதிர்ப்புகள் என்பன வற்றை திசை திருப்பும் வகையில்

**நிலவுடமை முதலாளித்துவ ஏகாதிபத்திய நலன்களையே சகல யாப்புகளும் பேணிப்பாதுகாத்து வந்துள்ளன.**

சிலவகைக் கண்துடைப்பு நடவடிக்கை களை மட்டுமே செய்து கொள்கின்றன. அதேவேளை தம்மை நோக்கி மக்களது எதிர்ப்புகள் திரும்பா வண்ணமான அடக்கு முறை மிகுந்த அடிப்படை அம்சங்களையும் இறுக்கி வரைந்து கொள்கின்றன.

மேலும் ஏற்கனவே நடைமுறையில் இருந்து வரும் அரசியல் யாப்பின் ஓட்டைகள் நீக்கல்களைப் பாவித்து வர்க்க, இன மக்கள் சார்பான அரசியல் சக்திகள் பாராளுமன்றத்திற்கு வந்து கொள்வதை ஒரு குறிப்பிட்ட எல்லை வரையுமே ஆளும்வர்க்கங்கள் அனுமதித்துக் கொள்கின்றன. அத்தகைய எல்லைகளைத் தாண்டியதும் அவ்வாறு உட்புகுந்து கொள்வதைத் தடுப்பதற்கு ஏற்ற வழிமுறைகளை அரசியல் யாப்புகளின் திருத்தம் மூலம் செய்து கொள்கின்றன.

உதாரணத்திற்கு பிரான்ஸ் நாட்டை எடுத்துக் கொண்டால் இரண்டாவது உலக யுத்தத்திற்குப் பின் கம்யூனிஸ்ட் கட்சி மிகப் பலம் பெற்ற கட்சியாக விளங்கியது. முதலாவது இடம் பெற்ற தேர்தலில் நூற்றுக்கு மேற்பட்ட ஆசனங்களை கம்யூனிஸ்ட் கட்சி பெற்றுக்கொண்டது. ஆனால் பிரஞ்சு முதலாளித்துவம் சும்மா இருந்து கொள்ளவில்லை. தனது அரசியல் யாப்பு தேர்தல் திருத்த சட்டம் என்பனவற்றின் மூலம் தொகுதி ரீதியாகவும் விகிதாசார முறைமையிலும் கம்யூனிஸ்ட் கட்சி பெரும்பான்மை ஆசனங்களைக் கைப்பற்றுவதை திட்டமிட்டு மிகத் தந்திரமாகத் தடுத்துக் கொண்டது. இவ்வாறு வரலாற்றில் ஒவ்வொரு நாட்டிலும் முதலாளித்துவ அரசியல் யாப்புகள் திருத்தங்கள் மாற்றங்கள் மூலம் தமது அடிப்படை வர்க்க நலன்களைப் பேணி வந்துள்ளன.

இலங்கையிலும் வெவ்வேறு அளவுகளில் இதுவே தான் சாராம்சத்தில் இடம் பெற்று வந்துள்ளது. இப்பொழுதுள்ள அரசியல் யாப்புத் திருத்தத்தின் முக்கிய குறிக்கோள் தமிழ் முஸ்லீம் மலையக கட்சிகளின் எண்ணிக்கையை இப்போது இருப்பதை விடச் சிதறடித்துக் கொள்ள வேண்டும் என்ற பேரினவாதச் சிந்தனை ஓட்டமுமாகும். அரசாங்கம் ஒன்றைத் தீர்மானிக்கும் இடத்தில் சிறுபான்மைக் கட்சிகள் இருக்கக் கூடாது என்பதை ஜே.வி.பி உட்பட சிஹல உறுமய வரை விரும்புகின்றன.

தற்போதைய அரசியல் யாப்பு மாற்றி அமைக்கப்பட்டு விட்டால் தேசிய இனப்பிரச்சினை உட்படச் சகல பிரச்சினைகளும் தீர்ந்து விடும் எனக் கூறப்படுவது சுத்த ஏமாற்றேயாகும். இது மந்திரக்கோலால் மாங் காய் வீழ்த்தலாம் என்பது போன்ற பொய்யாகும்.

அடிப்படையில் நிலவு டமை முதலாளித்துவ ஏகாதிபத் திய நலன்களுக்கான அரசியல் யாப்பையே தொடர்ந்து வந்த அனைத்து யாப்புகளும் சாராம்ச மாகக் கொண்டிருந்தன. அவற்றில் பேரினவாத நலன்கள் பாதுகாப்பதற் கான அடிப்படைகளும் காலத்திற்குக் காலம் புகுத்தப்பட்டு வலிமையாக்கப் பட்டது.

தற்போதைய அரசியல் யாப்பு மக்கள் வீரோதமானது என்பதில் எவ்வித சந்தேகமும் இருக்கமுடியாது. ஆனால் ஜனாதிபதியும் அவரது பக்கத்தினரும் கூறுவது போன்று நீதியானதும் நியாயம் நிறைந்ததும் இனப்பிரச்சினைக்குத் தீர்வுதரக் கூடிய ஒரு அரசியல் யாப்பை வரைந்து நிறைவேற்றப் போவதாகக் கூறுவது எவ்வகையிலும் நம்பக் கூடிய நடக்கக்கூடிய ஒன்றல்ல.

சமூக மாற்றத்திற்கான தொழிலாளர்கள் விவசாயிகள், மற்றும் அடக்கப்படும் தேசிய இனங்கள் உள்ளிட்ட உழைக்கும் மக்களது உறுதியான போராட்டங்களின் ஊடாகவே அனைத்து மக்களுக்குமான ஒரு சமூகநீதி நிறைந்த அரசியல் யாப்பைத் தோற்றுவிக்க முடியும். அந்த நிலைக்கான போராட்டங் களை வளர்த்து முன்னெடுத்துச் செல்வதற்கு அடக்கப்பட்ட அனைத்து மக்கள் சார்பான கோரிக்கைகளை முன்வைத்து வற்புறுத்தும் இயக்கங்களை நடாத்துதல் வேண்டும். ஆளும் வர்க்கத்திற்கான அரசியல் யாப்புக்காக மாக்சிச லெனினிசவாதிகள் மாரடித்து நிற்க முடியாது. இலங்கையின் நிலவுடமை முதலாளித்துவ மேட்டுக்குடி வர்க்க சக்திகள் தமது இருப்புக்கு வகை தேடிநிற்கும் ஒரு நிகழ்ச்சி நிரலில் நாம் பங்கேற்க முடியாது. நமது சொந்த நிகழ்ச்சி நிரலைத் தயாரித்து அதன் வழியில் செல்வதே நாட்டிற்கும் மக்களுக்கும் மாக்சிச லெனினிச வாதிகள் ஆற்றும் பணியாகும்.

*அ. பூபதி*




இன்றைய அரசியல் நெருக்கடியும் சர்வஜன அபிப்பிராய வாக்கெடுப்பும் என்னும் தலைப்பில் கொழும்பு பிரதான வீதி முஸ்லீக் மண்டபத்தில் இடம் பெற்ற புதிய ஜனநாயகக் கட்சியின் கருத்திரங்கில் கலந்து கொண்டோரில் ஒரு பகுதியினரையும் தோழர்கள் தேவராஜா சி. கா. செந்திவேல் உரையாற்றுவதையும் தோழர் இ. தம்பையா அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம்.

www.padippakam.com



# உலகமயமாதலும் மார்க்சிசமும்

- தேசபக்தன் -

உலகமயமாதல் பற்றிய பல்வேறு விளக்கங்களுக்கும் வியாக்கியானங்களுக்கும் பிறகு தெளிவாகி யுள்ள உண்மை என்ன? ஏகாதிபத்தியத்திற்கு இன்னொரு பேர் உலகமயமாதல் என்பது தான். முதலாளித்துவம் ஏகபோக முதலாளித்துவமாக வளர்ந்த போது அது தனது தேசிய எல்லைகளைத் தாண்டிப் பிற நாடுகளின் மக்களின் உழைப்பையும் பிற நாடுகளின் மூல வளங்களையும் சுரண்டுவதில் தங்கவேண்டி ஏற்பட்டது. அந்தக் காலகட்டத்தி லேயே அது ஏகாதிபத்தியம் என அழைக்கப் பட்டது.

இந்த வளர்ச்சி மூலம் முதலாளித்துவத்தால் தனது தேசிய எல்லைகட்கு உட்பட்ட சமுதாய நெருக்கடியிலிருந்து தப்ப முடிந்தாலும் இந்த வளர்ச்சியே முதலாளித்துவ வல்லரசுகளிடையே உலக ஆதிக்கத்திற்கான போட்டியாகியது. இதுவே சென்ற நூற்றாண்டின் முன் பாதியில் இரண்டு பெரும் போர்கள் நிகழவும் காரணமானது. அதேவேளை, இப் போர்களை ஒட்டி முதலாளித்துவ வல்லரசுகளின் உலக ஆதிக்கமும் பலமிழந்தது. 1917ல் ரஷ்யப் பேரரசு வீழ்ந்தது. உலகின் முதலாவது சோசலிசக் குடியரசு உதயமானது. 1945க்குப் பின் ஆசியாவில் இருந்த ஐரோப்பியக் கொலனி ஆதிக்கம் தகர்த்தெறியப்படலானது. இந்த வேகம் ஆபிரிக்காவைத் தொற்றியது. மேற்கு ஆசியாவில் இருந்த ஷேக்குகளினது ஆட்சிப் பீடங்களிற் பலவும் ஆட்டங்கண்டன. 1975இல்

## உலகமயமாதலின் மறுபெயர் ஏகாதிபத்தியம்

## மூன்றாம் உலக நாடுகளில் மறுகாலனியாதிக்கம்

## உலக ஆதிக்கத் தலைவனாக அமெரிக்கா

## பன்னாட்டு நிறுவனங்களின் ஏகபோகக் கொள்ளை

தென் வியற்னாம் விடுதலை பெறமுன்பே உலகின் நேரடியான கொலனி ஆட்சி ஏறத்தாழ இல்லாமற் போய்விட்டது. இதனால் ஏகாதிபத்தியம் தனது பிடியை நழுவவிட்டுவிட்டது என்றில்லை. அது தனது முன்னைய கொலனிய வடிவைக் கைவிட்டு இன்னொரு வடிவைப் பெற்றது. இதை நாம் நவகொலனியம் என அறிவோம்.

நவகொலனிய முறைகள் கீழ், ஏகாதிபத்திய வல்லரசுகள், நேரடியான முறையில் முன்னைய கொலனிகளையும் அரைக் கொலனிகளையும் ஆளவில்லை. மாறாக, பேரளவில் அரசியல் சுதந்திரம் கொண்ட இந்த நாடுகளின் பொருளாதார வளர்ச்சி மீது தமது பிடியை இறுக்கி, அதன் மூலம் தமது சுரண்டலைத் தொடர்ந்தன. ஆதிக்க முறையின் இந்த மாற்றம், இரண்டாம் உலகப் போரின் பின் உலகின் மிக வலிய ஆயுத வல்லரசாகவும் பொருளாதாரச் சக்தியாகவும் வளர்ந்துவிட்ட அமெரிக்காவின் மேலாதிக்கத்தின் வளர்ச்சிக்கு மிகவும் அனுசரணையாகியது. கொலனி முறையின் கீழ் பிரிட்டனுக்கும் பிரான்சுக்கும் மூலதனத்தின் ஊடுருவலைத் தம் ஆதிக்கத்தின் கீழிருந்த நாடுகளில் தடுக்க முடிந்தது. ஆனால் நவகொலனிய முறையின் கீழ் அதை நேரடியாகத் தடுக்கும் வலிமையை அவை இழந்தன. படிப்படியாக, ஒவ்வொரு முன்னாள் கொலனியுள்ளும் அமெரிக்க மூலதனம் இடம் பிடித்தது.



அமெரிக்காவின் இராணுவ வலிமையும் பொருளாதார வலிமையும் மூன்றாம் உலகின் மிகவும் பிற்போக்கான சர்வாதிகார ஆட்சிகளை அமெரிக்காவின் தயவில் தங்கியிருக்குமாறு தூண்டின. ஏனெனில், அமெரிக்காவின் தயவு இல்லாமல், இந்த ஆட்சிகளால் நிலைத்து நீடிக்க முடியாத விதமாக வெகுசன உணர்வுகள் மாறத் தொடங்கிவிட்டன. அதேவேளை 1975 வரையிலான காலப் பகுதியில் கொலனி ஆதிக்கம் முறியடிக்கப்பட்டுவிட்ட சூழ்நிலையில், உலகளாவிய முறையில் ஏகாதிபத்திய எதிர்ப்பு எழுச்சி கண்டது. எனவே, ஏகாதிபத்திய நாடுகள் அப்பட்டமாக மூன்றாம் உலக நாடுகளைக் கட்டுப்படுத்த முயலவில்லை. அவை, நவகொலனிய ஆதிக்கமுறையை வலுப்படுத்துவதற்கான வேறு முன்னேறபாடுகளைச் செய்யத் தொடங்கின.

எண்ணெய் உற்பத்தி செய்யும் நாடுகளின் அமைப்பு (ஒபெக்) என்பன போன்ற கூட்டமைப்புக்களின் முயற்சிகள் ஏகாதிபத்திய நாடுகளின் ஆதிக்கத்திற்கு மிரட்டலாக இருந்தன. ஆயினும், இந்த நாடுகளிடையே இருந்த முரண்பாடுகளை அறிந்த அமெரிக்க ஏகாதிபத்தியம், எண்ணெய் விலை ஏற்றத்தின் போது நிறைய எண்ணெய்யை வாங்கிச் சேகரித்து. எண்ணெய் ஏற்றுமதி வருமானத்தின் மீது பல ஒபெக் நாடுகள் தங்களது எதிர்காலத்தைத் தீர்மானித்த வேளை, உலகச் சந்தையில் தன் சேமிப்பில் இருந்த எண்ணெய்யை விற்பனைக்கு விட்டது. இதனால் எண்ணெய் விலையைக் கிழிறக்கியது. இதன் பின்பு, ஒபெக் அமைப்பில் இருந்த தன் கூட்டாளிகளான சவூதி அராபியா, குவைத் போன்ற நாடுகளின் உதவியால் எண்ணெய் விலையையும் உற்பத்தியையும் தனக்கேற்பக் கட்டுப்படுத்தி வந்திருக்கிறது. இது மட்டுமன்றி, மூன்றாமுலக நாடுகள் எந்தெந்த மூலர் பொருட்களையும் விவசாய உற்பத்திகளையும் சார்ந்து இருந்தனவோ, அவற்றைக் கட்டுப்படுத்தவும் ஏகாதிபத்திய நாடுகள் வலியனவாகி விட்டன. மூன்றாமுலக நாடுகளைக் கொண்ட அணி சேரா இயக்கம் போன்ற அமைப்புக்களின் ஏகாதிபத்திய விரோதம், அந்த நாடுகளின் பொருளாதார வலிமையின்மையாலும் அந்த நாடுகளின் தேசிய முதலாளித்துவத் தலைமைகளின் உறுதியில்லாத போக்காலும் கூர் மழுங்கத் தொடங்கிவிட்டது.

இந்த நிலைமையை மேலும் மோசமாக்கும் முறையில், சோவியத் யூனியனில் குருஷச்சேவ் தொடங்கி வைத்த திரிபுவாத அரசியல் ஒருபுறம் அமெரிக்க ஏகாதிபத்தியத்துடன் சமரசம் செய்தது மறுபுறம், அமெரிக்காவுடன் ஆதிக்கத்திற்கான போட்டி என்ற பாதையில் சென்றது. இதன் விளைவாக ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கம், சர்வதேச அளவில், வலிமை இழந்தது.

அமெரிக்க ஏகாதிபத்தியமும் சோவியத் யூனியனும், உலக ஆதிக்கத்திற்காகப் போட்டியிடும் போக்கில், மூன்றாம் உலக நாடுகளில் உள்நாட்டுப் போர், நாடுகளிடையிலான யுத்தம் என்பனவற்றையும் ஊக்குவித்தன. சோவியத் யூனியன் செக்கோஸ்லவாக்கியா மீது நடத்திய ஆக்கிரமிப்பு, மூன்றாமுலக நாடுகளில் இருந்த முற்போக்குச் சக்திகளைப் பலவீனப்படுத்திய ஒரு முக்கிய நிகழ்வாகும். அமெரிக்காவுக்குச் சமமான ராணுவ வல்லரசாக சோவியத் யூனியன் இருப்பதன் மூலமே உலகின் ஒடுக்கப்பட்ட நாடுகளின் நலன்கள் பாதுகாக்கப்படும் என்று பெரும்பாலான பாராளுமன்ற இடதுசாரிகள் வாதிட்டனர். எனவே ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டம், வெகுசன அரசியல், மக்கள் யுத்தம் ஆகிய கோட்பாடுகளை அவர்கள் நிராகரித்தனர். சோவியத் யூனியனின் பொருளா தார வளர்ச்சியில் ஏற்பட்ட நெருக்கடி, அமெரிக்காவுடனான ஆயுதப்போட்டியால் இன்னும் மோசமானது. மறுபுறம், சோவியத் யூனியனின் மேலாதிக்கப் போக்கு, சோவியத் சார்பு ஆட்சிகள் இருந்த நாடுகளில் சோவியத் யூனியனுக்கு எதிராக மட்டுமின்றித் தமது ஆட்சிகட்கு எதிராகவும் மக்கள் மனதில் சகப்பை வளர்த்தது. இதன் விளைவுகளை 1989 க்குப் பின்னான நிகழ்வுகளில் நாம் கண்டோம்.

1991இல் சோவியத் யூனியனின்உடைவை அடுத்தே, 'பூகோளக் கிராமம்' போன்ற சொல் அலங்காரங்கள் ஏகாதிபத்தியத்தின் மேலாதிக்கத் திட்டத்தை வருணிக்கப் பயன்பட்டன. உலக மயமாதல் என்பது வெகு மும்முரமாகப் பிரசாரப் படுத்தப்பட்டது. மூன்றாம் உலக நாடுகளின் பொருளாதாரச் சீர்குலைவுக்கான திட்டங்களை வருகிணிக்க மேலும் பல அழகான சொற்கள் பயன்படுத்தப்பட்டன. மீள் அமைப்பாக்கல் என்பது, மூன்றாமுலக நாடுகளின் பொருளாதார த்தை அந்தந்த அரசுகளின் பாதுகாப்பினின்று விலக்குவதைக் குறிக்கப் பயன்படுகிறது. பொருளாதாரச் சீர்திருத்தம் என்பது, அரசின் ஆதிக்கத்தில் உள்ள சகல பொருளாதார, உற்பத்தித் துறைகளையும் அந்திய முதலாளித்துவத்துக்கு மலிவாக விற்பதைக் குறிக்கிறது. தாராளமாக்கல் என்பது, தங்குதடையின்றி அந்நிய மூலதனச் சுரண்டலை அனுபவிப்பதைக் குறிக்கிறது. திறந்த பொருளாதாரம் என்பது, கட்டுப்பாடின்றி அந்நிய உபரி உற்பத்திகளைச் கொட்டிக் குவிக்கும் சந்தையாக ஒரு நாட்டை மாற்றுவதைக் குறிக்கிறது. இவற்றிக் விளைவாக, மூன்றாமுலக நாடுகள் அமெரிக்காவின் முழுமையான பொருளாதார ஆதிக்கத்தின் கீழ் வருமானால், அது தான், அமெரிக்கா விரும்பும் பூகோளக் கிராமம் ஆகும்.

இதை மேலும் வசதிப்படுத்துவதற்காக, உலகில் எங்கொல் லாம் ஏகாதிபத்திய எதிர்ப்பு அலை ஓங்க இடமுள்ளதோ, அங் கொல்லாம் மக்களைப் பிளவு படுத்தவும் அமெரிக்கா ஏகாதி பத்தியத்துக்கு உடன்பாடில்லாத ஆட்சி களைக் கவிழ்க்கவும் பலவாறான திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. வேண்டு மானபோது, ஈராக், யூகோஸ்லா வியா போன்ற நாடுகள் மீது மனிதாபி மானத்தின் பேரால் கொடிய போர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இவ்வாறு அரசியல், பொருளா தாரம், ராணுவக் குறுக்கீடு போன்று ஒவ்வொரு வகையிலும், மூன்றாம் உலக ஆட்சியாளர் களும் வெகுஜனங் களும் ஏகாதிபத்தியத் தால் நெருக்குவாரத் திற்கு உள்ளா கின்றனர். மூன்றாம் உலக நாடுகளின் தேசிய முதலாளித் துவத் தலைமை களின் இயலாமை, 1975க்குப் பின்பு, சர்வதேச ரீதியாக, ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கப் போராட்டங்களின் தேக்கநிலை, இடதுசாரி இயக்கங்களின் நலிவு, வலது சாரி அரசியல் கட்சிகளின் எழுச்சி, திரிபுவாதிகளின் தலைமையிலிருந்த சோஷலிஸ ஆட்சிகளின் சரிவும் சோவியத் யூனியனின் உடைவும், சீனாவில் முதலாளிய ஊடுருவல் போன்றவற்றின் பின்னணியில், நவகொலனியம் குறுகிய காலத்தில் பெற்ற வெற்றி நிலையானதாயும் நிரந்தரமானதாயும் தோன்றியது.

ஏகாதிபத்தியத்தின் தொடர்ச்சியான வளர்ச்சி, ஒவ்வொரு தொழிற் துறையிலும் போட்டியைக் குறைந்து ஓரிரண்டு பன்னாட்டுக் கம்பனிகளின் மேலாதிக்கமே ஓங்கும் திசையில் முதலாளியத்தை இட்டுச் சென்றது. இதன் தொடர்ச்சியாக, மூன்றாமுலக நாடுகளில் தமது நேரடி ஆதிக்கத்தை நிறுவும் முறையில் பொருளாதாரத் தாரளமயம், தனியார்மயமாக்கல் போன்ற கொள்கைகள் ஒவ்வொரு நாட்டின் அரசியன் மீதும் திணிக்கப்பட்டது.

ஏற்கனவே உலகப் பொருளாதாரத்தின் மீதும் சகல சந்தைகள் மீதும் ஏகாதிபத்தியதிற்கு இருந்த ஆதிக்கம் காரணமாக பொருளாதார நெருக்கடிக்கும் கடன்சுமைக்கும் உட்பட்டிருந்த மூன்றாமுலக நாடுகள் மீது உலகவங்கி சர்வதேச நாணய நிதியம் என்பன மூலம் திணிக்கப்பட்ட மேலதிக நிபந்தனைகளைப் பெரும்பாலான ஆட்சியாளர்களால் நிராகரிக்க இயலவில்லை. இதன் விளைவாக, அவர்களது நாடுகளின் பொருளாதாரமும் அரசி[...] உறுதிப்பாடும் மேலும் ஆட்டங்கண்டன. எனி[...] நவகொலனி யமோ அதன் பன்னாட்[...] கம்பனிகளோ இவை பற்றிக் கவலை இல்லா[...] தமது கொள்ளை யடிப்பிலேயே முனைப்பாக இரு[...] வந்தன.

அதுவும் போதாமல், மூன்றாமுலக நாடுகளில் எ[...] ஒரு அரசாங்கத்தின் அதிகாரமும் த[...] மேலாதிக்கத்தை மீறாதவிதமாகக் கவனித்துக் கொள்ள, சமூகத்[...] நலன் மீது அரசாங்கத்துக்கு உள்ள பொறுப்பை மிகவும் குறை[...] அளவுக்கு இறக்கி, அரசு சாராத தன்னார்வ நிறுவனங்களி[...] அத்தகைய பல பொறுப்புக்களை விட்டுவிடும் சூழ்நிலைகள[...] உருவாக்கின. இத்தகைய அரசு சாரா நிறுவனங்களில் பெருக்[...] 1980களில் வேகமடைந்து, 1990களின் போது மும்முரம் அடைந்த[...]

## அரசுசாரா நிறுவனங்களின் பங்கும் பணியும்

## பெருமுதலாளித்துவ நிறுவனங்களிடம் தகவல் ஊடகங்[...]

## முதலாளித்துவ நகரங்களில் வெகுஜன எதிர்ப்பு

## உலகமயமாக்கலுக்கு எதிராக மார்க்சிசம்!

அரசுசாரா நிறுவனங்கள் வெறுமனே அரசாங்கத்துக்கு மக்[...] மீதுள்ள பொறுப்பை விலக்குவதற்கு மட்டும் முயலவில்லை. மக்க[...] அரசியலிலிருந்து ஒதுக்குகிற பணியிலும் அவை மும்முரம[...] இயங்கின. அரசு சாரா நிறுவனங்களின் நிதி எங்கிருந்து வருகி[...] என்பதை ஆராயமலே, பல அறிஞர்களும் சமூக சேவையாளர்க[...] (முன்னாள் இடதுசாரிகளும் முற்போக்குவாதிகள் உட்பட[...] இவர்களது நிதி உதவியாலும் உயர்ந்த ஊதியத்தாலும் கவரப்பட[...] இந்த அரசுசாரா நிறுவன மாயவலையில் சிக்கிச் சீரழி[...] வருகின்றனர். இதன் விளைவாக ஏகாதிபத்திய எதிர்ப்[...] போராட்டத்தில் பயனுள்ள பங்கு வகிக்கக்கூடிய ஒரு முக்கியமா[...] பகுதியினர் அதற்கு எதிராகச் செயற்படுமாறு திசைதிருப்பப்பட்டுள்ள[...] உலகமயமாதலைத் தவிர்க்க முடியாது என்ற கோஷத்[...] இவர்களுடைய குரலும் ஓங்கி ஒலிப்பதை நாம் கேட்கலாம்.

சோவியத் யூனியனின் சிதைவாலோ சீனாவில் ஏற்பட்டு வந்து[...] மாற்றங்களாலோ தடுமாறாத அரசியல் சிந்தனைப் போக்குக்க[...] மிக முக்கியமானது. மார்க்சிய லெனினியச் சிந்தனைப் போக்கா[...] ஏகாதிபத்தியத்துடன் பல வேறு சமரசங்களைத் திரிபுவாதிகளும் [...] இடதுசாரிகளும் பரிந்துரைத்த போதும் உண்மையான மார்க்[...] வாதிகள் தம் கொள்கையில் உறுதியாக நின்றனர். உலகமயமா[...] என்பது ஏகாதிபத்தியத்தின் சமகால வடிவின் இன்னொரு [...] மட்டுமே என்பது பற்றி அவர்கள் தெளிவாக இருந்தனர். அத[...] ஒரே நோக்கம் ஏகாதிபத்தியத்தின் உலக ஆதிக்கமும் பன்நாட்[...] கம்பனிகளின் கட்டுப்பாடற்ற பொருளாதார ஆதிக்கமுமே என்பதி[...] அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் நலன் சார்ந்தே உலகமயமா[...] தீவிரமாக முன்னெடுக்கப்படுகிறது என்பதிலும் அவர்கள் தெளிவா[...] இருந்து வந்துள்ளனர்.

அது மட்டுமன்றி, உலகமயமாதலின் நல்ல அம்சங்கள் என எது[...] இல்லை எனவும் அப்படி அடையாளங் காணப்படுவன கூ[...] ஏகாதிபத்தியப் பெருமுதலாளிய நலன்கட்கு ஏற்ற[...] வகுக்கப்பட்டிருக்கிற தொழில்நுட்ப, விஞ்ஞான[...] சாதனைகளே ஒழிய உலக மக்களின் நலனை[...] நோக்கமாகக் கொண்டவை அல்ல என்றும் அவர்க[...] உறுதியுடன் கூறினர். எல்லாவற்றிலும் முக்கியமா[...] இந்த உலக மயமாக்கல் தடுக்க முடியாததல்[...] எனவும் மக்கள் போராட்டத்தின் மூலம் மட்டு[...] எதிர்க்கவும் முறியடிக்கப்படவும் கூடியது என[...] மிகவும் தெளிவாக இருந்தனர்.

சோவியத் யூனியனின் சிதைவை அடுத்து[...] சோர்வுபெற்றிருந்த ஏகாதிபத்திய எதிர்ப்புச் சக்தி[...] ஆறே வருடங்கட்குள்எழுச்சி பெற்றன. ஏகாதிபத்[...] நாடுகளில் பொருளாதார நெருக்கடிகள் ஏற்ப[...] தொடங்கி விட்டன. இதன் தொடர்ச்சியாக, கிழக்[...] ஆசிய நாடுகளின் பொருளாதாரம் சீர்குலைவுச்[...] உட்பட்டது முதலாக, இந்தோனீசிய சர்வாதிக[...] ஆட்சியின் முடிவு போன்ற பல நிகழ்வுகள், தொட[...] தொடராக நடந்தேறின.

இவற்றை ஒட்டி, ஐரோப்பிய நாடுகளின் ஏகாதிபத்[...] எதிர்ப்புச் சக்திகளின் செயற்பாடுகளும் மெல்ல மெல்ல மும்முரமடைந்தன. உலகின் மீது தங்களது மேலாதிக்கத்[...] ஒவ்வொரு அமைப்பும் எடுத்த முயற்சிகள் கடுமையான வெகுச[...] எதிர்ப்பைச் சந்தித்தன. உலக வர்த்தக நிறுவனத்திற்கு எதிரா[...] சியாட்டிலில் நடந்த பெரும் ஆர்ப்பாட்டம் முதலாக, ஜெனோவாவ்[...] எட்டுப் பெரும் பொருளாதார வல்லரசுகளின் சந்திப்பிற்கு எதிரா[...] நடந்த ஆர்ப்பாட்டம் வரை ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் உள்[...] மக்களின் எதிர்ப்பின் வளர்ச்சியையே காட்டுகிறது. இந்த எதிர்[...] அலையின் முக்கியத்துவம் பெரியது.

தகவல் ஊடகங்கள் அனைத்தும் பெரு முதலாளித்து[...] நிறுவனங்களின் கையிலுள்ள அதேவேளை, முதலாளித்துவ எதிர்ப்[...] சக்திகள் வலிய அரசியல் ஸ்தாபனமாக இல்லாத நிலையில், இ[...] வெற்றிகரமான எதிர்ப்பு இயக்கங்கள் வலிய முதலாளித்து[...] நாடுகட்குள்ளேயே புதிய அரசியல் நெருக்கடிகள் தோன்றியுள்ளதை காட்டுகிறது. முதலாளித்துவம் மனித சமுதாயத்தின் இருப்[...] ஒவ்வொரு வகையிலும் நெருக்கடிக்கு உள்ளாக்கிவிட்டது. இதற்[...] எதிரான ஒவ்வொரு நடவடிக்கைக்கும் அமெரிக்க ஏகாதிபத்திய[...] குழிபறித்துள்ளது. இந்தப் போக்கு இன்னமும் தொடர்கிறது. என[...] முதலாளித்துவ உலகமயமாதலுக்கு எதிரான எழுச்சி இன்னு[...] வலுப்படும் என்பதில் ஐயமில்லை.

அதே வேளை, ஒரு கட்டுக்கோப்பான ஒருங்கிணைந்த அரசிய[...] நடவடிக்கையும் வேலைத்திட்டமும் இல்லாது போனால், இந்த எதிர்[...] இயக்கத்தைத் திசைதிருப்பவும் குழப்பத்திலாழ்த்தவும் ஏகாதிபத்தி[...] எடுக்கும் முயற்சிகள் வெற்றிபெற வாய்ப்பும் உண்டு. எனவே, உல[...] நிலவரங்களைத் தேசிய மட்டத்திலும் சர்வதேச மட்டத்திலும் சரி[...] அறிந்த ஒவ்வொரு நிலைமைக்கும் ஏற்ப ஏகாதிபத்தியத்திற்கு எதிரா[...] அரசியற் பணிகளை வெகுஜன அரசியல் மார்க்கத்தில் முன்னெடுக்[...] விடயத்தில் மார்க்கிய லெனினியவாதிகளின் பொறுப்புப்பெரியது. [...] மார்க்சியவாதியால், ஏக காலத்தில், தேசபக்தராகவும் சர்வதேசியவா[...] யாகவும் இருக்க முடியும் என்பதை மீண்டும் நிறுவி ஒரு புதிய உலகை[...] கட்டியெழுப்புவதற்கான சவால் அவர்கள் முன்னால் உள்ளது. அ[...] எவ்வாறு அவர்கள் கையாளுகின்றார்கள் என்பதிலேயே மு[...] மானுடத்தினதும் எதிர்காலம் தங்கியுள்ளது என்பதை ஒவ்வொ[...] மார்க்சிய லெனினியவாதியும் மனதில் இருத்த வேண்டும்.

படிப்பகம்

www.padippakam.com



1யூன் மாதத்தில் நூலகத்தை எரித்த அணைந்து விட்டது. அது மூட்டிய ாபத் தீ தமிழ் மக்கள் மனதில் ாழுந்து விட்டெரிந்தது. அது வரை ிரவாத இளைஞர்களது செயற் ]கள் பற்றி அதிருப்தி கொண்டிரு வர்கள் மத்தியிலும் இனி மேலும் ாளுமன்ற மூலமான தீர்வு இயலாது ர்ற எண்ணம் உறுதிப்படத் ாடங்கிவிட்டது. அதை ஒரு மக்கள் ாராட்டமாக நெறிப்படுத்தும் ாக்கமோ திறமையோ தமிழ்த் தேசிய தத்தின் பழைய தலைமைக்கோ ]தாக உருவாகி வந்த இளைய லைமைக்கோ இருக்கவில்லை.

வ்வளவு துாத்திற்குத் தமிழ் ளைஞர்கள் அரசாங்கத்துடனும் தன் காவற் படைகளுடனும் மோது ற்குத் துடித்தவர்களோ அவ்வளவு ரத்துக்கு எப்படி இந்த இக்கட்டி ருந்து மீளுவது என்று த.வி.கூட்டணித் லைமை தவித்தது. மறுபடியும் னடாவிலிருந்து தரகர் வில்சன் வசரஅவசரமாக அழைக்கப் பட்டார். ன்று நிபந்தனைகளின் பேரில் வி.கூட்டணி சனாதிபதி ஜயவர்தன _ன் பேச்சுவார்த்தைகளில் இறங்க ணங்கியது.

யாழ் நூலகத்தை எரித்ததற்கான நட்டஈடு. (1 கோடி ரூபா நட்டஈடாக ஒதுக்கப்பட்டது. ஆனாலும் இதில் ஒரு அற்பப் பகுதியே உண்மையில் வழங்கப்பட்டது என்பது வேறு விடயம்)

நூலக எரிப்புடன் தொடர்புடைய நிகழ்ச்சிகள் பற்றிய விசாரணை. முடிந்தால் நீதி விசாரணை (இது பற்றிய உடன்பாடு செயற்படுவதற்கு அவசிய மில்லாமயே. அமெரிக்கப் போரசிரியை யான வேர்ஜினியா லிபியா. சர்வதேச கீதவான்கள் ஆணையத்தின் சார்பாக ஒரு அறிக்கையைத் தயாரித்தார். இந்த அறிக்கை அரசையும் அதன் பயங்கரவாதத் தடைச் சட்டத்தையும் வன்மையாகக் கண்டித்திரந்த போதும் நடைமுறையில் எதுவும் ஆகவில்லை. ஆனாலும் இந்த அறிக்கை. அறிக்கைக்கு அறிக்கையாகவும் அரசாங்கத்தால் ஒன்றும் ஆகாமல் போனது ஒன்றும் ஆகாமல் போனதாகவும் முடிந்தது.)

3. மாவட்ட சபைச் சட்டத்தின் நடை முறைப் படுத்தலில் சனாதிபதி தொடர்ச்சியான அக்கறை காட்ட வேண்டும். (இந்த அக்கறையயின் அழகு வெகுவிரைவிலேயே தெளிவானது.)

த.வி.கூட்டணியின் தலைவர்களும் சனாதிபதியும் ஒரு உடன்படிக்கையில்

# எரிந்த நூலகமும் எரியும் நெஞ்சங்களும்

# அண்ணன் காட்டிய வழி (9)

- இயமவரம்பன் -

கைச்சாத்திட்டனர். ஜே.ஆர். ஜயவர்தன வின் வாக்குறுதிகளுக்குப் பிரதியாக. வன்முறையை ஒடுக்கு வதற்கு தாங்கள் உதவுவதாக த.வி.கூட்டணி யினர் உடன்பட்டனர். இது 1981 ஒகஸ்ற் முடிவில் நிறைவானது. தரகர் வில்சன் தனது பணியை முடித்த திருப்பதியுடன் கனடாவுக்குப் போனார். அவர் விமானம் ஏறுமுன்னமே உடன்படிக்கைக்குத் குழி பறிப்பதற்கு ஜே.ஆா.ஜயவர்தன தன்னாலான அனைத்தையும் செய்யத் தொடங்கி



விட்டார். பேராசிரியர் வில்சன் இவ்வளவு துாரம் அரசியல் வெகுளியாக அல்லது அவரை நம்பி ஏமாந்த த.வி.கூட்டம் அவரை விடப்பெரிய வெகுளிகளா என்பது பற்றி முடிவுகட்டுவது கடினம். என்றாலும் வில்சனுடைய யூஎன்.பி. சார்பு சிந்தனைப் போக்கே. அவரது அரசியல் தரகு வேலை திரும்பவும் திரும்பவும் தமிழ் மக்களுக்கு விரோதமான காரியங்களுக்கு வசதியாக அவர் பயன்படக் காரணம் ஆகின.

1982 மார்ச் மாதம் பயங்க ரவாத தடைச் சட்டம் (சிறப்பு முன்னேற் பாடுகள்) நிறை வேற்றப்பட்டது. த.வி.கூட்டணி யால் இதற்குப் பிறகும் அரசாங்கத்துடன் ஒத்துழைக்க முடிந்தது என்றால் அது துரோகமா இயலாமையா அறியாமையா என்ற கேள்வி இயல்பாகவேவ பலர் மனதில் எழுந்தது. இதையொட்டி யாழ்ப்பாணத்தில் வெளிவந்த சற்றடே றிவ்யூ சஞ்சிகையில் த.வி.கூட்டணி தலைமை பற்றியும் அதன் அரசியல் முடிவுகள் பற்றியும் அடுக்கடுக்காகக் கேள்விகள் எழுந்தன. இவற்றை எல்லாம் தன் மீதும் தன் தலைமை மீதுமாகக் கருதிய அமிர்தலிங்கம் அந்தப் பத்திரிகை மீது சீறி விழுந்தார். இதன் விளைவாக அப்பத்திரிகை அவருக்கு எதிரான நிலைப்பாட்டில் இருந்த தமிழ்த் தேசியவாதிகட்குக் கூடிய முக்கியத்துவம் வழங்கியது. இது போல, பல வகைகளிலும் அமிர்தலிங்கம் தன்னைத் தனிமைப்படுத்திக் கொண்டார்.

ஏற்கனவே புலம் பெயர்ந்த பல தமிழ்ர் நடுவே. தமிழர் விடுதலைக் கூட்டணி பற்றிய நம்பிக்கைகள் இருந்தன. ஆயினும் பாராளுமன்ற அரசியல் மூலம் பிரச்சினை தீருமா என்பது பற்றிய ஐயங்களும் இருந்தன. 1981 நூலக எரிப்பின் பின்னர் விடுதலைப் போராளிகட்கு ஆயுதப் பயிற்சி அளிப்பது தொடர்பான முயற்சிகள் மேலும் அதிகமான தமிழரின் ஆதரவைப் பெறத் தொடங்கின. இந்த நிலையிலும் அமிர்தலிங்கத்தால் சில போராளிக் குழுக்களுடன் உறவைப் பேண முடிந்தது. எனினும் நாளாந்தம் அவரது தலைமை மீதான நம்பிக்கை தேய்ந்து வந்தது.

பாராளுமன்றத் தேர்தல் மூலம் ஒரு மாற்றுக் கட்சி ஏகப்பெரும்பான்மையான ஆசனங்களைப் பிடிக்க முடியாத விதமாகத் தேர்தல் முறையை மாற்றியமைத்த ஜே.ஆர்.ஜயவர்த்தன வால் 1977ல் பெற்ற பாராளுமன்றப் பெரும்பான்மையை அவரோ வேறு எவருமோ பெறமுடியாத நிலையில். தனது தனிப்பட்ட அதிகாரத்தை மேலும் தொடர்வதற்காகவும் பாராளுமன்றத்தில் இருந்த பெரும்பான்மை அதிகாரத்தைத் தொடர்வதற்காகவும் அவர் இடுத்த பாராளு மன்றத் தேர்தலைத் தவிர்ப்பதற்கான திட்டம் ஒன்றை வகுத்தார். இது பற்றிய சந்தேகங்கள் இருந்தாலும். அவரது திட்டம் என்ன என்று மக்கள் அறிவதற்கு சனாதிபதித் தேர்தலில் அவர் வெற்றி பெறும் வரை காத்திருக்க நேர்ந்தது.

சனாதிபதி தேர்தலில் சிறிமா பண்டார நாயக்க போட்டியிட முடியாதவாறு அவருக்கு எதிரான தடை விதிக்கப் பட்டதால் 1982 ஒக்றோபரில் ஜே.ஆர். ஜயவர்தனவுக்கு எதிராக வெறக்ற்றர் கொப்பேகடுவ போட்டியிட்டார். இத்தேர்தலில் ஜே.ஆர்.ஜயவர்தனவை இயலுமா இல்லையா என்பது ஒரு பிரச்சினை. ஆனால் ஜே.ஆர்.ஜயவர்தன நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதி முறை மூலம் நாட்டு மக்களின் சனநாயக உரிமைகளைப் பறிப்பதற்காக எடுத்த பல்வேறு நடவடிக்கைகள் பற்றியும் அவரது பேரினவாதம் பற்றியும் த.வி.கூட்டணியின் நிலைப்பாடு என்ன என்ற கேள்விக்கு பதில் சொல்ல ஆயத்தமாக இருக்கவில்லை.

ஜே.ஆர்.ஜயவர்தனவைப் பகைக்க ஆயத்தமில்லாத த.வி.கூ தலைமை ஒரு நழுவல் போக்கைக் கடைப்பிடித்தது. எனினும் அதன் உள்நோக்கம் என்ன வென்பதை த.வி.கூ. ஆதரவாளர்கள் அறிந்து ஜே.ஆர்.ஜயவர்தனவுக்குச் சாதகமாகவே செயறபட்டனர் த.வி.கூட்டணியின் இக்கட்டான நிலையை மேலும் மோகமாக்கும் நோக்குடன் குமார் பொன்னம்பலம் தமிழ் ஈழக் கோரிக்கையை முன்வைத்துத் தேர்தலில் நின்றார். த.வி.கூட்டணி தமிழ் ஈழக் கோரிக்கையை போராடமட்டுமல்ல பிரசாரம் செய்யவும் துணியமாட்டது என்ற விடயம் தமிழ் மக்களுக்குத் தெளிவாக உணர்த்தப்பட்டது.

இதே கால கட்டத்தில் ஈழவேந்தன், கோவை மகேசன் போன்றோர் த.வி.கூட்டணிக்கு மாறான தமிழ் ஈழ விடுதலைக் கூட்டணி என்ற ஒரு அமைப்புக்குள் இயங்கத் தலைப் பட்டனர். இந்த மாற்று அமைப்பால் த.வி.கூட்டணிக்கு எதிரான ஒரு வலிய சக்தியாக வளர்ந்திருக்க முடியாது. ஏனெனில் இந்த அமைப்பு வெகுசன அரசியலுக்கு ஆயத்தமான ஒன்றல்ல. அதே வேளை பாராளுமன்ற அரசியலுக்குத் தகுதியான ஒரு தலைமையும் அதற்கு இல்லை. (த.வி.கூட்டணிக்குள் இருந்து கொண்டு தீவிரவாத இளைஞர்களின் சார்பாக அமிர்தலிங்கத்துக்கு எதிராக வாதாட வந்த சந்திரகாசன் ஒரே நேரத்தில் இரண்டுக்கும் அதிகமான அரசியல் தோணிகளில் கால் வைக்கும் ஆற்றலுடைய அதிசயப் பிறவி என்பது பின்னரே புலனானது.) த.ஈ.வி. கூட்டணிக்கும் அரவது ஆசிகள் இருந்தன. அவர் யூஎன்.பி.யைக் கடுமையாகக் எதிர்த்த போதும் அமைச்சர் காமினி திசாநாயக்க அவருடைய நெருங்கிய நண்பராகவும் இருந்தார். (பின்பு றோவுடனும் தமிழ் அகதிகட்கு 'உதவும்' இரண்டு பெரிய அறநிறுவனங்கள் மீது அதிகாரம் செலுத்தும் அளவ்க்கு இந்திய அரசுடனும் என்.ஜி.ஓ. அமைப்புக்களுடனும் அரவது 'தமிழ் தேசிய' அரசியல் தொடர்கிறது).

ஜே.ஆர்.ஜயவர்தனவின் வெற்றி பல வகைகளிலும் தவிர்க்க முடியாத ஒன்றாக இருந்த போதும் யாழ் மாவட்டத்தில் அவர் பெற்ற வாக்குக்கள் கொப்பேகடுவ பெற்றதிலும் குறைவாகி இருந்தது கவனிக்க வேண்டிய ஒரு விடயமாகும். இது தமிழ் மக்கள் அவருக்கு தமிழர் கூட்டணித் தலைமைக்கும் விடுத்த ஒரு சவால் என்றே கூறலாம்.

பாராளுமன்றத்தின் ஆயுளை நீடிப்பதற்காக ஜே.ஆர்.ஜயவர்தன நடத்திய சர்வசன வாக்கெடுப்பு முயற்சி பாராளுமன்ற சனநாயகத்தில் நம்பிக்கை உள்ளவர்களை மட்டுமன்றி பாராளுமன்ற அரசியலின் நிசத் தன்மை பற்றி அறிந்தவர்களைக் கூடச் சினக்க வைத்தது. சனநாயகத்துக்குக் குழிபறிக் கிற இந்த முயற்சியைக் கடுமையாக எதிர்த்துப் பல வேறு அரசியற் கட்சிகளும் கருத்து வெளியிட்டன.

1982 டிசெம்பரில் நடந்த சர்வசன வாக்கெடுப்பில் பாராளுமன்றத்தின் ஆயுளை நீடிப்பது என்ற பிரேரணைக்கு எதிராகப் பிரசாரம் செய்வதற்குத் த.வி.கூ தயங்கியது. சனாதிபதி தேர்தலைப் பகிஷகரிப்பது என்று முடிவு செய்த தீவிரவாத இளைஞர்கள் கூட சர்வசன வாக்கெடுப்பில் அரசாங்கம் பிரேரணையை எதிர்ப்பது என்ற முடிவுக்கு வந்த பின்னரே மிகுந்த தயக்கத்துடன் த.வி.கூட்டணி பாராளுமன்றத்தின் ஆயுளை நீடிப்பதை எதிர்த்துச் சர்வசன வாக்கெடுப்பில் வாக்களிக்குமாறு மக்களைக் கேட்டுக் கொண்டது. த.வி.கூட்டணி இவ்விடயத்தில் முழுமனதுடன் நடந்து கொண்டதாகப் பல அரசியல் அவதானிகளும் நம்ப மறுத்தனர் அது நல்ல நியாயம் இல்லாமலும் இல்லை.

பாராளுமன்ற சனநாயகத்தின் பேரால் நடந்த இந்தக் கேலிக்கூத்திற்குப் பின்னரும் கூட்டணித் தலைமையையும் ஜயவர்தனவையும் சேர்த்து வைப்பதற் கான தரகு முயறிசிகளில் வில்சன் இறஙிகினார். தமிழ் மக்களிடம் காட்டக்கூடியதாக எதையுமே வென்றெடுக்காத அமிர்தலிங்கத்தால் இதற்கு மேலும் ஜே.ஆர்.ஜயவர்தன வுடன் இணங்கிப் போவது சிரமமாக இருந்ததற்குப் பல காரணங்கள் இருந்தன.

1982 சனாதிபதி தேர்தலில் தமிழ் மக்கள் எடுத்த நிலைப்பாடு சர்வசன வாக்கெடுப்பில் யாழ் மாவட்டத்தில் மட்டுமே அரசாங்கம் பிரேரணை தோற்றது என்பன முக்கியமானவை. ஆயினும் தீவிரவாத இளைஞர்களது வன்முறை வலுத்ததும் அளவு மீறி அரசாங்கத்துடன் சமரசம் செய்வதால் ஏற்படக் கூடிய அபாயங்கள் பற்றி அமிர்தலிங்கம் கடுமையாக எச்சரிக்கப்பட்டிருந்தது அவற்றினது முக்கியமான காரணங்கள்.

த.வி.கூட்டணித் தலைமையால் கட்டுப் படுத்தவோ வழிகாட்டவோ இயலாத திசையில் வடக்கின் அரசியல் நிலவரங்கள் படு மோசமாக மாறி வந்தன. இம் மாற்றம் 1983 ஜனவரியுடன் மேலும் துரிதமடைந்தன.



1999இல் பெல்கிரேட்டிலுள்ள சீனத்தூரகத்தின் மீது அமெரிக்கா நடத்திய குண்டுத்தாக்குதலுக்கு எதிராக சீனமக்கள் நடத்திய ஆர்ப்பாட்டம்

# அமெரிக்கா விதைத்த வினையும் அமெரிக்கா அறுத்த வினையும்



உலக வர்த்தக மையக் கட்டிடம் அமெரிக்க முதலாளித்துவ பொருளாதார மேலாதிக்கத்தின் சின்னம். பென்றகன் கட்டிடம் அமெரிக்க ராணுவ வல்லமையின் சின்னம். நான்கு விமானங்களைக் கடத்திச் சென்ற தீவிரவாதிகளால் சில நிமடங்களில் முற்றாக அழிந்தது மற்றது பெரும் சேதத்துக்கு ஆளாகிவிட்டது.

இதன் மூலம் அமெரிக்க முதலாளித்தும் அழிந்துவிடவில்லை. அமெரிக்காவின் ராணுவ மேலாதிக்கம் முடிந்தவிட வில்லை. அதை இவை போன்ற வன்செயல்கள் மூலம் செய்ய முடியாது. இந்த நிகழ்ச்சி உலகின் ஒவ்வொரு மேலாதிக்க வல்லரசையும் நடுங்க வைத்திருந்தாலும் இதன் மூலம் அரச அடக்குமுறையும் ஒடுக்கப்பட்ட மக்கள் மீதான வன்முறையும் அதிகரிக்குமே ஒழியக் குறையாது இந்தச் சூழ் நிலையைப் பாவித்து இஸ்ரேல் பலஸ்தீன் மக்கள் மீது தனது ராணுவத்தாக்குதல் முயற்சிகளை மும்முரப்படுத்தியுள்ளது கவனிக்க வேண்டிய விடயம்.

விமானத் தாக்குதலால் பலியானோரில் ஏகப்பெரும்பான்மையானோர் சாதாரண உழைக்கும் மக்களே என்பதை நாம் மறக்கலாகாது. அதைவிட முக்கியமாக. இவ்வாறான போர்முறைகள் மக்கள் யுத்தக் கொள்ளைக்கும் வெகுசன அரசியல் பாதைக்கும் எதிரானவை ஏனபதால் நம்மால் நிராகரிப்படுகின்றன.

அதேவேளை இந்த வன்செயலின் கொடுமையைப் பற்றிக் கண்டன வார்த்தைகளையும் மிரட்டல்களையும் பொழியும் அமெரிக்க அதிகாரமும் அதன் பக்கப்பாட்டுக்காரர்களும் இதற்கான காரணம் யார் என்று யோசிக்கப் போகிறார்களா?

அமெரிக்கா கடுமையாகச் சந்தேகிக்கும் ஒசாமா பின் லாடன். இருபது வருடங்களுக்கு முன்பு ஆப்கானிஸ்தானத்தில் சோவியத் யூனியனுக்கு எதிரான பயங்கரவாதப் போர்முறைகட்கு



அமெரிக்காவால் பயிற்றுவிக்கப்பட்டவர். அமெரிக்கா வளர்த்த கடாக்கள் கடந்த பத்தாண்டுகளுக்கும் மேலாக மார்பில் பாய்கின்றன.

இஸ்லாமிய தீவிரவாதத்தை முதலில் கம்யூனிஸ்ட்டுகட்கும் சோஷலிச நாடுகட்கும் எதிராகத் தூண்டிவிட்ட அமெரிக்காவே இன்றைய பேரழிவுக்கு முதலாவது குற்றவாளி என்பதை மட்டும் நினைவூட்டுவது இப்போதைக்குப் போதுமானது.

படிப்பகம்

www.padippakam.com



# வளர்முக நாடுகளின் வனவளங்களை சுரண்டும்

## அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் புதியசதி

அண்மைக்காலமாக வனவளப்பாதுகாப்பு பற்றியும் அதன் நன்மைகள் பற்றியும் மிகவும் காலந்தாழ்த்தி ஆட்சியாளர் சிந்திக்க ஆரம்பித்துள்ளனர். நடைமுறையில் காடுகள் அழிப்பதைத் தடுப்பதற்கு உருப்படியான திட்டங்கள் எதுவும் இல்லாதிருக்கின்றனர்.

இந்தியாவில் சந்தனமரக்கடத்தலுக்கு பெயர்பெற்ற வீரப்பனை கைது செய்யாமல் விட்டுவைத்திருப்பதன் பின்னணி என்ன என்பதை விளங்கிக் கொள்வதில் சங்கடமிருக்காது. வன வளப்பாதுகாப்பிலும் இலஞ்சம் ஊழலுக்கு குறைவில்லை என்பது கசப்பான உண்மை.

உலகெங்கும் காடுகளை அழிப்பதில் அரசாங்கங்களே முதற்குற்றவாளிக ளாவர். இலங்கையில் ஜே.வி.பி. கிளர்ச்சியின் போது காடுகளில் மறைந் திருந்த கிளர்ச்சிக்காரரை அடக்கி யொடுக்குவதற்கு குண்டுகள் பொழியப் பட்டன. காடுகள் வெட்டி அழிக்கப் பட்டன. 1983க்குபின்னர் தமிழ் போராளி களை அடக்கும் எண்ணத்துடன் காடுகளும் மரங்களும் வெட்டப்பட்ட வண்ணம் இருக்கின்றது. அது மட்டு மல்லாது நச்சுக்குண்டுகள் மூலம் மரங்களும், காடுகளும், விலங்குகளும் அழிக்கப்படும் அதேவேளை வனவளப் பாதுகாப்புக்களை புதிய அமைச்சு ஒன்றை ஏற்படுத்தி ஏதோ வனவளப் பாது காப்புக்கு செய்வதாக பாசாங்கு செய்யப் படுகின்றது. காடுகளும் மரங் களும் அழிக்கப்பட்டதன் விளைவாக இன்று மழைவீழ்ச்சி குறைந்து அடிக்கடி வரட்சி யையும் முகம் கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இந்தச் சூழலிலேயே அமெரிக்காவின் பொதுச் சட்டம் 105ஐ பற்றி நாம் விழிப்புடன் இருக்க வேண்டும்.

1998ம் ஆண்டு அமெரிக்கா "உஷ்ண வலைய வனப்பாதுகாப்புச் சட்டம்" ஒன்றை ஏற்படுத்தியிருந்தது. அச்சட்டம் பொதுச்சட்டம் இல. 105 என்றழைப் படுகின்றது.

இந்தச் சட்டத்தின் நோக்கம் என்ன வெனில் வளர்ச்சியடையும் நாடுகளில் உள்ள உஷ்ணவலய காடுகளை பாதுகா த்தலாகும். வளர்ச்சியடையும் நாடுகளில் ஒரு சில நாடுகளைத் தவிர எந்த ஒரு நாடும் தமது நாட்டின் வனங்களைப் பாதுகாக்க உருப்படியான திட்டம் எதனையும் செய்யாதிருக்கும் நிலையில் அமெரிக்கா மிகுந்த "நல்லெண்ணத் துடன்" வளர்ச்சியடையும் நாடுகளின் வனங் களைப் பாதுகாக்க முன்வந் துள்ளது.

இந்தச் சட்டத்தின் அடிப்படையில் இலங்கை அரசாங்கம் அமெரிக்காவுடன் ஒரு உடன்பாட்டிற்கு வந்தால் பிரதான காடுகள் - குறிப்பாக சிங்க ராஜ காடு - தனியார் துறைக்கு பகிர்ந்தளிக்கப்படும் அவையனைத்தும் மறைமுகமான அமெரிக்க கட்டுப்பாட்டின் கீழ் வந்து விடும். இந்தச் சந்தர்ப்பத்தில் ஒரு விடயம் கவனிக்கப்படல் வேண்டும்.

வடக்கு - கிழக்கு இணைந்த சுயாட்சி வழங்கினால் இலங்கையின் நிலப்பரப்பு தமிழர்வசம் வந்துவிடும் எனக் கூப்பாடுபோடுபவர்கள் இலங்கையில் காட்டுவளங்களை அமெரிக்காவிடம் கையளிப்பதை எதிர்க்க மாட்டார்கள் என்று அறுதியிட்டுக் கூறமுடியும்.

இந்தச் சட்டத்தில் உஷ்ண வலய காடுகளிலிருந்து பெறக்கூடிய பல்வேறு வகைப்பட்ட நன்மைகளைக் குறிப்பிடு கிறது. அவையாவன பூமியின் உயிரின வளங்களை பேணுதல், மருந்தாக்க வளங்களை வளர்த்தெடுத்தல், வனத்தில் உள்ள காபனீர் ஒக்சைட்டை குறைப்பதற்கும் அதன் மூலம் உலகம் பூராவும் ஏற்படக்கூடிய காலநிலை மாற்றத்தை தணிக்க உதவுதல் என்பனவாம்.

காடுகளின் வளங்களைப் பாதுகாப் பதற்கு உதவிகள் வழங்கப்பட்ட போதும் உஷ்ணவலய காடுகள் தடையின்றி அழிக்கப்பட்டுவருகிறது. வளர்ச்சியடை யும் நாடுகள் மூலதனம் பற்றாக் குறை காரணமாக தத்தம் நாடுகளின் காடுகளின் பெரும் பகுதியை தளபாடத் தயாரிப்புக்காக அழிப்பதும், விவசாயத் தேவைகளுக்கு அழிப்பதும் தொடர்வ தால் இந்தச்சட்டத்தின் தேவை ஏற்பட்டு ள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சட்டத்தின் பிரகாரம் குறைந்த, நடுத்தர வருமானமுடைய நாடுகள் அமெரிக்காவிடமிருந்து உஷ்ணவலய காடுகளைப் பேணவும், பாதுகாக்கவும் என கடன் பெறலாம். இந்தச் கடனின் ஒரு பகுதியை தத்தம் நணயங்களில் செலுத்த முடியும்.

அமெரிக்க அரசுடன் உடன்படிக்கை செய்தபின் தகுதியுடைய வளர்ச்சி யடையும் நாடு கடனைப் பெற முடியும் அல்லது மூன்றாவது ஒரு அமைப்புக்கு கடனை மாற்ற முடியும். அல்லது கடனை மறுசீரமைப்பு செய்யலாம்.

இந்தச் சட்டத்தின் நுட்பமான வழியானது வளர்ச்சியடையும் நாடுகள் அமெரிக்காவுக்கு, யப்பான் போன்ற ஏனைய கடன் வழங்கும் நாடுகளுக்கு செலுத்த வேண்டிய கடனை வளர்முக நாடுகளின் வனப்பாதுகாப்புக்கு தேவை ப்படும் நிதியீட்டலுக்கு பயன்படுத்த முடியும். இச்சட்டத்தின் பலனைப் பெறுவதற்கு ஒரு வளர்முக நாட்டில் குறைந்தது ஒரு உஷ்ணவலய காடு இருத்தல் வேண்டும் என்பதாகும்.

இங்கு கவனிக்க வேண்டியது யாதெனில் வளர்ச்சியடைந்த நாடுகள் கைத்தொழில் மயமாக்கலுக்கு ஏதுவாக காட்டுவள சக்தியை பயன்படுத்தி உயர்ந்த வாழ்க்கைத் தரத்தை அடைந்துள்ளனர். இந்தப் போக்கில் பவனத்துள் பெருமளவு காபனீர் ஒக்சைட்டை வெளியேற்றிவிட்டன. 150 வருடங்களாக கைத்தொழுலுக்கு மனித வாழ்வுக்குமென வளர்ச்சியடைந்த நாடுகள் காடுகளை அழிந்துள்ளன. இதனை அவர்கள் காலந்தாழ்த்தியே உணர்ந்து கொண்டனர்.

காபனீர் ஒக்சைட்டை எடுத்துக் கொண்டு ஒட்சிசனை வெளியேற்றக் கூடிய நிலையை உருவாக்க பெருமள விலான காடுகளை வருவாக்குவதற்குப் பதிலாக தமது நலனுக்காக இந்த வேலையை வறிய வளர்ச்சியடையும் நாடுகளின் மீது திணிக்கிறார்கள். இதில் கவனிக்க வேண்டியது என்னவெனில் பவனத்தில் உள்ள காபனீரொக்சைட் பக்கவாட்டில் பல ஆயிரம் மைல்கள் தூரத்திற் அப்பால் சென்று இந்தச் சட்டத்தினால் பாதுகாக்கப்படும் உஷ்ண வலய காடுகளினால் உறிஞ்சப்படுமா.

சட்டத்தின் பிரகாரம் உஷ்ணவலய வனப்பாதுகாப்பு நிதியம் ஒன்றும் நிருவாக சபை ஒன்றும் ஏற்படுத்தப்படும். சம்பந்தப்பட்ட நாடு கடனை அன்னிய செலாவணியில் செலுத்துவதற்குப் பதிலாக கடனுக்குரிய வட்டியையும் ஒரு பகுதி முதலையும் நிதியத்தில் வைப்பு செய்தல் வேண்டும். அரசாங்கம் அல்லது அரச சார்பற்ற அமைப்புக்களும் சுய விருப்பத்தினிபேரில் நிதியத்தில் வை செய்யலாம். நாட்டின் சொந்த நா யத்தில் வைப்புச் செய்தபின் நிதியத்தி பணம் அரசாங்கத்தின் சொத்த கருதப்படும். ஆனால் அந்த நிதி செலவு செய்வது நிர்வாக சபை வழிகாட்டலிலேயே இடம்பெறும்.

அரசாங்கம் அமெரிக்க அரசாங் துடன் கலந்தாலேசித்து ஒரு பிஸ்க முகவரை நியமிக்கும். அவர் நிதியத் முகாமைத்துவத்திற்கு பொறுப்பாயிரு துடன் நிதியப் பணத்தின் முதலீட்டிற் பொறுப்பாயிருப்பார். நிதியம் வனப்பா காப்பு நடவடிக்கைகளிலும், தேசத்தி மரங்கள், மிருகங்கள் என்பனவற் எவ்வாறு பாதுகாத்தல், சிறப்பா வ முகாமைத்து அமைப்பை ஏற்படுத்த வனப் பாதுகாப்பு முகாமைத்துவத் உள்ளுர் அமைப்புகளை பயிற்றுவித் என்பனவற்றிக்கு நிதி வழங்குத என்பனவாகும்.

மூன்றாவது அமைப்பு ஒன்று கடனை தான் பெற்றுக்கொண்டு நிதியத்தி திட்டங்களுக்கு உதவி வனப்பா காப்பை பொறுப்பேற்கலாம். அவ் றான உடன் படிக்கையானது சம்பந் பட்ட நாடு, மூன்றாவது அமை அமெரிக்க அரசாங்கம் என்ப வற்றிற்கிடையே பேசி உடன்பாட்டிற் வர வேண்டும்.

(தொடர்ச்சி 9ம் பக்க

# கிரிக்கட் மட்டைகளும் ஊழல் குட்டைகளும்

நாடு தாங்க முடியாத பிரச்சினைகளால் தள்ளாடுகின்றது வடக்கு கிழக்கு யுத்தத்தால் எரிந்து கொண்டிருக்கிறது. உழைக்கின்ற ஒவ்வொரு சதாரண மனிதர்களும் ஒருவேளைச் சாப் பாட்டிற்கே திண்டாட வேண்டியுள்ளது. விலை உயர்வுகள் கட்டண அதிகரிப்புகள், வரிச் சுமைகள் நாளாந்தம் உயர்ந்து செல்கின்றன. இன்றும் பல நூறு பிரச்சினைகளும் நெருக்கங்களும் மக்களின் கழுத்துக்களை நெரித்து விருகின்றன.

ஆனால் இத்தணைக்கும் மத்தியில் கிரிக்கட் விளையாட்டு போதைப் பொருள் பாவனை பரப்பப்படுவது போன்ற மக்கள் மனங்களில் ஏற்றப்பட்டு விட்டது. கிரிக்கட் விளையாட்டுக்கு மக்கள் அடிமையாக்கப்பட்ட நிலைதான் காணப்படுகிறது. இந்த கிரிக்கட் விளையாட்டுப் போதையை மக்களிடம் விற்பதில் அரசாங்கம், ஊடகங்கள், பல்தேசிய கம்பனிகள் என்பன முன் நின்று வருகின்றன.

கிரிக்கட் விளையாட்டு தனிமனித வீர தீரத்தை வெளிப்படுத்தும் ஒரு விளையாட்டாகும். கரப்பந்தாட்டம், உதைப்பந்தாட்டம் போன்ற கூட்டு ஆற்றல் முயற்சிகளை முன்னெடுக்கும் ஒரு விளையாட்டல்ல. அதேவேளை நாட்கணக்கல் விளையாடப்படும் ஒரு விளையாட்டுமாகும். அதனால் வேலை செய்வோர், மாணவர்கள் தத்தமது முயற்சிகளை கைவிட்டு நாள் முழுவதுமான அல்லது இரவு முழுவதுமான விளையாட்டை ரசிக்குமாறு தூண்டப்படுகின்றனர். இப்போது ஒளி ஒலி ஊடகங்களின் முன்னால் குந்தியிருந்து வீண் பொழுது விட்டு இவ்விளையாட்டை பார்த்து ரசிக்கும் நிலை வளர்ந்து காணப் படுகிறது. ஒருமுறை அறிஞர் பேர்ணாட் ஷா "11 முட்டாள்கள் விளையாடப் 11ஆயிரம் முட்டாள்கள் இருந்து பார்க்கிறார்கள்!" எனக் கிரிக்கட் விளையாட்டை கிண்டல் செய்து கொண்டமை குறிப்பிடக் தக்கதாகும்.

இவ்வாறு லட்சம் கணக்கானோர் இவ் விளையாட்டை ரசித்து வெறுவாய் சப்பி கொட்டாவி விட விளையாட்டில் பங்கு பற்றும் வீரர்கள் பல லட்சக் கணக்கில் வரமானமும் சன்மானங்களும் பெற்று லட்சாதிபதிகளாகிக் கொள்கின்றனர். ஒலி ஒளி ஊடகங்களுக்கு விளம்பரங்களால் பெரும் சம்பாத்தியம் கிடைக்கின்றது. பந்தயக் காரர்களுக்கு பணம் வருகிறது. விளையாட்டு வீரர்கள் முன் கூட்டியே ஆட்ட நிர்ணயத்திற்காக பல லட்சங்கள் கையூட்டுப் பெற்று ஊழல் மன்னர்களாகி நிற்கின்றனர். சகல நாடுகளின் கிரிக்கட் கட்டுப்பாட்டுச் சபைகளுமே ஊழல் குட்டைகளா நாறுகிறது.

அடுத்து முக்கிய விடயம் இ விளையாட்டு அடிக்கடி நடாத்தப்படு தாகும். அதற்கு காரணம் இ

தமது அனுசரணை மூலம் பல்தே கம்பனிகள் தத்தமது கைகளில் எடுத்து கொள்கின்றன. ஒரு முறை பெ நிறுவனம் என்றால் அடுத்து கொக்கோ கோலா நிறுவனம் நடாத்துகின்றது. மேலும் கிரிக்கட் விளையாட்டின நாயகர்களாகத் திகழ்பவர்களின் கைகளில் பெப்சி, கொக்கோ கோல வைக் கொடுத்து விளம்பரங்களையும் செய்து கொள்கிறார்கள்.

ஆதலால் விளையாட்டை சமூகநல் நோக்கத்திற்காக அன்றி தமது உலகம தழுவிய வர்த்தக விளம்பரத்திற்கும் பல்தேசிய கம்பனி ஆதிக்கத்திற்கும் பயன்படுத்தி வருவதை இக்கிரிக்கட் மூலம் காணக்கிடக்கிறது.

சாதாரண மக்கள் இக் கிரிக்கட் விளையாட்டின் போது வீரர்களுக் காகவும் நாடுகளுக்காகவும் பந்தயம் பிடிக்கின்ற பரிதாபத்தை மட்டுமின்றி அடிதடி கொலைகளில் இறங்குவதையும் அவதானிக்க முடிகிறது.

இத்தகைய கிரிக்கிட் போதை பரப்பப்படுவதும் அதனை சிறுவர் முதல் வயோதிபர் வரை அதற்கு அடிமைப் படுத்தப்படுவதும் தற்செயலானவை அல்ல. அல்லது விளையாட்டு விருத்தியும் அல்ல. விளையாட்டு அடிப்படையான ஒரு சமூகத் தேவையாகும். ஆனால் அதனைக் கூட முதலாளித்துவம் ஏகாதிபத்தியம் தனது லாப நோக்கிற்கு கீழ்ப்படுத்திக் கொள்கிறது. மக்களைத் திசை திருப்பி வைக்கிறது. உடல் உள வளர்ச்சிகளும் மனிதர்கள் ஒருவரை ஒருவர் மதித்து புரிந்துணர்வு நட்பு கொள்வதற்கும் விளையாட்டு சிறந்த துறையாகும். அதனாலேயே முன்னைய சோஷலிச நாடுகளில் 'நட்புக்கு முதலிடம் போட்டிக்கு இரண்டாம் இடம்' என்ற வரையறை இருந்தது. ஆனால் இன்று போட்டியும் வெற்றியும் பணக் குவிப்பும் என்ற முதலாளித்துவ வரையறையே எங்கும் காணப்படுகிறது.

அத்துடன் போட்டி, காழ்ப்புணர்வு குறுக்குவழி, பணம், பெயர், புகழ் இனப்பாரபட்சம், கீழ்த்தர வக்கிரம் என்பனவே விளையாட்டுகளில் முன்னிலை பெறுகின்றன. இதில் கிரிக்கட் விளையாட்டு முதன்மை பெறுகின்றது. எனவே இது பற்றிய பரந்த அறிவும் முன்னெச்சரிக்கையும் அவசியம்.

# உலகமயமாக்கலை எதிர்த்து இரண்டு லட்சம் மக்களின் எழுச்சி

## ஜேனோவாவில் முதலாவது தியாகி.

உலகமயமாதல் என்பது இன்றைய முதலாளித்து ஏகாதிபத்திய நிகழ்ச்சித் திட்டமாகும். இதன் தலைமைப் பாத்திரத்தை அமெரிக்கா வகிக்கின்றது. உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம், உலக வர்த்தக அமையம், ஆசிய அபிவிருத்தி வங்கி ஆகிய உலக மயமாக்கலுக்கான முகவர் நிறுவனங் களாகும். தகவல் ஊடகங்களைத் தமது கைகளில் வைத்துக் கொண்டு உலக மயமாக்கள் பற்றிய பொய்களையும் மாயைகளையும் பரப்பி வருகிறார்கள் ஏகாதிபத்திய வாதிகள்.

ஆனால் உலக மக்கள் இந்த உலக மயமாக்கலின் பயங்கர விளைவுகளைக் காண ஆரம்பித்துள்ளனர். மேற்கு நாடுகளில் இதற்கெதிரான எதிர்ப்பு நிகழ்வுகள் ஒன்றன் பின் ஒன்றாக வேகத்துடன் நடந்தேறி வருகின்றன.

1999 நவம்பர்-டிசம்பர் மாதத்தில் அமெரிக்காவின் சியட்டில் நகரில் தொடங்கிய மக்களது எதிர்ப்பு எழுச்சி, வாஷிங்டன் டி.சி. சுவிற்சிலாந்து, கனடா, டென்மார்க், ஸ்பெயின் நாடுகளுக்கு ஊடாக இத்தாலிக்கு கடந்த யூலையில் வந்து சேர்ந்துள்ளது. இத்தாலியின் ஜெனோவா நகரில் ஜி. எட்டு செல்வந்த நாடுகளின் உச்சி மாநாட்டை எதிர்த்து சுமார் இரண்டு லட்சம் மக்கள் எதிர்ப்புப் பேரணிகள், ஆர்ப் பாட்டங்கள், மற்றும் வீதி மறியல், பிரச்சாரங்கள் போன்றவற்றைச் செய்திருக் கிறார்கள்.

முன் கூட்டியே இவ் எதிர்ப்பை முறியடிக்க இத்தாலி பொலீஸ் பெரும் எடுப்பில் திட்டம் வகுத்து 20ஆயிரம் பொலிசை ஈடுபடுத்தியது. ஆனால் வெகுஜன எதிர்ப்பின் வேகத்தை அவர்களால் முறியடிக்க முடியவில்லை. ஆதலால் இத்தாலியப் பொலீஸ் தனது பாசிச வெறியாட்டத்தை எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நடாத்திய மக்கள் மீது கட்டவிழ்த்து விட்டது. உலகமய மாக்கலுக்கு எதிராக ஜெனோவாவின் முதலாவது களப்பலியை பொலீஸ் துப்பாக்கி பலிகொண்டது ஒருவர் கொல்லப்பட்டார் பலர் படுகாயங்கள் அடைந்தனர். கைது செய்யப்பட்ட வர்கள் கொடிய சித்திரவதைகளுக்கு ஆளாக்கப்பட்டனர். ஆனால் மக்கள் பின்வாங்கவில்லை.

மேற்படி பொலீஸ் ஒடுக்குமுறையையும் உலகமயமாக்களையும் எதிர்த்து மீண்டும் ரோம் நகரில் ஒரு லட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் ஆர்ப்பாட்டப் பேரணி நடாத்தினர். இது உலகம் பூராவும் ஏகாதிபத்திய எதிர்ப்பு சக்திகளும் மாபெரும் உற்சாகத்தையும் உந்துதலையும் ஏற்படுத்தியுள்ளது.

செப்டம்பர் மாதத்தில் அமெரிக்கத் தலைநகர் வாஷிங்டனில் இடம் பெற உள்ள உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் நடாத்த உள்ள கூட்டங்களுக்கு எவ்வாறு பாதுகாப்பு வழங்குவது என்பதே அமெரிக்கப் பாதுகாப்பு வட்டார ங்களில் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

இப்பொழுது மேற்கு நாடுகளில் வீசி வரும் உலக மயமாக்கலுக்கு எதிரான போராட்டப்புயல் விரைவில் கிழக்கு நோக்கித் திரும்பவே போகிறது. அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் தலைமையிலான உலக மயமாக்கல் மூன்றாம் உலக நாடுகள் மீது திணிக்கப் பட்டு நவகொலனிய மயப்படு த்தப்பட்டு வருகின்றது. இதனையிட்டு அசட்டையீ னமாக இருந்து வந்த மூன்றாம் உலக நாடுகளின் மக்கள் அதன் கொடிய விளைவுகளை அனுப விக்கத் தொடங்கி விட்டார்கள். அதன் மூலம் தமது எதிர்ப்புகளை ஆரம்பித்து போராட்டக் களத்தினுள் பிரவேசிப்பதை யாராலும் தடுக்க முடியாது. இன்றைய மேற்குலக எழுச்சிகள் நிச்சயம் நமது நாடுகளின் மக்களுக்கு முன்னுதாரண மாகவே இருக்கின்றன. அதன் வழியில் போராட்ட எழுச்சிப் பாதையில் செல்வோம்.



www.padippakam.com



# சிங்கள மக்கள் மத்தியிலும் புரட்சிகர இயக்கத்தை கட்டி வளர்க்க பு.ஜ.க. பங்களிப்பை செய்யவேண்டும்.

தோழர் வசந்த திஸாநாயக்க

நுவாக சிங்களமக்கள் மத்தியிலுள்ள சிஸ்ட்டு - லெனினிஸ்ட்டுகள் களின் இயக்கத்தை பாதுகாப்ப ன் சிறுபான்மை மக்கள் மீதான ள தேசியவாத ஒடுக்குமுறையை த்து மக்கள் மத்தியில் பிரசாரம் ்து பெரும்பான்மை சிங்கள யவாதத் திற்கு எதிராக போராடி ளிடமிருந்து சிங்கள மக்களை காப்பதற்காக அதனை தோற் க வேண்டும். ஆனால் இன்றைய _முறையை பார்க்கின்ற போது கள மக்கள் மத்தியிலுள்ள சிஸ்ட்டு லெனினிஸ் டுகளால் மட்டும் கடமையை தனித்து செய்ய யாதிருக்கிறது. அவர்கள் தமிழ் ள் மத்தியில் இருக்கும் மாக்சிஸ்ட்டு னினிஸ்ட்டு களின் ஆதரவையும் வியையும் பெற வேண்டியவர்களாக க்கின்றனர். பெரும்பான்மை தேசிய தத்திற்கும் குறுகிய தேசியவாதத் கும் எதிராக போராடிக்கொண்டி கும் புதிய ஜனநாயக கட்சியின் ாழர்கள் அவ்வுதவியையும். ஆதர யும் சிங்கள மக்கள் மத்தியிலுள்ள க்சிஸ்ட்டு லெனினிஸ்ட்டுகளுக்கு ங்க முடியும். அதன் மூலம் நீண்ட லத்தில் பரந்துபட்ட முழு இலங்கை யும் தழுவிய புரட்சிகர இயக்கத்தை டி வளர்க்கவும். உடனடியாக சிங்கள கள் மத்தியில் புரட்சிகர இயக்கத்தை டிவளர்க்கவும் முடியும்.

வ்வாறு தியேச அமைப்பின் அமைப் ளர் தோழர் வசந்த திசாநாயக்க ட்டன் நகரில் கடந்த யூலை மாதம் டைபெற்ற புதிய ஜனநாயக கட்சியின் வது ஆண்டு விழா கூட்டத்தில் ழ்த்துரையாற்றும்போது தெரிவித்தார் வர் குறிப்பிட்ட சிந்தனைக்குரிய க்கிய விடயங்களை இங்கு நகிறோம்.

றுபான்மை தேசிய இனங்களுக்கு திரான தீவிர பெரும்பான்மை தசியவாதம் இலங்கையின் சந்தர்ப்ப ாத முதலாளித்துவ அரசியல் க்திகளாலும். பெரும்பான்மை தேசிய ாத சக்திகளாலும் கட்டிவளர்க்கப்பட்டு றுவனப்படுத்தப்பட்டுள்ளது. சாதாரண சிங்கள தொழிலாளி விவசாய. அடக்கப் பட்ட மக்களுக்குரியதாக தீவிர பெரும் பான்மை தேசியவாதம் இல்லாவிடினும் அது திட்டமிட்டு வளர்க்கப்பட்டுள்ளது. இதனால் பெரும்பான்மை சிங்கள மக்கள் மத்தியிலும். சிறுபான்மை இன மக்கள் மத்தியிலும் புரட்சிகர இயக்க த்தை கட்டிவளர்ப்பது நடை முறையில் மிகவும் கஸ்டமானதாக இருக்கிறது. இதனால் இனப்பிரச்சினைக்கு ஜனநாயக ரீதியான தீர்வொன்றை வென்றெடுப்பது என்பதும் கடினமாகி யுள்ளது.

சிங்கள பெரும்பான்மை தேசிய வாதத்தின் வளர்ச்சியும் ஒடுக்குமுறையும் அடக்கப்படுகின்ற தமிழ் மக்களிடையே குறுகிய தேசியவாதத்தை வளர்த் துள்ளது. அதன் வளர்ச்சிகட்டத்தில் அடக்கப் படுகின்ற தமிழ் தேசியவாதமும் அடக்குகின்ற பெரும்பான்மை சிங்கள தேசிய வாதமும் ஒன்றின் வளர்ச்சிக்கு மற்றொன்று உதவுவ தாக நடவடிக்கை களை விஸ்தரித் துள்ளன. இதனால் தேசிய இனங்க ளிடையே சந்தேகமும் எதிர்ப் புணர்வும் வளர்ந்து. இவ்வினங் களின் அடக்கப் படுகின்ற தொழி லாளர்கள் விவசாயி களிடையேயும் ஐக்கிய மின்மை ஏற்பட்டுள்ளது.

எல்லா தேசிய இனங்களின் தொழி லாள விவசாயி. ஒடுக்கப்பட்ட மக்களிடையே ஐக்கியம் குறைந்த நிலையிலேயே இலங்கையின் பட்டாளி வர்க்க இயக்கம் பலவீனமாக இருக்கிறது. இதில் மாற்றமேற்பட வேண்டும். சிங்கள பெரும்பான்மை தேசியவாதம். குறுகிய தேசியவாதம் என்பனவற்றின் வளர்ச்சி தடுத்து நிறுத்தப்பட வேண்டும்.

தங்களது தேசிய அபிலாஷைகளுக்காக போராடுகின்ற தமிழ் மக்களுடன் ஒப்பிடுகின்ற போது சிங்கள மக்கள் அவர்களின் ஜனநாயக உாமைகளுக் காகவோ. அவர்கள் மீதான அடக்கு முறைகளுக்கு எதிராகவோ மக்களை அணிதிரட்டி. மக்கள் இயக்கங்களை கட்டிவளர்க்காத நிலையில் மிகவும் பின்தங்கியே இருக்கின்றனர்.

சிங்கள பெரும்பான்மை தேசிய வாதத்தின் வளர்ச்சியும் தமிழ் தீவிரவாத குறுகிய தேசியவாதத்தின் வளர்ச்சியும் வடக்கு கிழக்கில் தமிழ்மக்கள் மத்தியிலும். தெற்கில் சிங்கள மக்கள் மத்தியிலும் பாட்டாளிவர்க்க இயக்கத்தை பின்னோக்கி தள்ளிவிட்டுள்ளன. தமிழ் மக்களுடைய போராட்டம் தனிமைப்படுத்தப்பட்ட குறுகிய தேசியவாதத்திற்குள் வரையறுக்கப்பட்டுள்ளமையால். சிங்கள



மக்கள் மத்தியில் பெரும்பான்மை சிங்கள இனவாத்திற்கு எதிராக உறுதியான மக்கள் இயக்கத்தை கட்டிவளர்ப்பது சிரமமாக இருக்கிறது.

மாக்சிச லெனினிச புரட்சிகர இயக்கத்தினாலேயே அடக்கப்பட்ட வர்க்கத்திற்கு மட்டுமின்றி அடக்கப்பட்ட இனங்களுக்கும் சரியான தலைமையை கொடுக்க முடியும். சிங்கள மக்கள் மத்தியில் அவ்வாறான இயக்க மொன்றின் வளர்ச்சி மிகவும் பலவீனப் படுத்தப்பட்டதாகவே இருக்கின்றது. அவ்வாறான இயக்கமொன்றை மிகவும் ஆரம்பநிலையிலிருந்தே தொடங்க வேண்டியிருக்கிறது. சிங்கள தேசியவாதத்தின் வளர்ச்சியினாலும் அதன் நிறுவனப்படுத்தப்பட்ட நிலையாலும் சிங்கள மக்கள் மத்தியில் அளவு ரீதியிலும் பண்புரீதியிலும் மிகவும் பலவீனப்பட்ட நிலையில் வளர்ச்சியடைய முடியாத நிலையில் அதனுடைய உள்பல வீனங்களினாலும் நெருக்கடிக்குள்ளான நிலையில் இருக்கிறது.

அடக்குகின்ற தேசிய இனத்தின் மத்தியில் இருந்த கம்யூனிஸ்ட்டுகள் அடக்கப்படுகின்ற தேசிய இனங்களி டையே இருந்த கம்யூனிஸ்ட்டுகளுக்கு ஆதரவாகவும் உதவியாகவும் இருந்துள்ளனர் என்பதை சாதகமாக நிறைவேறிய புரட்சிகளின் அனுபவங்களி லிருந்து பெறமுடிகிறது. அதனால் பேரினங்களி டையே சக்திவாய்ந்த கம்யூனிஸ்ட் இயக்கங்கள் இருந்தன என்பதும் அவை சிறுபான்மை தேசிய இனங்களிடையே பலமான கம்யூனிஸ்ட் இயக்கத்தை கட்டி வளர்க்க உதவின என்பதும் புரட்சிகளிலிருந்து பெறப்பட்ட பட்டறிவுகளாகும். இலங்கையின் நிலைமை முற்றிலும் மாறானதாகவே இருக்கிறது. இதனால் தமிழ் மக்கள் மத்தியிலும். மலையகத்தமிழ் மக்கள் மத்தியிலும் வேலைசெய்யும் புதிய ஜனநாயக கட்சி பெரும்பான்மை சிங்கள மக்கள் மத்தியில் புரட்சிகர கம்யூனிஸ்ட் இயக்கத்தை கட்டிவளர்ப்பதற்கு பங்களிப்பு செய்ய வேண்டியதாக இருக்கறது.

தமிழ் மக்களுடைய போராட்டத்திற்கான நியாயத்தை விட சிங்கள பெருந்தேசிய வாத கருத்துக்கள் சிங்கள மக்கள் மத்தியில் மிகவும் ஆழமாக பதிக்கப்பட்டுள்ளன. தமிழ் மக்களின் போராட்டமானது இலங்கை நாட்டை மட்டுமே தமக்கானதாக கொண்டுள்ள சிங்கள மக்களை நாடற்றவர்களாக்கி விடும் என்றும் இலங்கை தமிழ் மக்கள் தமிழீழத்தை வென்றெடுத்து உலகளாவிய தமிழ் இராஜ்ஜியத்தின் பகுதியாக இணைந்துக் கொள்வா என்றும் கருத்துக்கள் பரப்பப்பட்டுள்ளது. தமிழ் மக்களுக்கு தமிழ் நாட்டிலும் ஏனைய நாடுகளிலும் வாழமுடியும் சிங்கள மக்களுக்கு இலங்கையை விட்டால் வேறெதுவும் இல்லை. அதனையும் தமிழ் மக்களின் போராட்டத்தினால் பறிகொடுக்கப் போகிறோம் என்ற கருத்து மிகவும் ஆழமாகப் பதிக்கப்பட்டுள்ளது.

பெரும்பான்மை சிங்கள மக்களின் மேற்படி அச்சமிகுந்த மனோநிலையை மாற்ற வேண்டுமெனின் சிறுபான்மை தேசிய இனங்களிடையே புரட்சிகர இயக்கம் வலுவடைய வேண்டும். அதன் மூலமே சிங்களமக்கள் மத்தியில் நம்பிக்கையை வளர்க்க முடியும். ஏற்கனவே மலையகத் தமிழ் மக்கள் மத்தியில் வேலை செய்கின்ற புதிய ஜனநாயக கட்சி அம் மக்கள் மத்தியில் புரட்சிகர இயக்கத்தை வலுவாக கட்டியமைக்கும் போது சிங்கள மக்கள் மத்தியில் நம்பிக்கையை கட்டிவளர்க்க முடியும். மலையகத்தமிழ் மக்கள் மத்தியில் பெரும்பான்மையோர் தோட்டத் தொழி லாளர்களாக இருப்பதாலும். அவர்களின் சுய நிர்ணய உரிமையை பிரயோகிக்கும் போது. வடக்கு கிழக்கில் தமிழ் மக்கள் தனிநாட்டை அமைக்கக் கூடிய பூகோள நிலைமையை கொண்டிருப்பதுபோன்று மலையகத்தில் அவர்களுக்கென தனிநாடொன்றை அமைக்க முடியாத பூகோளநிலை இருப்பதாலும். அம்மக்கள் தேசியவாதம். முதலாளித்துவம் என்பன வற்றினால் ஈர்க்கப்பட்டிருக்காததாலும் அவர்கள் மத்தியில் புரட்சிகர இயக்கத் தை கட்டிவளர்ப்பதற்கு வாய்ப்புகள் குறைந்து போய்விடவில்லை. அவ் வாறான இயக்கம் பலமாக கட்டிவளர்க் கப்படும் போது சிங்கள பெருந்தேசிய வாதத்தினால். பெருமளவு ஈர்க்கப்பட் டுள்ள சிங்கள மக்கள் மத்தியிலுள்ள தொழிலாளிகள். விவசாயிகள். ஒடுக்கப் பட்ட பிரிவினருக்கு நம்பிக்கை ஊட்ட முடியும்.

இவ்வாறான இயக்கத்தை பலமாக கட்டிவளாக்கும் பணியை புதிய ஜனநாயக கட்சி முன்னெடுக்கும் என்ற அவா என்னிடம் இருக்கிறது. இனவாத தேசியவாத முட்டுக்கட்டைகளுக்கு அப்பால் நாடு தழுவிய புரட்சிகர இயக்கத்தை கட்டிவளர்ப்பதற்கு அப்பணி நிறைவேற்றப்பட வேண்டும்.

### அமெரிக்க....

ம் பக்க தொடர்ச்சி

_லகமயமாக்கலுக்கு எதிரான போராட்டங்களின் உயர்ந்தபட்ச இலக்கு அமெரிக்க ஏகாதிபத்தியமே என்பதால் அரபு நாடுகளினதும், இஸ்லாமிய ாடுகளினதும் மக்கள் அவர்களது போராட்டத்தை உலகமயமாக்கலுக்கு ாதிரான உலக மக்களினது போராட்டங் களுடன் இணைப்பதன் மூலம் அமெரிக்க ஏகாதிபத்திய போர் வெறியிலிருந்து தங்களை பாதுகாத்துக் கொள்ளமுடியும். அதேபோல் அரபு மக்களின் இஸ்லாமிய மக்களின் மீது மேற்கொள்ளும் அமெரிக்கா ஏகாதி பத்திய நடவடிக்கைகளை தடுத்து நிறுத்துவதனூடேதான் அமெரிக்க ஏகாதிபத்தியத்தை பூரணமாக செயலிழக்க செய்ய முடியும் என்பது சகல உலகமக்களும் கணிப்பில் எடுக்க வேண்டும்.

ஏகாதிபத்திய எதிர்ப்பு போராட்டத்தில் இஸ்லாமியர்களும். அராபியர்களும் தனித்து நிற்கவும் முடியாது. தனித்து விடப்படவும் கூடாது.

ஏகாதிபத்திய வெறி என்பது படுபாதமான அழிவுகளுக்கு பொறுப்பாக இருந்து ள்ளது. அதேபோன்று அமெரிக்கா மீதான விமான தற்கொலை தாக்கு தலுக்கு பதிலடி என்ற பேரில் உலக அழிவை ஏற்படுத்துவதற்கும் அமெரிக்கா பின்நிற்காது. அதனால் 'பதிலடி' என்ற பேரிலான அமெரிக்காவின் எந்தவொரு நடவடிக்கையும் தடுத்து நிறுத்தப்பட வேண்டும். அதற்கான பொறுப்பை அமெரிக்க மக்கள் உட்பட சகல உலக மக்களும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

### வளர்முக நாடு....

8ம் பக்க தொடர்ச்சி

சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து கடன் பெறும் போது விதிக்கப்படும் நிபந்தனைகளைப் போலவே இந்த வனப் பாதுகாப்புக் கடனைப் பெறுவதற்கு மூன்று நிபந்தனைகள் உள்ளன - அவையாவன அரசியல் உஸ்ண வலயக்காடு பேரினப் பொருளாதாரம் என்பனவாம்.

அரசியல் நிலையென்பது - "ஜனநாயக" அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கமென்பதாகும். தெரிவு செய்யப்பட்ட அரசாங்கம் ஊழல் மலிந்த. சர்வாதிகாரப் போக்குடையதாயிருந் தாலும் கடனை பெறமுடியும். பயங்கர வாதத்தை ஆதரிக்கப்படாது. "சர்வதேச" அங்கீகாரமுடைய மனித உரிமைகள் உள்ள நாடாக இருத்தல் வேண்டும்.

பேரினப் பொருளாதாரம் எனப்படும் போது சர்வதேச நாணய நிதியத்துடன் கடன் ஏற்பாடுகளை உடையதாயும், முதலீட்டுச் சீர்திருத்தங்களை ஏற்று தாராளமயப் பொருளாதாரத்தை கொண்ட நாடாக இருத்தல் வேண்டும்.

நீரை முகாமைசெய்தல் என்ற பேரில் தனியார். பல்தேசிய கம்பெனிகளிடம் நிர்வாகத்தின் மீதான கட்டுப்பாடு கொடுக்கப்படுகிறது. ஏற்கனவே வளர்ச்சியடைந்து வரும் காடுகளில் நீரை பயன்படுத்துவதில் சிக்கனமும். உரிய முகாமைத்துவம் இல்லாமலிருப் பதாக கூறி உலகவங்கி. சர்வதேச நாணய நிதியம் என்பனவற்றினூடாக நிர்ப்பந்தங்களை கொடுத்து இலவசமாக நீரை அனுபவிக்கும் உரிமையை பறிக்கும் திட்டங்கள் வளர்ச்சியடைந்து வரும் நாடுகளில் நடைமுறைப்படுத்தப் படுகின்றன. நீருக்கு கூடிய வரிகளை விதிப்பது. விலைக்கு நீரை விற்பது போன்ற திட்டங்கள் அறிமுகம் செய்யப் பட்டுள்ளன. அத்திட்டங்களில் ஏகாதி பத்திய. பல்தேசிய கம்பெனிகள் லாபம் சம்பாதிக்கும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. நீர்வளத்தில் அரசுகளுக்கு இருக்கும் ஏகபோக உரிமை பறிக்கப்பட்டு தற்போது அமெரிக்காவின் பிடியில் நாட்டின் வனவளங்களை விட்டுவிட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

• • • • • • • • •



புதிய ஜனநாயக கட்சியின் 23ஆவது வருட நிறைவுக் கூட்டம் அண்மையில் அட்டன் நகரசபை மண்டபத்தில் நடைபெற்றபோது கட்சியின் தேசிய அமைப்பாளர்
இ.தம்பையா தலைமையுரை நிகழ்த்துவதையும். பொதுச் செயலாளர் சி. கா. செந்திவேல். அரசியற்குழு உறுப்பினர் சோ. தேவராஜா. மத்திய குழு உறுப்பினர்கள்
ஜே. சற்குருநாதன். எஸ். பன்னீர்செல்வம் ஆகியோர் உரையாற்றுவதையும். அரசியற்குழு உறுப்பினர் தோழர் சி. நவரத்தினம் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம்.

www.padippakam.com



# அரசியல் வரலாற்றைத் திரித்து கூறும் சி. சு. யோதிலிங்கத்தின் நூல் பற்றி

பக்கச்சார்பற்ற எழுத்து என்று எதுவும் இல்லை. ஆனால் பக்கச்சார்பு இல்லாமல் எழுதுவது பற்றிய பாசாங்கு நிறைய உண்டு. குறிப்பாகப் ஆய்வறிவாளர்கள் எனப்படுகிறவர்கள் நடுவே இந்தவிதமான பக்கச்சார்பற்ற பாவனையை நாம் மிகுதியாகக் கனலாம். தங்களுடைய உண்மையான பக்க சார்பை மூடிமறைப்பதற்காக எல்லாரையும் அனைத்துக் கொண்டு போகிற விதமான ஒரு காட்சியை வழங்குவதற்கு இவர்கள் முற்படுவது உண்டு.இந்தமேற் பூச்சைச் சுரண்டிவிட்டுப்பார்த்தால் அவர்களுடைய உண்மையான பக்கச்சார்புகள் தெளிவாகவே தெரியும். வரலாற்றை ஆராய்கிற போது எந்த நிகழ்வுகளை ஒருவர் முக்கியப்படுத்துகிறார் எவற்றைப் புறக்கணிக்கிறார் என்றும் ஒவ்வொரு நிகழ்வுக்கும் எம் மாதிரி விளக்கங்களைத் தர முயல்கிறார் என்றும் பார்த்தோமானால் இப் பக்கச்சார்பின்மையின் பக்கச் சாய்வுகளை நாம் தெளிவாக அறியலாம்.

மிகவும் பண்பான. கற்றறிந்த பாவனையில் எழுதப்படுகிற நூல்களும் ஆய்வுக் கட்டுரைகளும் ஆற்றப்படுகிற விரிவுரைகளும் பல இடங்களில் மிகவும் விஷமத்தனமான நோக்கங்களை உடையன. பேராசிரியர் கிங்ஸிலிடி சில்வா தன் வரலாற்று ஆய்வுகளில் மட்டுமல்லாமல் அவரால் ஊக்குவிக்கப்பட்டுவந்திருக்கிற ஒரு ஆய்வாளர் பரம்பரை மூலமும் சிங்களப் பேரினவாத நோக்கில் வரலாற்றைத் திரிப்பதிலும் விளக்குவதிலும் கவனம் செலுத்தி வந்திருக்கிறார். என்றாலும் இவர் போன்றோர் கனதியான தகைமை மிக்க ஆய்வறிவாளர்கள் எனப் பலரால் இனம் காணப்படுகிறார்கள் இப்படியே தான் யூ.என்.பி.க்கு அனுசரனையாக இயங்கி வந்த பேராசிரியர் வில்சன் நம்மூர் மார்க்சிஸவாதப் பேராசிரியர் ஒருவர் உட்படப் பலரால் புகழப்பட்டுள்ளார்.

மேற்கூறின விதமான பக்கச்சார்பற்ற ஆய்வறிவுத் தகைமையைப் போற்றுவதன் மூலம் ஆளுக்கு ஆள் வெள்ளையடிக்கிற காரியம் தொடர்ந்து வருகிறது. ஒரு ஆய்வாளர் தன் சமூக நிலைப்பாட்டைப்பற்றி மூடி மறைக்க ஒரு தேவையும் இல்லை. ஏனென்றால் அது எப்படியாவது தன்னை வெளிப்படுத்தியே தீரும். ஒருவருக்கு ஒரு தெளிவான சமூகப்பார்வை இருப்பதால் விடயங்களைப் புறநிலை யதார்த்தமாக நோக்க இயலாது போவதில்லை. ஆய்வுகளின் முனைப்பு ஒரு சமூக இலக்குச் சார்ந்து இருப்பது ஒரு விடயம். ஆனால் அந்த விருப்பை மட்டுமே கருதித் தனக்கு ஏற்பில்லாத விடயங்களைக் கண்டுங் காணாமல் போவதோ போலியான விளக்கங்களைத் தேடுவதோ நல்ல ஆய்வு முறையாகாது. இலங்கையின் குறுகிய தேசியவாத ஆய்வுகளில் இந்தத் தன்மையை நாம் திரும்பத் திரும்பக் காணுகிறோம். சிங்களப் பேரினவாத வரலாற்றுத் திரிபுக்குச் சிறிதும் சளையாத குறுகிய தமிழ்த் தேசிய வாத வரலாற்றுத் திரிபுகள் உள்ளன. இவற்றின் மூலம் இனப்பகை வளர்கிறதே ஒழிய வரலாறு பற்றிய ஒரு ஒழுங்கான பார்வை கிட்டுவதில்லை.

என்பதே பிரித்தானிய அரசியற் கட்சிமுறையை முன்வைத்துத் தான் அறியப்படுகிறது. கட்சி அரசியல் என்பது எப்படி உருவாகியது என்ற வரலாற்றுப் பார்வை இல்லாமலே ஒரு கட்சி முறை. இரு கட்சி முறை, பலகட்சி முறை என்று வாய்ப்பாட்டு முறையில் கட்சி அரசியல் முறையை வகுத்துள்ள யோதிலிங்கத்துக்கு சனநாயகம் என்றால் இந்தப் பாராளுமன்றத் தேர்தல் அரசியலுக்கு உட்பட்டது என்றளவுக்குத் தான் விளங்கியிருக்கிறது.

உலகின் முக்கிய நாடுகளில் கட்சி முறை என்று ஒரு அத்தியாயம். அதில் ஐந்து நாடுகளே குறிப்பிடப்படுகின்றன அமெரிக்காவும் பிரிட்டனும் இரு கட்சி முறையையே பின்பற்றுவதாக எழுதுகிற யோதிலிங்கம் இரண்டு கட்சிகளே பல ஆட்சியோ பல கட்சிகள் ஒருங்கிணைந்து ஆட்சி செய்த நிக்கராகுவா ஜனநாயகம் பற்றியோ அவர் கவனிக்கவில்லை. தமிழ்த் தேசியவாதப் பாரம் பரியத்திற்கு எப்போதுமே ஐரோப்பிய எசமானர்களே வழிகாட்டிகளாக இருந்து வந்துள்ளது இதன் காரணமாக இருக்கலாம்.

இலங்கையின் அரசியற் கட்சிகள் பற்றிய நீண்ட அத்தியாயத்தில் பெரும் பகுதி உசாத்துணை நூல்களிலிருந்து நேரடியாகப் பெறப்பட்டது. அதில் தரப்பட்டுள்ள விவரங்கள் பல வரலாற்று ரீதியாக தவறானவை. இத்தவறுகட்கு உசாத்துணை நூல்களைப் பழி சொல்வது கடினம். மார்க்சிச-லெனினிச வாதிகட்கு மாறான முறையிலேயே தகவல்கள் தொகுக்கப்பட்டிருப்பது கவனிக்க வேண்டிய விடயம்.

## தேசியவாதத்தைத் தூக்கி நிற்பதும் இடதுசாரிகளை மறுப்பதும் அறியாமையா? அல்லது விஷமமா?

சி.அ.யோதிலிங்கம் என்பவர் சமகால அரசியல் பற்றிய தகவல்களை வழங்குகிற முறையில் பார்க்கிற விதம் அவருடைய குறுகிய தேசியவாத அரசியல் வரலாற்றின் ஒரு பிரதிபலிப்பு என்றே தோன்றுகின்றது. விழுந்தும் மிசையில் மண் ஒட்டதா தோரணையில் அரசாங்கத்தின் தயவில் பிழைப்பு நடத்தி இன்று அரசியல் ஓட்டாண்டிகளாகியுள்ள தமிழ் விடுதலை இயக்க காரர்கள் தமது குறுகிய தேசியவாத வீறாப்பையும் மார்க்சிய எதிர்ப்பையும் மட்டும் இறுகப்பிடித்துக் கொண்டு இருக்கிறார்கள். இந்தப் பின்னணியில்தான் யோதிலிங்கத்தின் நூல்களில் தவற விடப்படுகிற விடயங்களை நாம் கவனிக்க வேண்டி இருக்கிறது. சில விடயங்களை அறியாமையா விஷமமா என ஐயுற வேண்டி இருக்கிறது.

'இலங்கையில் அரசியல் கட்சிமுறை' என்ற தலைப்பில் அவர்வெளியிட்டுள்ள நூலில்ல அரசியல்கட்சி என்றால் என்ன காலமாக மாறிமாறி அரசாங்கம் அமைப்பதை இருகட்சிமுறை என்று வருணிக்கிறார். அப்படியானால் யப்பானில் உள்ளது ஒரு கட்சிமுறை ஆகாதா? யப்பானைப் பற்றிய கவனிப்பு அவரது நூலில் இல்லை. உலகில் முக்கியமான மற்ற நாடுகள் இந்தியாவும் பிரான்சும் சோவியத் ஒன்றியமுமாகும். பிரான்சில் அண்மைக்கால மாற்றங்களின் விளைவாக வலதுசாரி-பாராளுமன்ற இடதுசாரி அணிகளாக பிரெஞ்சு அரசியல் மாறியிருப்பதை அவர் அறியார். இந்தியாவின் அரசியற் கட்சியின் தோற்றமும் வளர்ச்சியும் பற்றி அவரது குறிப்புக்கள் அதிகம் பயனுள்ளனவாகத் தெரியவில்லை.

சீனா முக்கியமான நாடாகத் தெரியாமைக்கு அங்கு அவரது கருத்தில் 'ஒருகட்சி' அரசியல் நடப்பது தான் காரணமோ தெரியவில்லை. பல கட்சி ஆட்சியை விட ஜனநாயகமான முறையில் யூலியஸ் நியரேரே தலைமையில் தான்சானியாவில் இருந்த

உதாரணமாக இடதுசாரிக் கட்சிகளின் பிளவு பற்றிய படத்தில் 'பீகிங் சார்பு' கட்சியிலிருந்து பிரிந்து ஜே.வி.பி. தோன்றியதாக காட்டப்பட்டுள்ளது. ஜே.வி.பியின் உருவாக்கத்தில் திரிபுவாதிகளது சோசியத் யூனியனது பங்கு பற்றியும் அறிந்தோர் ஜே.வி.பி.யின் தோற்றுவாய் எது என்று அறிவார்கள். மார்க்சிய லெனினிசத்தை நிராகரித்தே தோன்றிய கட்சி ஜே.வி.பி. ஜே.வி.பிக்குப் பிற இடதுசாரி கட்சிகளுக்கும் இருந்து வந்த வேறுபாட்டை. முக்கியமாக அதன் தொழிலாளி வர்க்க விரோத முனைப்பை யோதிலிங்கம் அறியாததற்கு அவரது தேசியவாத அரசியல் அகராதியில் ஒருவேளை வர்க்க முரண்பாடு என்ற கருத்துக்கே இடமில்லாதது தான் காரணமா?

இடதுசாரிக்கட்சிக் கொள்கைகள் தொடர்பாகப் பேசும்போது பாராளுமன்ற இடதுசாரிகள் பற்றியே பேசப்படுவதும் அவர்களுடைய சந்தர்ப்பவாதத்தை வைத்தே இடதுசாரி அரசியலை விளக்க முயல்வதும் தமிழரசுக்கட்சி தொடக்கி வைத்த பிரசார மரபின் தொடர்ச்சி தவிர வேறில்லை. சீனாவை ஆதரித்தவர்கள்

சண்முகதாசன் தலை[...]
'கட்சியைவிட்டு வெளியேறினா[...]
என்று எழுதுகிற யோதிலிங்கம் [...]
சண் இறுதிவரை இலங்[...]
கம்யூனிஸ்ட் கட்சி என்ற பே[...]
கைவிடாததையும் கட்சியில் [...]
ஏற்பட்ட போது வலிய [...]

### விமர்சனம்[...]

சண்முகதாசன் தலைமையில் [...] இருந்தது என்பதையும் அறிவத[...] அது தொடர்பான உண்மைக[...] திரிபுவாதிகளிடம் தகவல்க[...] கேட்டுப்பெற முடியுமா?

தோழர் சண்முகதாசன் எ[...] இடதுசாரி இயக்க வரலாற்று [...] தான் கிடைக்கவில்லை. தே[...] செந்திவேல் எழுதிய சுய விமர்[...] பாங்கான ஒரே இடதுசாரி இ[...] வரலாற்று நூல் கூட யோதிலி[...] துக்குக் கிடைக்க வில்லையா?

இடதுசாரி இயக்கத்தில் பிளவுக[...] விலாவாரியாக விவரிக்கிற யோதிலி[...] ஏனோ யூ.என்.பி.யிலும் ஸ்ரீ.[...] கட்சியிலும் ஏற்பட்ட பிளவுக[...] விவரங்களை பெருமளவும் தவிர்த்[...] கவனிக்கத்தக்கது. தமிழ்க் கட்சி[...] பற்றிய விவரங்கள் கவனமாகத் த[...] கப்பட்டடதுடன். மனோ' கணே[...] என்பவரது அரசியல் பிரவேசத்துக்[...] தரப்பட்டுள்ள முக்கியத்துவ[...] யோதிலிங்கத்தின் நோக்கங்கள் பற்[...] பலத்த சந்தேகங்கை[...] கிளறிவிடுகின்றன.

இவை எல்லாவற்றையும் இவ[...] முன்னைய நூல்களின் பின்னணி[...] பார்போமானால், யோதிலிங்கத்[...] தவறுகளில் அறியாமை பாதி அரசி[...] நோக்கம் பாதி என்றே தோன்[...] இலங்கையில் இனக் குழு அரசி[...] என்ற நூலில் இலங்கை இந்[...] உறவுகள் என்ற அத்தியாயத்தில் 19[...] 89 காலகட்டம் பற்றிய ஒரு குறிப்பு[...] இல்லாமை பற்றிய பகுதிய[...] தரப்பட்டுள்ள குறிப்புக்களில் தமி[...] தேசியவாதிகளது நிலைப்பாடுகள் ப[...] ஒரு விமர்சனமும் இல்லாதது அவ்வள[...] அதிசயம் இல்லை. அணிந்துரைய[...] நூலாசிரியரது தகைமை பற்[...] பேராசிரியர் சிவத்தம்பி வழங்கியுள[...] புகழ்மாலைகள் சிலரை அதிசயிக்[...] வைக்கலாம். பேராசிரியர் சிவத்தம்பியி[...] முன்னுரைகளை வாசித்தவர்க[...] அதிசயப்பட மாட்டார்கள்.

யோதிலிங்கம் போன்றோரது வரலாற்ற[...] திரிப்புக்கள் கால வெள்ளத்தி[...] அள்ளுண்டு போகும். ஆனால் குறுகி[...] காலத்தில் தக்க தலைமையின்றி[...] திணறும் தமிழ் மக்களை குழுப்புவதற்[...] தமது பங்கை ஆற்றும் என்பதாலே[...] அவரது நூலை விமர்சிப்பது இங்[...] அவசியமாகியது.

# என்று தெளியும் அந்த மயக்கம் ?

புதிய பூமி சுழற்சி 41ல் இடம் பெற்ற பரமார்த்த குரு............! பற்றிய குறிப்பைப் படித்தும் எனக்குள் சில கருத்துக்கள் எழுந்தன. அவற்றையும் புதிய பூமி வாசகர்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

கல்வி அறிவுச் சிந்தனைத் தெளிவுடைய மக்கள் இனமாகக் கருதப்படுபவர்கள் தமிழர்கள். ஆனால் அண்மைக்கால போர் அனர்த்தங்களாலும் இடப்பெயர்வுகளாலும் குழப்பகரமாக அரசியல் சூழ்நிலை மாற்றங்களாலும் எம் மக்களிடம் பலவிதமான குழப்பநிலைகள் மயக்கங்கள் தோன்றிவிட்டன.

அவற்றில் மிக முக்கியமானது ஆன்மீகம் சார்ந்த மயக்கநிலை சமய நெறி கொள்கை கோட்பாடு போன்ற தேர்வுகளுக்கு அப்பால் எதையும் யாரையும் வணங்கத் தயாராகுதல் ஆகும் (இது பற்றிய சமயச் சர்ச்சைகள் இலக்கிய சர்ச்சைகள் ஒரு புறம் நடந்த வண்ணமே உள்ளன) இருந்தாலும் இவற்றுக்கு இடையால் ஒரு தனிமனித வழிப்பாட்டு முறைமை வலிந்து முன்னெடுக்கப் படுவதை காணமுடிகிறது.

அதாவது காவியைக் கன்டால் வணங்கும் ஒரு மரபு நம்மிடையே பரவி வருகின்றது. கொழும்பு போன்ற நகரப் பகுதிகளில் சிங்கள மக்களுடன் இரண்டறக் கலந்து வாழ்வதாலோ என்னமோ இந்த ஆடையின் உள்ளே இருப்பவர் யார் என்பதை எந்த விதத்திலும் ஆராயாமல் அவர்களிடம் ஆசி வேண்டி நிற்கும் நிலைமை வளர்கிறது. அது இப்போது சில "முற்போக்கு" சிந்தனை உள்ள இலக்கிய வாதிகளிடமும் பரவி வருவதுதான் வேதனையான விடயம்.

நம்மவர்களுக்கு பிரமச்சாரிக்கும் துறவிக்கும் வேறுபாடு தெரியாமல் போய்விட்டது. இளங்கோ அடிகள் துறவி சுவாமி விபுலானந்தர் துறவி இன்னும் இன்று சமயத் தொண்டிற்காக சமூக சேவைக்காக தம் சுக போகங்களைத் துறந்து துறவறப்பணிகளை மேற்கொள்ளும் உண்மையான துறவிகளும் உள்ளனர்.

ஆனால் நெற்றி நிறைய திருநீறு பூசி சிறுகுடுமி முடித்து (விரிப்பதை விட முடிதல் பொருத்தம்) செம்மஞ்சள் நிற அங்கி உடுத்த ஸ்ரீ மான் பரமாத்மா அடிகளையும் சமாசனம் செய்பவர்கள் நம்மிடையே உள்ளனர் .இதுதான் அந்த மயக்க நிலை. பிரமச்சாரியம் வேறு துறவறம் வேறு என்பது பலருக்குத் தெரிவதில்லை.

நவீன இலக்கியம் என்று எதை பெரிதாக எழுதிக் கிழிக்கிறார்கள்? எல்லாம் கம்பராமாயணத்திலும் மகாபாரதத்திலும் திருக்குறளிலும் சொல்லியாகி விட்டதே என்று கேட்கின்ற ஸ்ரீ மான் பரமாத்த குரு அவர்களை நவீன இலக்கிய நூல் வெளியீடுகளிலும் வேறு சிலர் அன்புடன் ஆராதிக்கின்றனர். ஆசி வழங்குவதற்கும் ஒரு தகுதி வேண்டாமோ?

ஆனாலும் பரமார்த்த குரு வானவர் மிக அடக்கமாகப் பேசுகின்றார். இலக்கியத்துடன் சம்பந்தப்பட்டவாகள் அதாவது இலக்கியம் படைப்பவர்கள் விமர்சிப்பவர்கள் படிப்பவர்கள் மட்டுமல்ல இலக்கிய நூல்களை எழுதுபவர்கள் அதாவது இலக்கியம் படைப்பவர்கள். விமர்சிப்பவர்கள், படிப்பவர்கள் மட்டுமல்ல இலக்கிய நூல்களை விற்பனை செய்பவர்களும் மனிதருள் மேம்பட்டவர்களே! என்றார்.ஆனால் இலக்கிய திருட்டுச் செய்பவர்களும் இதனுள் அடஙகுவார்களா என்பது கடவுளுக்கு தான் வெளிச்சம். வாழ்க பரமார்த்த குருவும். சீடர்களும் அவர்தம் தனிமனித வழிபாட்டுப் பாரம்பரியமும்.

இந்திர சித்தன்.

# வேதாளம் சொல்லாத கதை

தனது முயற்சியில் சற்றும் தளராத வரான விக்கிரமபாகு கருணாரத்தினா பாதாளமுண்ட வேதாளத்தைத் தன் வசமாக்கும் காரியம் அடுத்தடுத்துத் தோல்வி கண்ட பின்னும் மீண்டும் முயல்வானாகி இம்முறை சாயங் கழுவுண்ட செஞ்சட்டை இரட்டையரின் உதவியுடனும் நீல துவசாம்பியையுடைய கருணையுடனும் வேதாளத்தை மடக்கியே தீருவது என்ற திட்டத்துடன் முருக்க மரத்திலிருந்து வேதாளத்தை இறக்கித் தோள்மீது சுமந்து கொண்டு போன வேளை வேதாளமானது. அவனை நோக்கி. ஏளனத்துடன், "இந்தப் பாதாளமுண்டத்தின் சிம்மாசனத்தைப் பிடிப்பதற்காக நீ இவ்வளவு அல்லற் படுகிறாயே. இந்த ஆசையால் தம் அறிவும் கெட்டு மதிப்பும் கெட்டு மானமும் கெட்டு மக்களால் வெறுக்கப்பட்ட உன் முன்னோரின் கதை உனக்குத் தெரியாது போலும். தெரிந்தாலும் என்ன. உனக்கு நாற்காலி மீதான ஆசை பெரிது. நீயும் அவர்போல் படித்த முட்டாளாகாமல் நான் காக்க முடியாது. ஏனென்றால் நீ ஏற்கனவே முட்டாளாக்கப்பட்டு விட்டாய். போகட்டும் உனக்குப் பயண அலுப்புத் தெரியாமலிருக்க ஒரு கதை சொல்கிறேன் கேள்" என்றது.

"தன் கட்சியின் நிகரில்லாத தலைவனாகத் தன்னை மாற்றும் ஆசையால் தன்னுடைய தோழர்கள் ஒவ்வொருவரையும் பகைத்து இனவாத. நச்சுக் கொடிக்காரனை தில்லுமுல்லன் என்பானை நம்பி நல்ல நண்பர்களைப் பகைத்த பிறகு. சிலநாள் புலிவேடம் பூண்டு பச்சைக் கொடிக்காரருடனும் சரசமாடி. தன்வசம் இருந்ததெல்லாம் இழந்து தான் முன்பு எள்ளி நகையாடிய நீலக்கொடி நங்கையின் தயவை நாடிச் சென்ற ஒரு அரசியல் விதூஷகனின் கதையைச் சொல்கிறேன். கவனமாகக் கேள்" என்று வேதாளம் சொல்லி முடிக்க முன்னமே "ஏய்! ஸ்டாலினிஸ்ற வேதாளமே. என்னையா நக்கலடிக்கிறாய்? என்று விக்கிரமபாகு கருணாரத்தினா உரத்து ஏசியதால் அவன் மௌனம் கலையவே கதையைச் சொல்லிமுடிக்க இயலாத கவலையுடன் வேதாளம் பழையபடி முருக்கமரம் ஏறியது.

படிப்பகம்

www.padippakam.com



# தரலந்நவர்களின் குரல்

## பிரசன்ன விதானகேயின் "புரஹந்த ஹகலுவர"

## "முழு நிலவில் காரிருள்"

க்குனர் பிரசன்ன விதானகேயின் யாள்கையில் உருவான 'புரஹந்த லுவர' (முழு நிலவில்'காரிருள்) ற திரைப்படம் வெளிநாடுகளில் ரயிடப்பட்டு பல சர்வதேசப் களைப் பெற்றுள்ளது. எனினும் 'ஜனநாயக நாடான' இலங்கையில் வரை திரையிட அனுமதிக்கப்பட லை.

படத்தை இலங்கையில் ரயிடுவதன் மூலம் "சமாதானத்துக் ன யுத்தத்தில்" ஈடுபட்டுள்ள ாணுவத்தினரின் மனோநிலை க்கப்பட்டுவிடும் என்ற சாட்டில், ங்கையின் நீல அரசாங்கத்தில் மச்சராகவுள்ள பச்சை நிறத்தவரான அமுனுகம இப்படத்தை தடை ந்திருந்தார்.

ாழும்பில் இப்படத்தை வீடியோவில் க்கும் வாய்ப்பு 'சலன சித்திரத்தின்' ாட்டில் கிடைத்தது. அப்போது தமிழ் கள ஆர்வலர்கள் இணைந்திருந்து த்தனர். எனினும் திரையில் பார்க்கும் டர்பூடகக் கலையை வீடியோவில் த்து அக்கலையின் உன்னதங்களை பவிக்க இயலாவிடினும் அப்படம் கள மக்களுக்குச் சொல்லும் ப்தியின் யதார்த்தச் சித்திரிப்பைப் ந்து கொள்ள முடிந்ததுடன், செய்தி சிங்கள யுத்தப் க்களினால் சகித்துக் கொள்ளப் ங்கூடியதல்ல என்பதையும் உணர ந்தது. எனவே இப் படத்தைத் ரயில் காணும் வாய்ப்புக் டயாதென்றே நம்பிக்கையிழந்திருந்த போன்ற சினிமா ரசிகர்களுக்கு, ன்மையில் உயர்நீதி மன்றம் வழங்கிய பின் மூலம் இப்படத்துக்கான தடை பபட்டு இலங்கையிலும் இலங்கை ய சர்வதேசப் பரிசுகள் பெற்ற ஒரு ரப்படம் திரையிடப்படுமென்ற வல். இலங்கையில் இன்னும் நீதி த்து விடவில்லையென்ற க்கையைத் தராவிடினும் பீனிக்ஸ் வைகள் சாம்பல் மேட்டிலிருந்து ன்றிப் பறக்கத் தொடங்குவது ர்க்கவியலா நியதி என்பது ஒன்றும் சயமல்லவே.

வெறும் ஒரு படம் அல்ல. ருக்குமான ஒரு பாடமாகும். இந் டின் சிங்கள மக்களின் சிந்தனைக் ய சீரிய கல்வி, இப்படத்தின் ப்தியாக அமைந்துள்ளது.

கத்துக்கு காரணம் ஆசை என்பது ளமத புத்தரின் போதனையாகும். நத்துக்குக் காரணம் வறுமை என்பது ன்னவின் போதனையாகும். எமது கள சமூகத்தைப் பீடித்துள்ள மையின் கொடுமையை இப்படம் திரித்துள்ளது.

படத்தின் கதை இதுதான். ளர்ணமி தினமொன்றில் போர் னயில் இறந்த இராணுவ வீரனின் சைக்கு அவனது உடல்வைத்த தப்பேழை அவனது கிராமத்தின் றை யடிப்பாதையூடாக ாணுவத்தினரால் தூக்கி ப்படுவதுடன் படம் ஆரம்பமாகிறது. விராணுவ வீரனின் தந்தை ன்பார்வையற்ற வயோதிபரா வார். று இரு பெண்பிள்ளைகளும் ர்ளனர். இராணுவத்தில் இறந்தவர் நக்கு அரசு இழப்பீடாக நிதி உதவுவது டமுறையாகும். எனினும் இறந்த னின் கடிதமொன்று போர்க் களத்தி ந்து அவனது தந்தைக்கு டக்கிறது. அதில் தான் விரைவில் டுக்கு வருவதாக குறிப்பிட்டுள்ளார். வைக்கப்பட்டு திறக்க முடியாத ப்பெட்டியில் தனது இறந்த மகனின் லைக் காணாமலேயே புதைக்கப் டுள்ளதால் தந்தை தனது மகன் ிருடனேயே இருப்பதாக நம்புகிறார். ால்மகனின் மரணத்துக்காக கப்படும் படிவத்தைக் கையொப்ப ்த் தரும்படி கிராமசேவகர் யைக் கேட்கிறார். அவரது பெண் பிள்ளைகளும் அதனை வலியுறுத்து கின்றனர். அக்காசைப் பெற்றால் குறையாகவுள்ள வீட்டைத் திருத்தி முடிக்காலாமென்றும், தமது குடும்பக் கடன்களைத் தீர்க்கலாமென்றும் பெண் பிள்ளைகள் தந்தையுடம் விவாதித்து விட்டு, தந்தை பிடிவாதமாயிருப்பதால் மரணச்சடங்குக்கு வந்த பிள்ளைகள் அவருடன் கொழுவிக்கொண்டு வெளியேறிவிடுகின்றனர். தந்தை மறு பௌர்ணமி தினத்தில் தனது மகன் இன்னும் உயிருடன் இருக்கிறான் என்ற நம்பிக்கையில் பிணம் புதைக்கப்பட்ட இடத்தை தேடி ஓடுகிறார். குழியைத் தோண்டுகிறார். ஊரெல்லாம் திரள்கிறது தடுக்க முயற்சிக்கின்றனர். கிழவன் விடாமல்

**எச். என். ஜி. பெரமுனகம**
**தமிழில்:**
**ஈழத்துத் தேவன் பூதனார்**

வேகமாகத் தோண்டிப் பெட்டியை உடைத்துத் திறக்கின்றார். என்னே அதிசயம்! அங்கு மகனின் சிதைந்த உடலின் எப்பாகமும் கிடைக்கவில்லை. பதிலாக பெரிய கல்லொன்றும் வாழைக்குத்தியும் காணப்படுகிறது. எல்லோரின் முகங்களிலும் ஏக்கங் கலந்த வியப்புடன் இராணுவ வீரன் எங்கே என்ற கேள்வியுடன் படம் நிறைவுபெறுகிறது.

இத்திரைப்படம் இச்சிறிய அழகிய நாட்டைப் பீடித்துள்ள யுத்தநோயைக் குணப்படுத்த முயற்சித்துள்ளது.

ஆயுத வியாபாரிகளின் துப்பாக்கிச் சந்தைக் காடாக ஆகிக் கொண்டிருக் கும் இத்தீவு பேரினவாத நிலமானிய உள்ளூர் யுத்தப் பிரபுக்களுடன் ஏகாதிபத்திய வல்லூறுகளும் கூட்டுச் சேர்ந்து நடாத்தும் உள்நாட்டு யுத்தத்தில் வறுமையில் வாடும் சாதாரண சிங்களப் பிரஜைகளான இளைஞர்களே பலியிடப்படுகின்றனர். 'பலி' என்ற கவிதையில் இராணுவ வீரர்கள் பற்றி "இளைய பரம்பரையின் இனியதசை கொண்டுவா பட்டம் பதவி பல அதிகாரப் பணமுடையயோர் பெற்றெடுத்த பிள்ளைகளின் ஊளைத்தசை வேண்டாம் சிங்களத்தின் ஏழைகளின் சிறுவர்களைக் கொண்டுவா என" இப்படம் வெளிப்படுத்துகிறது.

இவ்யுத்தத்தில் பலியிடப்படும் மண்ணின் மைந்தர்களான சிங்கள இளைஞர்கள் மாவீரர்களா? அல்லது யுத்தப் பிரபுக்களின் கூலிகளா என்ற வினாவை எழுப்புகிறது இப்படம்.

இப்படத்தில் வரண்ட நிலமும், காய்ந்த மனிதர்களும். மண் குடிசைகளும் கொண்ட இந்நாட்டின் சாதாரண சிங்களப் பொது மக்கள் வாழும் எல்லைக்கிராமம் களமாய் காட்சிப் படுத்தப்பட்டுள்ளது.

வாகனமே செல்ல முடியாத ஒற்றையடிப் பாதையும், இறந்த வீரனின் மரணச் சடங்கின்போது வேயப்பட்ட குடிசை மழைக்கு நின்று பிடிக்க முடியாதபடி ஒழுகுவதும். அந்த ஒழுக்கு அந்த மூடப்பட்ட சவப் பெட்டியில் சொட்டுச் சொட்டாக விழுவதும் ஓவியக் காட்சிச் சித்திரிப்பாய படிமச்செட்டாக அமைவதும் நயத்துக்குரியது.

வரட்சியும் விரக்தியும் மிக்க விவசாயக் கிராமங்களில் தண்ணீர்ப் பஞ்சம். வறுமையின் கொடுமை, தற்கொலைகள் அதிகம். எனவே யுத்தமே அவர்களின் வறுமையின் நிவாரணியாகிறது. குடும்பத்தில் ஒருவன் குடும்பத்தின் உயிர்ப்புக்காகத் தன்னைத் தியாகம் செய்து இராணுவத்தில் இணைகின்றான்.

எலும்புந்தோலுமாய் வாழும் கிராம மக்கள் மத்தியில் வாட்டசாட்டமாய் கொழுத்துப் பிரளும் பிரபுக்கள் ஒரு சிலரும் இருக்கத்தான் செய்கின்றனர். மண்ணுக்காக மடிந்த இராணுவ வீரனின் தியாக நினைவாக பஸ்தரிப்பு நிலையம் அமைப்பது என்ற அற்புத ஆலோசனையை வழங்கி மகிழ்கிறார் அவ்வூரில் வாழும் பௌத்த துறவி, அவர் வரவும் அவர் சூழ் அணி வருவதும், இராணுவ வீரனின் வீட்டில் அமர்வதும் வீரனின் தந்தையின் வேதனையும் வெகு கச்சிதமாகக் காட்சிப்படுத்தப் பட்டுள்ளன. பௌத்த துறவியே யுத்தப்பிரபுவாக தோன்றி மறைகிறார். தந்தையாக வரும் ஜோ.அபேவிக்கிரம நடிப்புக்கு இலக்கணமாகிறார்.

"இரணியன் எங்கள் இரட்சகன் அல்ல வென்று/பிரகலாதன் அங்கே பிரச்சாரம் செய்ய / நரசிம்மன் அவதாரம்/ நானெடுப்பேன் நாளை" என்ற குரலுக்கு பதில் குரல் தருகின்றார் பிரசன்ன விதானகே! தமிழ் மக்களின் சுய நிர்ணயப் போராட்டத்தின் மறுமுனையில் சிங்கள மக்கள் யுத்த எதிர்ப்பு போராட்டப் பணியை முன்னெடு ப்பார்களா என்பதே இப்படம் எழுப்பும் வினாவாகும்.

தமிழ் மக்கள் மீது எம்மினத்தின் பேரால் நடாத்தப்படும் அட்டூழியங்களுக்கு சிங்கள மக்கள் பாவவிமோசனம் செய்ய வேண்டும். இப்பாவத்தைக் கழுவு வதற்கு கதிர்காமத் தெய்யோவில் ஓடும் மாணிக்க கங்கையில் மூழ்கினால் மட்டும் போதாது. தமிழர்களின் தெய்வமான கந்தனையே எமது தெய்வமாக்கிய பாவ த்துக்கு விமோசனம் காண்பது கடினம்.

எனவேதான் சிங்கள மக்கள் ஒவ்வொரு வரிடமும் இந்நாட்டின் சுதந்திரத்தையும் இறைமையையும் இக்கணத்திலேனும் காக்கவேண்டு மென கடைசிநேர ஞானோதயம் வருவது உண்மை யெனில் தீக்குளிக்க வேண்டாம். இப்படத்தை ஒருமுறை பார்த்தாலே போதுமே!

## மக்களுக்காகப் போராடியவர்

## மறைந்த தோழர் சிவராசா

கம்யூனிஸ்ட் சிவராசா என்றால் வடமாராட்சியிலும் வடபுலத்திலும் நெல்லியடிசிவராசாவையே குறித்து நிக்கும்.அந்தளவிற்கு வடபுலத்து மாக்சிச லெனினிச இயக்கத்தில் தோழர் சிவராசா குறிப்பிடத்தக்க இடத்தில் இருந்து வந்தார்.

1960பதுகளில் எழுந்த மாக்சிச லெனினிச மாஓசேதுங் சிந்தனை வழிகாட்டிய புரட்சிகர எழுச்சியில் தோழர் சிவராசா இளைஞனாகப் பங்கு கொண்டு கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்து தீவிரமாகச் செயல்பட்டார். மிக எளிமையும் துணிவும் அர்ப்பணிப்பும் கொண்ட இளம் கம்யூனிஸ்டுகளில் தோழர் சிவராசாவும் ஒருவராவார். பல்வேறு போராட்டங்களில் முன்னின்றவர். பல தழும்புகள் பெற்றவர். மக்களோடும் இளைஞர்களோடும் மிக நெருக்கமாக இருந்து அவர்களின் அனுபவங்களை மாக்சிச லெனினிசக் கோட்பாட்டோடு இணைந்து செயல் படுவதில் வல்லவராக இருந்தார்.

அக்கால கட்டத்தில் கட்சி முன்னெடுத்த சகல போராட்டங்களிலும் பங்கு கொண்டு முன்னணிப் போராளிகளில் ஒருவராக இருந்து வந்தார். அரசாங்க எதிர்ப்பு போராட்டங்களிலும் தீண்டாமைக்கு எதிரான இயக்கத்திலும் அவர் வகித்த நிலை என்றும் நினைவில் நிற்கத் தக்கவையாகும்.

ஒரு அர்ப்பணிப்பு மிக்க அரசியல் போராளியாக இருந்த அதேவேளை சிறந்த கலைஞனாகவும் சிவராசா திகழ்ந்தார். மிருதங்கம் வாசிப்பதில், பாடுவதில் அவர் திறமை பெற்றிருந்தார். 1969ல் அம்பலத்தாடிகளினால் மேடையேற்றப்பட்டு ஐம்பது தடவைக்கு மேல் கிராமங்கள் தோறும் போராட்ட உணர்வோடு நடிக்கப்பட்டதுதான் 'கந்தன் கருணை' நாடகம். இந்நாடகம் வடபகுதியில் பின்பற்றப்பட்டு வந்த சாதியம்-தீண்டாமையை அம்பலப்படுத்தி அன்றைய புரட்சிகர வெகுஜனப் போராட்டங்களுக்கு வலுச் சேர்ந்து நின்றது.

இந்நாடகத்தில் பிரதான பாத்திரமான நாரதர் வேடம் ஏற்று தனது நடிப்பாலும், பாடல்களுக்கு தனது குரல் வளத்தாலும் மக்கள் மத்தியில் போராட்ட உணர்வை உக்கிரப்படுத்திநின்றார். யாழ்ப்பாணத்து சாதிய ஒடுக்கு முறையின் அம்சங்களையும் அதன் கேவலமான நடைமுறைகளையும் தேவலோகம் சென்று முருகனுக்கு விளங்கச் செய்து முருகனுடன் போராட்டம் நடைபெற்ற மாவிட்டபுரக் கோவிலுக்கு அழைத்து வந்து நேரில் காட்டுகிறார் நாரதர். அத்துடன் போராடும் மக்களுக்கு முருகனின் ஆயுதமான வேலைக் கொடுக்கச் செய்து போராட்டத்திற்கு பலமும் உற்சாகமும் கொடுத்து மக்கள் போராட்டமே ஒரே வழி என்பதை முருகனது வாயால் சொல்ல வைக்கிறார் நாரதர்.

இத்தகைய நாரதர் வேடத்தில் சிவராசாவின் நடிப்பும் தெளிவான பாடல்களும் வரிக்கு வரி மக்களை உயர்ந்த கட்ட உணர்வுகளுக்கு ஆளாக்கி வைத்தது. இவ்வாறு கந்தன் கருணை நாடகத்தின் வெற்றிக்கு தோழர் சிவராசாவின் பங்களிப்பு மிகவும் முக்கியமாக விளங்கியது மிகைப்படுத்தப்பட்ட ஒன்றல்ல.

தோழர் சிவராசா கட்சி அணியிலும் அதன் வெகுஜன இயக்கங்களிலும் தேசிய கலை இலக்கியப் பேரவை, அம்பலத்தாடிகள் அமைப்புகளிலும் பொறுப்புக்கள் பல ஏற்று செயல்பட்டு வந்தவர். மாக்சிசம் லெனினிசம் மாஓசேதுங் சிந்தனையை, எவ்வளவிற்கு முயன்றாலும் ஏகாதிபத்தியவாதி களாலோ அன்றி பிற்போக்கு சக்திகளாலோ அழிக்க முடியாது என்ற திடமான நம்பிக்கையுடன் இறுதிவரை வாழ்ந்தவர் தோழர் சிவராசா. அவரது இறப்பு மாக்சிச லெனினிச இயக்கத்திற்கு பெரும் இழப்பாகும். தோழர் சிவராசா மறைவுக்கு புதியபூமி தனது புரட்சிகர அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கின்றது.

## குட்டையும் கொட்டமும்

குட்டையைக் குளப்பி விட்டு
கூத்தாடிக் கூட்டம் ஒன்று
வட்டமாய் எழுந்து நின்று
வெறும் வாயைச் சப்பிக்கொண்டு
மூட்டை பார் மீனைப் பார்
முரல் விலாங்கின் வாலைப் பார்
அட்டை பார் தேரை பாரென்று
அவரவராய்க் குதிப்பதைப் பார்

பாராளு மன்ற மெனும்
பழஞ்சோற்றுப் பானையினை
ஆராய வக்கு மற்று
அலைகின்றார் வெறுங்கையால்!
பூராயம் பேசுகின்றார்
புதுக் காட்சிக் கனவுகளாய்
ஊராரின் வாழ்வுறந்து
உடுக் கடித்துப் பாடுகின்றார்!

பாடுபடும் மக்களுக்கு
பகல் இரவுப் பட்டினிகள்
நாடுநகர் விட்டவர்கள்
நடுத் தெருவில் வாழ்க்கையிலும்
மூடப் பெரும் பொய் தேடி
முழு நாட்டைப் புதைத்து விட்டு
கேடு கெட்ட தார் மீகம்
குரல் அடைக்கப் பேசுகின்றார்!

பேசுகின்ற ஜாலங்களில்
பொதி சுமக்கும் ஊடகங்கள்
தூசு பட்ட வாக்குகளை
துலை யளவும் எண்ணாது
மூசு மூசு என் றோடி
முழு இரவும் ஆராய்ந்து
கூசலற்றுப் போக்கிழந்து
குழப்பி விட்டார்
குட்டையைத்தான்!

குட்டையிலே பெருக்கெடுத்த
குறைபாட்டு நாற்ற மெல்லாம்
செட்டை கட்டி செடிலெடுத்து
சொறி டெங்கு போராகி
கொட்டமிட்டு உயிர்குடிக்க
களம் கேட்டு ஓடுது பார்!
ஓட்டை யிலே பெரும் ஓட்டை
உருக்குலைந்த நாயகமே!

- பட்டணத்தடிகள் -

## சூழலியல் சிறப்பு

1. நிலம் நீர்நற் காற்றுவெளி நெருப்பென்ப சேர்ந்து
நலமாய் அமைந்த துலகு.
2. உண்ண உடுத்திடவும் உறைய நிழல் தந்திடவும்
மண்ணிதனின் மாண்பென்பர் காண்.
3. நீருண்டுலகம் நெடுநாள் நிலைத்திருக்கும் ஊரிணைந்து
மரங்காக்குங் கால்.
4. உயிர்க்கெல்லாம் மூச்சாய் உலகத்துயிர் காக்கும்
பயிர்க்கெலாம் காற்றே முதல்.
5. காலப் பெருவெளியில் காணுமொரு பண்பாட்டின்
பாலமென ஆகும் வெளி.
6. அடுப்பாய் ஊண் செய்வதுவும் அழிப்பார்கை மீதாய்க்
கெடுப்பதூஉம் எல்லாம் கனல்.
7. ஐம்பூதம் ஒன்றாய் அகப்படுத்தி இணையுமெனின்
வெம்புதலில் மண்ணில் உயிர்க்கு.
8. காற்று வெளி நிலம் நீர் தீ சேர்ந்த வையகத்தை
மாற்றியொரு புதுவுலகம் காண்.
9. மூலதனம் என்னும் பேராசை போய் ஒழியின்
ஞானம் பொலிவு பெறும்.
10. ஆள்சேர் அணியுண்டேல் வையத்தே அறம் வெல்ல
பாழ்பட்டுப் போவதுவோ மண்.

- பொய்யில் புலவன்

படிப்பகம்

www.padippakam.com



புதிய பூமி

புදිය භූමි

Puthiya Poomi

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA.

சுற்று 08 செப்டெம்பர்/ஒக்டோபர் 2001 பக்கம் 12 விலை 10/= சுழற்சி 41

# சிஹல உறுமயவின் இனவெறி

வீதிகளின் அருகில் கைகோர்த்து நின்று யுத்த எதிர்ப்பியக்கத்தில் ஈடுபட்டிருந்தவர்களை 'சிஹல உறுமய' காரர்கள் தாக்கியுள்ளனர். யுத்த எதிர்ப்பியக்கத்தின் மீது தாக்குதல் நடத்தப்பட்டது இதுவே முதற்தடவை ஆகும். இவ்விடத்தில் யுத்த எதிர்ப்பியக்கம் பலவீனப்பட்ட நிலையில் இருப்பது மட்டுமல்ல தீவிர சிங்கள பேரினவாத பாசிஸ்ட்டுகள் வளர்ச்சியடைந்துள்ளனர் என்பதையும் காட்டுகிறது. அவர்களின் வளர்ச்சி எண்ணிக்கையில் தெரியாவிட்டாலும் அவர்களின் நடவடிக்கைகள் தாக்குதல் நடத்தும் அளவிற்கு வளர்ச்சியடைந்துள்ளது.

ஸ்ரீ லங்கா பெஸ்ட் என்ற பெயரில் இலங்கையில் வர்த்தக சமூகம் யுத்தத்திற்கு எதிரான அமைப் பொன்றை அமைத்து அதன் முதல் நடவடிக்கையாக செப்டெம்பர் 19ஆம் திகதி நண்பகல் வீதிகளில் கைகோர்த்து நின்று யுத்தத்திற்கு எதிர்ப்பை தெரிவிக்கும் இயக்கமொன்றை முன் னெடுத்தது. தனியார் நிறுவனங்களில வேலை செய்யும் அதிகமானோர் அவ்வியக்கத்தில் கலந்துகொண்டனர்.

அந்த இயக்கத்திற்கு எதிராக 'சிஹல உருமய' ஆர்ப்பாட்டமொன்றை நடத்த முயற்சி செய்தது. அதில் விரல்விட்டு எண்ணக்கூடியவர்களே கலந்து கொண்டனர். ஆனால் அவர்கள் ஸ்ரீ லங்கா பெஸ்ட் இயக்கத்தில் கைகோர்த்து போராட்டத்தில் கலந்து கொண்டவர்களை தாக்கியுள்ளனர். அவாகளை தூசித்துள்ளனர் அத்தாக்கு தலால் சிலர் காயமடைந்துள்ளனர். தாக்கியவர்கள் வெறிபிடித்தவர்களாக நடந்துகொண்டதுடன் அதில் ஒரு பிக்கு அடாவடித்தனமாக நடந்து கொண்டுள்ளார்.

இதற்கு எதிராக பொலிசார் எவ்வித நடவடிக்கையையும் எடுக்கவில்லை. தாக்குதல் ஈடுபட்டவர்களை கைது செய்யவும் இல்லை. தாக்குதலில் நடத்திய வர்களை நியாயப்படுத்தும் வகையில் சிஹல உறுமயவின் தலைவர் அறிக்கையொன்றை விட்டுள்ளனர். அவரின் கட்சியை சேர்ந்தவர்கள் கைகோர்த்து நிற்கும் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்களை தாக்கியதாக ஒப்புக் கொண்டுள்ளார் சமாதானத்தை வேண்டிநிற்போர் புலிகளுக்கு ஆதரவானவர்களாகையால் ஆத்திர மடைந்த சிஹல உறுமய இளைஞர்கள் அவர்களை தாக்கியதாக கூறியுள்ளார்.

இது மிகவும் மோசமான ஒரு செயல் என்பதுடன் தீவிர சிங்கள பௌத்த பாசிசத்தின் அநாகரீகமான வளர்ச்சியாக இதனை நோக்க முடியும். யுத்தத்தை எதிர்த்து கைகோர்ந்து நிற்கும் இயக்கத்தை நடத்தியவர்கள் இந்நாட்டின் மிகவும் பிரபலமான சிங்கள முதலாளிகளாவர். அவர்களை தாக்கியவர்களுக்கு எதிராக எவ்வித சட்ட நடவடிக்கையும் எடுக்கப்படாமை பேரினவாதத்திடம் சட்டமும் ஒழுங்கும் முற்றாக சரணடைந்துவிட்டுள்ளதை தெளிவாக எடுத்துக்காட்டுகிறது.

யுத்தத்தை நிறுத்தி இனப்பிரச்சினை சமாதான வழியில் தீர்வு காணாவிடின் பொருளா தார நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியாது என்ற அடிப்படையிலும் அரசியல்வாதிகள் இப்பிரச்சினையை தீர்ப்பதற்கு அர்த்தமுள்ள நடவடிக்கை களை எடுப்பதாக இல்லை என்பதை எடுத்துக்காட்டியும், அரசியல் கட்சி சார்பற்ற இயக்கத்தையே இலங்கையின் வியாபார சமூகம் முன்னெடுத்திருந்தது அதன் நியாயத் தன்மையை சகித்துக் கொள்ள முடியாத பேரினவெறி பிடித்தவர்களே கைகோர்த்து நிற்கும் இயக்கத்தின் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இலங்கையின் வியாபார சமூகத்தின் நோக்கம், எதிர்பார்ப்பு என்பன அவர்களின் வர்க்க நலன்களுக்கு வரையறுக்கப்பட்டதாக இருப்பினும் யுத்தத்திற்கு எதிரான பேரினவாதத்திற்கு எதிராக நிற்கவேண்டிய அவர்களின் நிர்ப்பந்தம் கவனத்தில் கொள்ளத் தக்கது. பேரினவாதத்திற்கு யுத்தத்திற்கும் எதிரான வியாபார சமூகத்தின் நகர்வு நிதானத்துடன் அணுகப்பட வேண்டியதெனினும் நம்பிக்கையுடன் அனுகவேண்டியதாகவே தெரிகிறது.

அதேவேளை யுத்த எதிர்ப்பு இயக்கங்கள் பலவாறாக பலமுறைகளில் முன்னெடுக்கப்படுவது தவிர்க்க முடியாதெனினும் யுத்த எதிர்ப்பு இயக்கங்களிடையே புரிந்துணர்வும், ஒருமைப்பாடும், ஐக்கியமும் பொதுநோக்கமும் இருக்க வேண்டியது அவசியம். யுத்த எதிர்ப்பு இயக்கத்தின் அவசியம் கருதி அது பலமாக முன்னெடுக்கப்பட வேண்டும். கட்சி அரசியல் நலன்களுக்கு அப்பால் விரிவாக முன்னெடுக்கப் படும்போது சிஹல உறுமய போன்ற சில்லறைகளுக்கு இடமே இராது.

# ஆறுமுகனுக்கு கிடைத்த மரியாதை

ஜே.வி.பியின் வரையறையையும் மீறிய நிலையில் ஆறுமுகன் தொண்டமான் அமைச்சராக பதவி ஏற்றுக்கொண்டார். அவரின் பதவி ஏற்புடன் அமைச்சரவை அமைச்சர்களின் எண்ணிக்கை 21 ஆகிறது. ஜே.வி.பியின் வரையறையானது ஒரு அமைச்சர் பதவியை இராஜினாம செய்தால்தான் அவ்வரையறையை அரசாங்கத்தால் காப்பாற்றிக் கொள்ள முடியம்.

ஆறுமுகன் தொண்டமான் பதவி ஏற்க சென்றவேளை ஜனாதிபதி மாளிகையில் எவருமே இல்லாத நிலையில் திரும்பி வந்தார் என்பதை ஒரு சாதாரண செய்தியாக கொள்ள முடியாது. ஏற்கனவே அமைச்சரவையில் அங்கம் வகித்த ஒருவர் என்ற ரீதியில் அவருக்கு மீண்டும் பதவி ஏற்பதற்கு நேரம் ஒதுக்கிக் கொடுக்கப்பட்டது. அந்நேரத்தில் மாற்றம் செய்யப்பட்டுள்ளதா என்று அறிவிக்கப்படவில்லை. அவர் வெளிநாட்டிலிருந்து திரும் பியவுடன் அந்நேரத்திற்கு அவரின் சகாக்களுடன் பதவி ஏற்க சென்றுள்ளார்.

அவ்வேளை அவர் அமைச்சர் பதவியை ஏற்பதற்கான எவ்வித ஏற்பாடும் செய்யப்பட்டிருக்கவில்லை. அவ்வேற்பாடு ஏன் செய்யப்படவில்லை என்றோ அவ்வேளை பதவி ஏற்பு நடைபெறாது என்றோ அவருக்கு நேரத்துடன் அறிவிக்கப்படவில்லை. அந்நேரத்தில் அவ்விடத்தில் வைத்துக்கூட பதவி ஏற்பு நடைபெறாது என்று உடனடியாக அவருக்கு அறிவிக்கப்படவில்லை. [...]
சில மணிநேரம் அங்கு காத்தி[...]
வேண்டியிருந்தது. மறுநாள் பதவ[...]
ஏற்றுக்கொண்டாலும் கூட [...]
ஏற்பட்ட முறையற்ற சம்பவம் [...]
அமைச்சர் என்றரீதியிலும், மலை[...]
தமிழ் மக்களின் பிரதிநிதி எ[...]
வகையிலும் அவர் அவமதிக்கப்பட்ட[...]
பரவலாக மக்கள் பேசிக்கொள்கிறா[...]

ஆறுமுகன் தொண்டமான் [...]
ஏற்பதுடன் அமைச்சர்க[...]
எண்ணிக்கை 20துக்கு மேல் கூடி[...]
என்பது பற்றி யோசித்த அரசா[...]
ஜனாதிபதி அதுபற்றி அவரு[...]
அறிவிக்க வேண்டும் எ[...]
சம்பிராயத்தை கடைப்பிடிக்கவில்ல[...]

சௌமியமூர்த்தி தொண்டமானு[...]
பிறகுவந்த இ.தொ.கா. தலைமை[...]
அஷ்ரப்பிற்கு பிறகு வந்த முஸ்[...]
காங்கிரஸ் தலைமையும் தரமான[...]
யாக இல்லையொன்று ஜனாத[...]
சந்திரிகா கூறியிருந்ததாக ஏற்கன[...]
செய்திகள் வெளிவந்திருந்தன. அத[...]
தான் ஆறுமுகன் தொண்டமானு[...]
சம்பிரதாய பூர்வமான அறிவிப்பு செ[...]
படவில்லையோ தெரியாது.

ஜே.வி.பி. முட்டுக்கொடுத்துள்ள பொ[...]
ஜன ஐக்கிய முன்னணி நன்நடத்[...]
அரசாங்கத்தில் சிறுபான்மை தே[...]
இனங்களின் எம்.பீக்களுக்கு கிடை[...]
மரியாதை அவ்வளவுதான் என்[...]
யோசிக்க தோன்றுகிறது.

# நீரும், மின்னும் இல்லாத[...]
## அவலம் நீடிக்கும் அபாய[...]

தற்போது மின்சாரவெட்டு நீடிக்கப்பட்டுக் கொண்டுபோகிறது. தற்போது எட்டு மணித்தியாலங்கள் வரை மின்சாரம் துண்டிக்கப்படுகிறது. நாட்டின் நீர்த் தேக்கங்களில் போதிய நீர் இல்லாதபடியால் போதியளவு மின்சாரத்தை உற்பத்தி செய்ய முடியவில்லை என்று கூறப்படுகிறது. மழை பெய்யாததால் நீர்த்தெக்கங்களில் நீரில்லை என்று கூறப்படுகிறது. இயற்கையாக பார்த்தால் நாடெங்கும் வரட்சியாக இருக்கிறது. மழை இல்லை நீர் இல்லை.

இதனால் நாட்டின் உற்பத்தித் துறைகளும். தொழிற்துறைகளும் பாதிக்கப்பட்டு நட்டமேற்படுகிறது மக்கள் பொருளாதார ரீதியாகவும் பாதிக்கப்பட்கின்றனர். மின்சாரமும் நீரும் இல்லாது சுகாதார ரீதியாகவும் மின்சார மில்லாத, குறிப்பாக மாணவர்களின் படிப்பு பாதிக்கப்படுகிறது.

இதற்கொல்லாம் அரசாங்கமே பொறுப்பெடுக்க வேண்டும் என்றால் அது எப்படி நியாயமாகும் என்று சிலர் கேட்கிறார்கள். வரட்சியால் நீர் இல்லாது போனால் அரசாங்கத்தால் என்ன செய்ய முடியும் என்று கேட்கிறார்கள்.

ஒரு நாட்டு மக்களின் ஆகக்குறைந்த அடிப்படை தேவைகளை நிறைவேற்ற வேண்டியது அம்மக்களின் அரசின் பொறுப்பாகும். எமது நாடு வரண்ட நாடன்று ஆதலால் மக்களின், வாழ்க்கை முறை, குடியிருப்பு என்பன வரட்சியை கருத்தில் கொண்டதாக இல்லை.

ஆனால் எமது நாட்டில் ஏற்பட்டுள்ள வரட்சி பற்றி அரசு முன்னறிந்திருக்க வேண்டும். அதனை எதிர்கொள்வதற்கு ஏற்ற மாற்றுத்திட்டங்கள் இருந்திருக்க வேண்டும். மழை பெய்யாதபடியால் மின்சாரப் பாவனை கட்டுப்படுத்த வேண்டியநிலை முன்பும் பலமுறை ஏற்பட்டிருந்தது. தற்போது அம்பாந்தோட்டை மாவட்டத்தில் ஏற்பட்டுள்ளது போன்று மக்களுக்கு குடிக்க நீர் இல்லாமல் பே[...]
சந்தர்ப்பங்கள் பல இருந்தன.

சூழலை மாசுப்படுத்தி மக்[...]
வாழ்க்கையை நாசப்படுத்தும் அலை[...]
திட்டங்களை வெளிநாட்டுக் கம்[...]
களின் உதவியுடன் இலங்கை அர[...]
சுங்கள் முன்னெடுக்க இருந்த[...]
மக்களின் எதிர்ப்பினால் அத்திட்டங்[...]
கைவிடப்பட்டன. அவற்றை முன்[...]
டுத்திருந்தால் மின்சாரத்திற்கு தட்[...]
பாடு ஏற்படாமல் இருந்திருக்கும் எ[...]
அரசாங்கம் கூறுகிறது. அதன[...]
'அனல்மின் திட்டங்களை' எதிர்ப்பி[...]
முன்னெடுப்பதற்காக திட்டமிட்டு [...]
சாரத்தை வெட்டி மக்களை அரசாங்[...]
வதைப்பதாக மக்கள் பரவலாக பே[...]
கொள்கின்றனர்.

மின்சார சபையில் ஏற்பட்டுள்ள [...]
கோடிரூபா நட்டத்தை ஈடுசெய்வ[...]
காக மின்சாரம் வெட்டப்படுவதாக சி[...]
கருத்து தெரிவிக்கின்றனர். நீர்த்தேக்[...]
களில் அதிகளவு நீரை தேக்[...]
வைத்திருக்கும்போது அவை புலிகள[...]
தாக்கப்பட்டால் பேரழிவு ஏற்ப[...]
என்பதால் போதியளவு நீரை அரசாங்[...]
தேக்கி வைக்கவில்லை. அதனாலே[...]
தற்போதைய கால நிலைக்கு முகம்கொ[...]
டுத்து மின்சார விநியோகத்தை உ[...]
செய்ய முடிய வில்லை என்றும் சி[...]
கூறுகின்றனர்.

இக்கருத்துக்களில் உண்மைத்தன்[...]
ஒரு புறமிருக்க மக்களின் அடிப்ப[...]
தேவைகளாகியுள்ள, நீர், மின்சா[...]
போன்றவற்றின் சீரான விநியோகத்[...]
உறுதிசெய்வதில் இலங்கையி[...]
அரசாங்கங்களுக்கு உரிய திட்டமில்[...]
என்பது தோலுரித்துக்காட்டப்படுகிற[...]
இதில் கூட எமது நாட்டின் குறிப்பா[...]
சூழ்நிலைகளை கருத்தில் கொள்ளலா[...]
வெளிநாட்டுக் கம்பெனிகளினது [...]
உலகவங்கி போன்ற நிறுவனங்க[...]
னதும் 'ஆணையை' பெற்று இயங்[...]
னால் பிரச்சினைகளும், சிக்கல்கள[...]
ஏற்படாதிருக்குமா.?

எமது நாட்டு சூழ்நிலைகளுக்கு ஏற்[...]
பல சிறியஅளவிலான நிர்த்தேக்க[...]
களினூடே மக்களின் நீர்த்தேவை[...]
யையும், மின்சாரத் தேவையைய[...]
எவ்வித இடையூறுமின்றி பூர்த்தி செய்[...]
முடியும் என்பது எமது விஞ்ஞானிகளி[...]
முடிவு. அவர்களுக்கு இடம் விடு[...]
வகையிலான ஆட்சிமுறை இல்லாத[...]
குறை.

தற்போதைய நிலையில் நீருமன்[...]
மின்சாரமுமின்றி மக்களும், குழந்[...]
களும் நாளாந்தம் படுகின்ற வேதனை[...]
பொருளாதாரத்தில் ஏற்பட்டுள்ள ச[...]
என்பவற்றுக் கெல்லாம் ஆட்சியாளர்[...]
பதில் சொல்லியே ஆக வேண்டும்.

# அமெரிக்காவின் தாக்குதலால் தீவிரவாதத்தை ஒழிக்க முடியாது

அமெரிக்க உலகவர்த்தக நிலையத்தின் மீதும் பாதுகாப்பு அமைச்சு கட்டிடமான பெண்டகன் மீதும் நடத்தப்பட்ட விமானத் தற்கொலைத் தாக்குதல் அமெரிக்காவின் உலகமக்கள் விரோத. ஏகாதிபத்திய கொள்கைகளுக்கும் நடைமுறைகளுக்கும் எதிராக நடத்தப் பட்டதாகவே கொள்ளப்பட வேண்டும். அதுவே சரியான புரிகையாக இருக்க முடியும். அமெரிக்க அரசு அதன் உலகமக்கள் விரோத ஏகாதிபத்திய கொள்கைகளை கைவிடுவதன் மூலமே இத்தகைய தாக்குதல்களிலிருந்து அமெரிக்க நாட்டையும், அமெரிக்க அப்பாவி மக்களையும் பாதுகாத்துக் கொள்ள முடியும். இத்தாக்குதல்களுக்கு எதிராக பதிலடிக் கொடுப்பாக கூறிக் கொண்டு யுத்தத்தை முன்னெடுப்பது என்பது அமெரிக்காவிற்கு வெளியி லுள்ள அப்பாவி மக்களை அழிப்பதாகவே முடியும். அமெரிக்காவிற்குள் மட்டுமன்றி அமெரிக்காவிற்கு வெளியிலும் மக்கள் அப்பாவிகளாகவே இருக்கின்றனர். அமெரிக்காவிற்கு வெளியில் அப்பாவி மக்களை கொன்று குவிக்கவும் யுத்தத்தை அமெரிக்கா முன்னெடுக்கு மாயின் அமெரிக்காவிற்குள் உள்ள அப்பாவி மக்கள் தொடர்ந்து பலியாவதைத் தடுக்க முடியாது. ஒஸாமா பின்லேடனை தீர்த்துக்கட்டிவிட்டால் அமெரிக்காவுக்கு எதிரான தீவிரவாத த்தை ஒழித்துக்கட்டிவிடலாம் என்று அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் தலைவர் புஷ் நம்புவது என்பது பிரபாகரனை தீர்த்துக்கட்டிவிட்டால் தமிழ் தீவிரவாத த்தை ஒழித்துவிடலாம் என்று இலங்கையின் சிங்கள பேரினவாதிகள் நம்புவது போன்று சிறுபிள்ளைத் தனமானது. அமெரிக்க அரசு உலக மக்களுக்கு எதிரான அதன் ஏகாதிபத்திய அரசியல். பொருளாதார, இராணுவ கொள்கைகயையும் நடைமுறைகளையும் கையுதிர்க்கும் நிலையிலேயே அமெரிக்காவுக்கு எதிரான தீவிரவாதம் தணியமுடியும்.

இவ்வாறு அமெரிக்கா மீது நடத்தப்பட்ட விமானத் தற்கொலைத் தாக்குதல்கள் குறித்து புதிய ஜனநாயக கட்சியின் அரசியல் குழுவின் சார்பில் அதன் தேசிய அமைப்பாளர் இ. தம்பையா விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ் வறிக்கையில் மேலும்

### ஏகாதிபத்தியமே உலகமக்களின் முதல் எதிரி

தெரிவிக்கப்பட்டுள்ளதாவது :

சோவியத் யூனியனின் வீழ்ச்சிக்கு முக்கிய காரணமாக இருந்தது மட்டுமன்றி அதற்கு முன்பும், பின்பும் உலக நாடுகளின் சுந்திரம், இறைமை என்பவற்றை அமெரிக்கா மதித்து நடந்து கொள்ளவில்லை. சுதந்திரம் போராட்டங்களையும், விடுதலைப் போராட்டங்களையும் அங்கீகரிக்காது நசுக்கும் நடவடிக்கைகளையே எடுத்து வந்துள்ளது. யப்பானின் ஹிரோசிமாவில் நடத்திய அணுகுண்டுத் தாக்குதல், வியட்நாமில் நடத்திய இனப்படுகொலை, வளைகுடா யுத்தத்திலும் கோசோவாவிலும் ஏற்படுத்திய அழிவுகள் என்பன அமெரிக்காவின் உலகமக்கள் விரோத இராணுவ நடவடிக்கைகளுக்கு சில உதாரணங்களாகும். உலக மக்களின் தேசிய. பண்பாட்டு, மத அபிலாஷைகளை மதிக்கவில்லை அவற்றுக்கு மாறாகவே் நடந்து கொண்டது. இதன் விளைவாக உலக மக்களின் எதிர்ப்பும் அமெரிக்கா மீது குவிந்திருக்கிறது. இவற்றை வெளிக் காட்டும் வகையில் பல போராட்டங்கள் தோடர்ந்து நடந்துகொண்டிருக்கின்றன.

எண்ணெய் வளங்களை கொண்டுள்ள இஸ்லாமிய, அராபிய நாடுகளில் அமெரிக்கா அதன் ஆதிக்கத்தை நிலைநாட்டுவதற்காக 'இஸ்லாமிய அடிப்படை வாதத்திற்கு' எதிராகச் செயற்படுவதாக பிரசாரம் செய்து வருகிறது. சாட்சியங்கள் எதுவுமில்லாத போதும் அண்மையில் நடத்துப்பட்ட தாக்குதலைக்கூட இஸ்லாமிய அடிப்படை வாதிகளால் மேற்கொள்ளப்பட்டதாகவே அமெரிக்க ஏகாதிபத்தியம் காட்ட முயற்சிக்கிறது. இது உண்மையை மறைத்து அதனது ஏகாதிபத்திய நோக்கத்தை தொடர்ந்து முன்னெடுப்பதற்கான அடிப்படையைக் கொண்டதாகும். அமெரிக்க ஏகாதிபத்தியம் அதனது பாதிப்பைப் போலியாக சரிப்படுத்திக் கொள்ள முயற்சித்தாலும் அதனால் அமெரிக்க நாட்டிற்கும். அமெரிக்க மக்களுக்கும் மட்டுமன்றி உலக நாடுகளுக்கும், மக்களுக்கும் அழிவே மிஞ்சும். இறுதியில் அமெரிக்க ஏகாதிபத்தியம் என்பது கடதாசிப் புலிகள் என்பது நிருபிக்கப்படும் சூழ்நிலையே ஏற்படும்.

எனவே தாக்குதல்களுக்கு எதிராக யுத்தம் புரியப்போவதாக அமெரிக்க ஏகாதிபத்திய தலைவர் புஷ் விடுத்துள்ள பிரகடனம் விவேகமற்றது. அவரின் பிரகடனத்தை நடைமுறைபடுத்த விடாது தடுக்க உலகமக்கள் அனைவருடனும் அமெரிக்க மக்களும் ஒன்றிணைந்து செயற்பட முன்வர வேண்டும். அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்குத் துணைபோகும். நடவடிக்கைகளை ஏணைய நாடுகள் கைவிட வேண்டும். இஸ்லாமிய நாடுகளும் மக்களும் உட்பட ஏனைய நாடுகளும், மக்களும் பொறுப்புடனும் நிதானத்துடனும் அவர்களின் ஏகாதிபத்திய எதிர்ப்பு நடவடிக்கை களை முன்னெடுக்க வேண்டியவர்களாக இருக்கின்றனர்.

தேசிய விடுதலைப் போராட்டங்களும், தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டங்கும் ஏகாதிபத்திய எதிர்ப்பு நிலைப்பாட்டை கைவிட்டு முன்னேற முடியாது என்பது உணரப் பட வேண்டும்.

அவ்வாறான சூழ்நிலையிலேயே அமெரிக்க அரசு அதன் ஏகாதிபத்திய கொள்கைகளையும், நடைமுறைகளையும் கையுதிர்க்கும் நிலை ஏற்பட முடியும்.

வெளியிடுபவர் : இ. தம்பையா இல. 47, 3ம் மாடி, கொழும்பு சென்றல் சுப்பர் மார்க்கட், கொழும்பு 11. அச்சுப்பதிப்பு யு.கே. பிரின்டஸ் 91, விவேகானந்கா மேடு, கொழும்பு 13.

படிப்பகம்